Regd No. 2514. Swadesamitran Illustrated Weekly

SANITARY FITTINGS



பர்ன் வெண்ணிற சலவைக்கல் சானிட்டரி பிட்டிங்குகள். இதைப்போன்ற மற்ற போர்ஸிலின் அல்லது களிமண் தயாரிப்புகளைக் காட்டிலும் உறுதியுள்ளவைகளாதலால் நீடித்த காலம் ஆரோக்கியமாய் உழைக்கும்.

அழகான அமைப்பு, அற்புத தோற்றம். இவை சுலபமாக உடையாது, வெடிக்காது. சுலபமாக சுத்தம் செய்யலாம். இந்தியாவில், இந்திய ஊழியர்களைக்கொண்டு, இந்திய மூலதனத்தைக் கொண்டு தயாரிக்கப்படுவது. மிதமான விலை. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சாமான்களின் ரகத்திற்கு இணையானது.

விவரமான புத்தகம் கேட்போருக்கு இலவசமாக அனுப்பப்படும்.

BURN & CO., LTD.

ESTABLISHED 1781

12, MISSION ROW, CALCUTTA.

WORKS AT RANIGANJ AND JUBBULPORE

SAVE FOR VICTORY
BRITISH WAR SAVINGS MOVEMENT
ASK YOUR BANK

பர்ன் & கம்பெனி லிமிடெட்,

ஸ்தாபிதம்: 1781

12, மிஷன்ரோ, கல்கத்தா.

தொழிற்சாலை: - ராணிகஞ்சு & ஜபல்பூர்.

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:—

பம்பாய் கம்பெனி லிமிடெட், த. பெ. நே. 109, மதராஸ்.

Coffee

Ours for Quality

GANESH & Co

36, THAMBU CHETTY ST., MADRAS

வீ.எச்.ஆர் பெருங்காயம்

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல்கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்; ''சந்திரிகை'' எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone: 21343.

மதராஸ் டி. சி. என். கோல்டன் மெட்டல் ஜ்வல்லரி மார்ட்

பலவித அழகிய வளையல்கள்

அசல் தங்க வளையல்களைவிட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல. கறுக்காது.

2-வருஷம் உத்திரவாதம். மிகவும் அழகாக இருக்கும்.

பெரிய சைஸ் 2'' அகலமும், அதற்கு மேற்பட்டதும் ஜதை	ரூ.	3	12	0
மத்திய சைஸ் $1\frac{3}{4}$'' முதல் 2''க்குள் ஜதை	ரூ.	3	2	0
குழந்தை சைஸ் $1\frac{3}{4}$க்கு உட்பட்டது ஜதை	ரூ.	2	8	0

வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதை வரை அணா 8.

எமது கேட்லாக் இனாம்.

டி. சி. நாகலிங்கப்பா & கோ.,

280, வால்டாக்ஸ் ரோடு :: பார்க் டவுன் :: மதராஸ்.

டோங்ரே பாலாமிருதம்

பலஹீனமான குழந்தைகளுக்கு

விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

Printed and Published by T. S. Visvanatha Iyer B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras, Editor, C. R. Srinivasan

சுதேசமித்திரன்

Vol. 14 No 8 28-3-43 வாரப்பதிப்பு Price 2 Annas

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு 28 - 3 - '43

விவசாயிகளுக்குக் குறுந்தடி!

'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது' என்ற கோஷம் சுபிட்சம் என்று நினைத்த நாட்களிலேயே வானமளாவி நின்றதுண்டு. இப்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் வறட்சைக்கோ கங்குகரையில்லை. பாரத தேசத்தின் முதுகெலும்பு என்று வழங்கும் விவசாயிகள் இன்றுள்ள நிலைமையைச் சுபிட்சமென்று யாராவது சொன்னால் ஒன்று மூளைக்கோளாருக இருக்க வேண்டும்; அல்லது உண்மை நிலையை உணராமல் கற்பனை உலகில் சஞ்சரிப்பதாக இருக்க வேண்டும்.

வேண்டுமானால் சென்னை சர்க்கார் சென்ற வாரத்தில் வெளியிட்ட வரவு செலவுத் திட்டத்தைப் பாருங்கள்!

1943-44ம் வருஷத்தில் சென்னை சர்க்கார் ரூ. 2,105.74 லட்சம் வருமானம் கிடைக்குமென்று எதிர்பார்க்கிருர்கள். வருமானத்துக்கு உகந்தவாறு மனம் போனபடியெல்லாம் செலவினங்கள் உயர்ந்து நிற்கின்றன. ஜனங்களின் பிரதிநிதிகள் உள்ள சபையில் இதுபோன்ற செலவினங்கள் அங்கீகாரம் பெறுமா? என்று கேட்டால் அவர்கள்தான் இப்போது இல்லையே! யார் தடுக்கமுடியும்? என்பது போலிருக்கிறது செலவினங்களில் காணப்படும் எண்கள்! அப்படியே அபாரமாகச் செலவுகள்தான் இருக்கின்றனவென்று வைத்துக் கொண்டாலும் அவற்றிற்காக ஆகும் தொகைதான் எவ்வளவு? ரூபாய் 2057.49 லட்சந்தான்! இதிலிருந்து உபரியாக 48.25 கிடைக்கிறது. இந்த உபரியை எப்படிச் செலவழிப்பது என்று யோசித்தார்கள்!

ரூபாய் 66.25 லட்சத்துக்குச் செலவினம் இருப்பதாகத் தெரிவித்து உபரித் தொகையை புதிய செலவுக்கு ஈடாக்கினர். அதற்கே அத்தொகை போதாதென்று தோன்றும்படியும் செய்துவிட்டார்கள். சர்க்கார் கணக்குப்படித் துண்டு விழுந் தொகை ரூபாய் 17.48 லட்சம். இதைஎப்படிச் சரிக்கட்டுவதென்பதற்குச் சுலபமாக ஓர் வழியையும் கண்டுபிடித்தார்கள்! மிராசுதார்களுக்காக அளித்து வந்த நில வரி வஜா உரிமையை ரத்து செய்வதன் மூலம் தங்களுடைய நோக்கத்தைப் பூர்த்தி செய்து கொள்ளத் தீர்மானித்துவிட்டார்கள். இத்தனை காலமாக உங்கள் கோரிக்கைக்குச் செவி சாய்த்து, அவசியமில்லாதபோதுகூட அச்சலுகையைக் காட்டி வந்தோம்! விலை வாசிகள் ஏறிவிட்டதால் உங்களுக்குச் சர்வ சௌகரியங்களும் ஏற்பட்டுவிட்டன! எனவே போதும் உங்களுக்கு இந்தச் சலுகை! என்று சர்க்கார் குறுந்தடியை ஓங்கிவிட்டார்கள்!

துண்டு விழுந் தொகையைச் சரிக்கட்டச் சர்க்காருக்கு எவ்வளவோ இனங்கள் உண்டு. அவற்றையெல்லாம் விட்டு அரிசிப் பஞ்சம் தாண்டவமாடும் இந்நாளில் மிராசுதார்களின் அவதியை அதிகரிக்கச் செய்வது விவேகமா? அரிசித் தட்டைச் சமாளிக்க அதிகச் சாகுபடி செய்ய வேண்டுமென்றும், பர்மாவைத் திரும்பப் பிடிக்க வேண்டுமென்றும் சமீபத்தில் கவர்னர் சொன்னர். சர்க்கார் இப்போது விவசாயிகளுக்கு வழங்கியிருக்கும் நியாயம் கவர்னர் சொன்ன கருத்துக்கள் நிறைவேற உதவுமா?

★

தலைவர்களின் தேகநிலை

உயிருக்கு ஆபத்தில்லாமல் உத்தமரின் உபவாசம் முடிவடைந்ததேயென்று இப்பொழுதுதான் மக்கள் மனம் சற்று நிதான நிலைக்கு வந்தது. ஆனால் ஆண்டவன் அடுத்தபடியாக அவர்களுக்கு மேற்கொண்டு கவலைகளைக் கொடுத்துவிட்டார். ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்திக்குச் சமீபத்தில் இரண்டு முறை மார்பு வலி ஏற்பட்டதாகச் சர்க்கார் அறிக்கை வெளியிட்டார்கள். அதற்கு

கடுத்தாப்போல் காவலில் வைக்கப்பட்டிருந்த ஸ்ரீமதி சரோஜினிதேவி நோய்வாய்ப்பட்டிருப்பதாகச் செய்தி வெளியாயிற்று. ஸ்ரீமதி சரோஜினிக்குச் சீதபேதியும், ஜுரமும் கண்டு கஷ்டப்படுவதால் அவரை விடுதலை செய்திருப்பதாகச் சர்க்கார் அறிக்கை விடுத்திருக்கின்றனர். அவருக்கு நடமாடக்கூட முடியாதபடி அவ்வளவு பலவீனமாக இருப்பதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மத்திய

சென்ற வார நிகழ்ச்சிகள்

மாகாணத்தின் மாஜிப் பிரதம மந்திரியாகவிருந்த ஸ்ரீ ரவி சங்கர சுக்லா வேலூர் சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவருக்கும் தேகசுகமில்லை. சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறச் சேர்க்கப்பட்டிருக்கிருர். தலைவர்களது தேக நிலைமை சீர்கேடு அடையும் பொழுதுதான் அவர்களைப்பற்றி அறிக்கை விடுவது என்ற போக்கைச் சர்க்கார் கைக்கொண்டிருக்கின்றனர். காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர்கள் காவலில் வைக்கப்பட்டு இப்பொழுது சற்றேறக் குறைய 8 மாதங்களுக்கு மேலாகிவிட்டன. அவர்களைப்பற்றியும், அவர்களது தேக நிலைமைபற்றியும் இதுவரையில் வெளியிடப்பட்ட அறிக்கைகள் வெகு சொற்பமே. எனவே மக்கள் மனம் குழம்புவதும், அக்குழப்பம் காரணமாக ஊகங்கள் பிறப்பதும் இயற்கை. நிலைமை முற்றும்பொழுது அறிக்கைகளை விடுவதால் தங்கள் கடமை தீர்ந்துவிட்டது என்று சர்க்கார் நினைப்பராயின் அது தவறு. ஜனங்களுக்கு அன்ருடம் சமாளிக்கும்படியான பிரச்னைகள் பல இப்போது எழுந்திருக்கின்றன. அத்துடன் நாட்டின் நன்மதிப்புக்குரிய தலைவர்களைப் பற்றிய கவலையும் சேர்ந்துவிட்டால் அவர்களது துயரத்துக்கு எல்லையில்லாமல் போய்விடும். ஆதலால், சர்க்கார் பிரதி வாரமும் தலைவர்களது தேக நிலைமையைப்பற்றி அறிக்கை விடுவது அவசியம். நோய் வாய்ப்பட்ட தலைவர்கள் சுகம் பெறப் பிரார்த்திக்கிருேம்.

★

ஸர் ஸாப்ருவுக்கு வைஸ்ராய் பதில்

ஸர் ஸாப்ரூ கடிதத்திற்கு வைஸ்ராயின் அந்தரங்கக் காரியதரிசியிடமிருந்து அவருக்குப் பதில் கிடைத்ததாகத் தெரிகிறது. அதில் தூதுகோஷ்டியைக் காண வைஸ்ராய் மகிழ்ச்சியடைவாரெனவும் அவர்கள் என்ன பேசுவரென்பதுபற்றி முன்பாகவே அறிக்கை அனுப்பக்கோரியிருப்பதாகவும் தெரிகிறது.

தூதுக்கோஷ்டியில் யார் யாரை அனுப்புவது என்பதைப் பற்றி பம்பாயில் ஆலோசனை நடைபெற்றது. ஸ்ரீமான் எம். ஆர். ஜெயகர் வாசஸ்தலத்தில் ஸ்ரீமான்கள் கே. எம். முன்ஷி, புலாபாய் தேசாய் முதலியவர்கள் ஆலோசனையில் பங்கெடுத்துக்கொண்டார்கள்.

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியர் இது சம்பந்தமாகச் சென்னையிலிருந்து டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிருர். தூதுக்கோஷ்டியை அழைத்துச் செல்வது பற்றிய விவரங்களைக் கவனிக்கவே ராஜாஜி அங்கு செல்கிருர்.

* * * *

தலைவர்கள் படங்களுக்குத் தடை

குற்றவாளியென அறிவிக்கப்பட்டவர் படத்தையோ, அல்லது இந்திய பீனல் கோடு 6-வது அத்தியாயம் அல்லது பாதுகாப்பு விதிகளின்படி தண்டிக்கப்பட்டவர் படத்தையோ, பாதுகாப்புச் சட்ட 26-வது விதிப்படி சிறை வைக்கப்பட்டவர் படத்தையோ, முகப்பிலோ அல்லது உட்புறமோ பிரசுரித்துள்ள பத்திரிகைகள் இனித் தபால் மூலம் அனுப்புவதற்கு வாங்குவதைத் தடைசெய்து இந்தியத் தபால் ஆபீஸ் விதி திருத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. (18-ம் பக்கம்)

தேக அசௌக்யம் காரணமாக ஸ்ரீமதி சரோஜினி தேவி சென்றவாரம் விடுதலை செய்யப்பட்டார்.

இந்த இதழில்

	பக்கம்
போர் போகும் போக்கு	4
புஷ்பஹாரம் (தொடர்கதை)	5
ஸத்துக மந்திரம் (குண்டலகேசி)	7
திட்டமான வாழ்க்கை (வ. ரா.)	9
புயற் காற்று- (ஸ்ரீ தங்கம்மாள் பாரதி)	11
வீரமும் காதலும் (பி. ஸ்ரீ.)	14
சீதஜ்வரம் (நோயற்ற வாழ்வு)	
ரூஸ்வெல்ட்-நிருபர்கள் மகாநாடு-	17
மந்திரப் பெட்டி (சிறுவர் பகுதி)	19

ரஷ்ய அரங்கம்

கார்கானிவக் காலி செய்த ரஷ்யர் பின்னர் அதற்கு வடகிழக்கே யுள்ள பைல்கரோட் என்ற முக்கிய நகரையும் கைவிட நேர்ந்தது. டானட்ஸ் பகுதியில் ஜெர்மன் தாக்குதலின் வேகம் தணியவில்லை. எதிரிகள் மேன் மேலும் புதிய துருப்புகளைக் கொண்டு வந்து குவிப்பதாக ரஷ்ய அறிக்கை கூறுகிறது. அவர்கள் பைல்கரோடிலிருந்து வடக்கே முன்னேறுவராயின், ஏற்கனவே கர்ஸ்கைக் கடந்து மேற்கே முன்னேறியுள்ள ரஷ்யப் படைகளுக்குப் பின் புறத்தில் ஆபத்தேற்படக் கூடும். அங்ஙனமே கார்காவுக்குத் தென் கிழக்கே எதிரியை முன்னேற விடுவதாலும் ரஷ்யருக்கு அதே வகையான ஆபத்தேற்படலாம். இதை யுணர்ந்த ரஷ்யர் மிக்க உத்வேகத்துடன் எதிர்த்து வருகின்றனர்.

வட அரங்கத்தில் ரஷ்ய முன்னேற்றத்தை ஜெர்மனியர் தடுக்க முடியவில்லை. ஸ்மலன்ஸ்கை நோக்கி கிழக்கிலிருந்தும், வட கிழக்கிலிருந்தும் முன்னேறும் இரு பெரிய சோவியத் படைகள் இப்போது அந்தப் பெரிய தளத்திற்கு இருபது மைல் தூரத்திற்குள் சென்றுவிட்டன. வியாஸ்மா-ஸ்மலன்ஸ்க் ரயில்பாதையிலுள்ள டியுராகேவோ என்ற முக்கிய ரயில் நிலையம் ரஷ்யர் வசமாகிவிட்டது. மத்திய அரங்கத்தின் தென்பகுதியில் ஜெர்மனியர் ஒரு புதிய தாக்குதல் துவக்கியிருக்கின்றனராம். ஆனால் அது பலிக்கும் அறிகுறி எதுவும் இதுவரை காணவில்லை

ஹிட்லர்-சர்ச்சில் பேச்சு

ஹிட்லர் சென்ற ஞாயிறன்று பேசியபோது ரஷ்யஅரங்கத்தில் அபார வெற்றி கிடைத்துவிட்டது போல் பேசினார். இம்முறையும் போல்ஷ்விக் பூச்சாண்டியைக் காட்டி ஐரோப்பிய நாடுகளை பயமுறுத்த அவர் தவறவில்லை. இரண்டாம் போர்முனை ஏற்படாமல் செய்து, உள்ள பலம் முழுதையும் ரஷ்யர்மீது பிரயோகிக்க வழி காண்பதே ஹிட்லரின் கருத்தாயிருக்க வேண்டும்.

அதே தினத்தில் பேசிய சர்ச்சிலின் பிரசங்கத்தில் ஹிட்லர் கருத்தை விரைவில் குலைக்கக் கூடிய ஏற்பாடு பற்றி பிரஸ்தாபமில்லை. டியுனிஸியாவில் எட்டாவது பிரிட்டிஷ் படை முழுவேகத் தேக்குதல் துவக்கியிருப்பதாக அவர் மகிழ்ச்சியுடன் அறிவித்தார். அப்படை மாரத் அரணைப் பக்கவாட்டில் கடந்து விட்டதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. ஆனால் இப்போதைக்கு ஜெர்மனி மீது மறுபுறம் படை எடுப்பது பற்றி அவர் ஒன்றும் சொல்லக்காணோம். ஐரோப்பிய யுத்தம் சமீபத்தில் முடியுமென்றும் அவர் எதிர்பார்க்கவில்லை. அடுத்த வருஷத்திலோ, அதற்கு அடுத்த வருஷத்திலோ ஹிட்லர் தோற்கடிக்கப்படலாமென்று சர்ச்சில் சொல்லுகிறார். அதற்குப் பிறகு நேசப் படை பலம் ஜப்பானை முறியடிக்கப் பிரயோகிக்கப்படுமாம்.

தென் மேற்கு பஸிபிக்

ஆனால் அதுவரை ஜப்பான் கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்குமா? இப்போதே அது ஆஸ்திரேலியா மீது பாயமகத்தான முஸ்தீப்பு செய்து வருவதாக விஷயமறிந்தவர்கள் கூறுகிறார்கள். அந்த முஸ்தீப்பை தகர்க்கும் முறையில் உடனே முன்னேறித் தாக்காமல் போனால், பிறகு ஜப்பானைத் தோற்கடிப்பதென்பது அசாத்தியமாகி விடலாமென்று இந்திய சமுத்திரத்திலுள்ள டச்சு கடற்படைத் தலைவர் எச்சரிக்கிறார். ஜப்பானிய ஆபத்தை ஒடுக்க உடனே வழிகாண வேண்டுமென்று ஆஸ்திரேலிய ராணுவ மந்திரியும் அறிவுறுத்துகிறார். சீன அதிகாரிகளின் கருத்தும் அதுவேதான். ஜப்பானியர் தங்கள் ஆக்கிரமிப்பிலுள்ள பிரதேசங்களிலிருக்கும் வசதிகளைக்கொண்டு தங்கள் ராணுவ யந்திரத்தை மேன்மேலும் பலப்படுத்தி வருகிறார்கள். வெற்றி பெற அவர்கள் எதற்கும் துணிந்தவர்கள். சீன அரங்கம் ஒன்றில் அவர்கள் சீனர் மீது விஷவாயுவைப் பிரயோகிக்கவும் தயங்கவில்லை.

இதே சமயத்தில் அவர்கள் ராஜ தந்திரத் துறையிலும் தங்கள் சாமர்த்தியம் முழுதையும் பிரயோகித்து வருகிறார்கள். சீனாவில் தங்கள் வசமுள்ள ஸ்தலங்களை யெல்லாம் சீனரிடமே திருப்பிக் கொடுத்து விடத் தயாராயிருப்பதுபோல் அவர்கள் நடிக்கின்றனர். அவர்களுடைய ஏற்பாட்டின்படி அந்த ஸ்தலங்களில் உண்மையில் சீனருக்கு அதிகாரமேற்பட்டு விடாது. அவற்றில் நாங்கிங் சர்க்கார் தங்களுக்கு அதிகாரமிருப்பது போல் பாவனை செய்வர். அவர்களைத் திரைமறைவிலிருந்து ஆட்டிவைப்பவர்கள் ஜப்பானியர் என்பது உலகமறிந்த விஷயம்.

* * * *

சீனாவுக்கு விமானங்கள் அவசியம்

ஸ்ரீமதி சியாங்கே ஷேக் சிகாகோவில் செய்த பிரசங்கத்தில் ரஷ்யாவும், மற்றும் மானிட சுதந்திரத்தை லக்ஷியமாகக் கொண்டவர்களும் சீனாவின் அன்பர்கள் ஆவர் என்றும் இப்போது சீனா அதிக விமானங்களையே வேண்டுவதாகவும் தெரிவித்தார்.

யுத்தத்திற்கப்புறம் என்னும்?

யுத்தத்திற்கப்புறம் ஜெர்மனியை மிகவும் கட்டுப்படுத்த அமெரிக்க சர்க்கார் உத்தேசித்திருப்பதாக விஷயமறிந்த ஒரு நிருபரான மிஸ்டர் கிங்ஸ்பரி ஸ்மித் என்பவர் எழுதுகிறார்.

அவர் எழுதிய வியாஸத்தில் அமெரிக்க சர்க்காரின் திட்டம் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், ஜெர்மனியரை நிராயுதபாணிகளாக்க ஏற்பாடுகளை வகுத்திருப்பதாகவும், யுத்தத்திற்குக் காரணமான ஜெர்மனியர் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

நேசதேசங்கள் ஜெர்மனியில் முதன் முதல் ராணுவ சர்க்காரை அமுலுக்குக் கொண்டு வருவர்; ஹிட்லர் தற்கொலை புரிந்துகொள்வார் என வாஷிங்டனில் எதிர்பார்க்கப்படுகிறது; அவர் பிடிபட்டால், விசாரணைக்குப் பின் குற்றவாளி எனக் கருதப்பட்டால் பீரங்கி முன்னிலையில் வைத்து சுடப்படுவார் என்றும் மிஸ்டர் ஸ்மித் எழுதியிருக்கிறார்.

* * * *

"அபாயம் நீங்கவில்லை"

தென்னாப்பிரிக்கா பிரதிநிதி சபையில்பேசிய தென்ஆப்ரிக்கா பிரதம மந்திரி பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் தென் ஆப்பிரிக்காவுக்கு நிலமார்க்கமாக இருந்த ஆபத்து சற்று நீங்கிவிட்டதாயினும், ஜப்பானும் இந்த யுத்தத்தில் பிரவேசித்திருப்பது காரணமாக கடல்மூலம் ஆபத்து நெருங்கிவருவதாகக் குறிப்பிட்டார்.

* * * *

பிரிட்டிஷ் தலைவர்கள் பொறுப்பு என்ன?

அமெரிக்காவில் இருக்கும் இந்தியா லீக்கின் தலைவர் ஸர்தார் ஜே ஜே ஸிங் ஒரு அமெரிக்கப் பத்திரிகையில் இந்தியா ஜப்பானைத் தோற்கடிக்க முடியும் என்றும், இந்தியா, பர்மா, சீனா ஆகிய நாடுகள் மூலம் ஜப்பானைத் தாக்குவதே பயன் தரும் என்றும் எழுதியுள்ளார்.

ஜப்பானிய யுத்தத்தில் முதன்மை ஸ்தானம் வகிக்க இந்தியா விரும்புவதாகவும் அவர் எழுதியுள்ளார்.

'மக்களுக்குமட்டும் போதிய அளவு உற்சாகம் ஏற்பட்டால் அந்தத் தேசத்தில் திடீரென்று ஒரு புதிய நிலைமை ஏற்படும். யுத்தத்திற்கப்புறம் தனக்கு காந்த அரசியலைத் தயாரித்துக் கொள்ளும் உரிமையை மட்டும் இந்தியாவுக்குப் பிரிட்டன் அளித்து மக்களின் அன்புக்கும் பிரீதிக்கும் பாத்திரமான தலைவர் பல கக்ஷிப் பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டு மந்திரி சபையை நிறுவ ஏற்பாடு செய்தால் இந்த நெருக்கடி தீர்ந்துவிடும்'' என அவர் எழுதியுள்ளார்.

* * * *

யுத்தம் நெடுங்காலம் நீடிக்கும்

ஜெனரல் பிராங்கோ, புதிய ஸ்பானிஷ் பார்லிமெண்ட் கூட்டத்தைத் திறந்து வைக்கையில் பின்வருமாறு பேசினார். 'நமது வெற்றியுடன் ஸ்பெயினுக்குப் புதிய சகாப்தம் ஆரம்பமாயிற்று. நெடு நாள் கஷ்டப்பட்டு தியாகங்களைச் செய்தோம். தற்போது புதிய ஏற்பாட்டில் திட்டமானகட்டத்தை அடைந்திருக்கிறோம். போரில் இருதரப்பினரும் எண்ணிலாத பலமுடையவர்களாக இருக்கின்றனர். எனவே யுத்தம் நெடுங்காலம் நீடித்து நடப்பது நிச்சயம்.'

இந்தியாவுக்கு அபாயம் நீங்கவில்லை.

சமீபத்தில் யுத்த தளவாடக் காட்சியை இந்திய ஸேனாதிபதி ஸர் ஆர்ச்சி பால்ட் வேவல் டில்லியில் ஆரம்பித்து வைக்கையில் வெளியார்களின் தாக்குதலினின்றும் இந்தியாவைப் பாதுகாக்க இதுவரை செய்யப்பட்டு வந்துள்ள ஏற்பாடுகளை யெல்லாம் விவரித்தார். மலேயாவும், பர்மாவும் வீழ்ந்ததற்குப் பிறகு கிழக்குத் திசையில் கடல் மூலமாகவோ. தரை மூலமாகவோ அன்றி ஆகாய மூலமாகவோ ஏற்படக்கூடிய பெருத்த தாக்குதலினின்றும் இந்தியாவைப் பாதுகாப்பதே நம் முக்கிய பொறுப்பாயிற்று அதை நாம் திறம்பட செய்து முடித்திருக்கிறோம்.

எத்தகைய தாக்குதலையும் எதிர்த்துத் தோற்கக்கூடிய நிலைமையில் இந்தியா இருக்கிறதென்று இப்பொழுது நாம் சொல்லலாம்.

இந்தியா அபாயத்திலிருந்து தப்பி விட்டதாக இப்பொழுது நாம் சொல்லுவதற்கில்லை. அபாயம் இன்னும் இருந்து தான் வருகிறது. நம்முடையவும், நம்முடன் சேர்ந்து போராடும் அமெரிக்கா, சீனா இந்நாடுகளுடையவும் பத்தரத் தன்மையையும், அமைதியுடன் கூடிய அபிவிருத்தியையும் எதிரியை விரட்டி உருக்குலையும்படி செய்தாலன்றி இந்தியா பத்திரத் தன்மையை அடைய முடியாது.'' என்று அவர் தெரிவித்தார்.

இனி நம்முன்னுள்ள வேலை இதுதான். இதற்கு ஏராளமான இந்திய யுவர்கள்-முக்கியமாக படித்த யுவர்கள்-ராணுவ ஸேவையில் சேர வேண்டிய தவசியம். இதுசுலபமான வேலை அல்ல; எனினும் நம்முடைய நாகரிகத்தின் எதிர்காலத்துக்கு இது அத்யாவசியமாகும்'' என்றும், அவர் சொன்னார்.

தொடர் கதை



ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாஸன்

முன் கதைச் சுருக்கம்

★

[சிவசங்கரையர் சகல சவுகரியங்களும் படைத்தவர். குழந்தையில்லையென்பது தான் அவருக்கும், அவரது மனைவி ஸ்வர்ணம்பாளுக்கும் குறை. சிவசங்கரையரின் தங்கை பிள்ளையான சுந்தரேசனை அவர்கள் இருவரும் தங்கள் பிள்ளையைப்போல் வளர்க்கிறார்கள். நாளா வட்டத்தில் ஸ்வர்ணம்பாளுக்கு சுந்தரேசனிடத்தில் வெறுப்புத்தட்டுகிறது. பி.ஏ. படித்து வேலையில்லாமல் மனம் புழுங்கிய சுந்தரேசன் தன் மனைவி ஜானகியிடம் கூடச்சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டு வெளியேறி விடுகிறான். ஜானகியிடத்தில், ஸ்வர்ணம்பாள் ஈவிரக்கமில்லாதபடி நடந்து கொள்கிறாள். சிவசங்கரையர் சுந்தரேசன் பிரிவால் மனம் வருந்தி அவனைப் பல விடங்களிலும் தேடுகிறார். பயனில்லை. ஸ்வர்ணம்பாள் ஜானகியைப் படாதபாடு படுத்தி வீட்டை விட்டுத் துரத்துகிறாள். ஜானகியின் கஷ்ட நிலையை உணர்ந்த சாவித்திரியம்மாளும் அவளது பெண்ணும் ஜானகியை அவளது பிறந்தகமான குடியாத்தத்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்கின்றனர். குடியாத்தத்தில் ஜானகியின் பாட்டனார் நோய்வாய்ப்பட்டு இறந்துவிடுகிறார். ஜானகி திக்கற்ற நிலையில் தவிக்கிறாள் அங்கு அவளுக்கு ஓர் பெண் குழந்தை பிறக்கிறது. டாக்டர் ரங்கநாதன் குடும்பத்தார் அவளுக்கு வேண்டிய உதவிகள் செய்து தங்களுடன் சேலத்திற்கு அழைத்துச் செல்கின்றனர்.]

அத்தியாயம் 4

சேலத்தில் தேரடித் தெருவில் ஓர் சிறிய வீடு. வீட்டின் முன்புற கூடத்தில் ஓரிரண்டு கண்ணாடி பீரோக்களும், இரண்டு நாற்காலிகளும், ஒரு தையல் மெஷினும் இரண்டு பெஞ்சுகளும் போடப்பட்டிருக்கின்றன. தையல்மெஷினருகில் முப்பது வயது மதிக்கத்தக்க ஸ்திரீ ஒருத்தி ஏதோ தைத்துக் கொண்டிருந்தாள். அருகே ஓர் பாய் விரிக்கப்பட்டு அதன் மீது பாதி தைக்கப்பட்டதும், தைக்கப்படாததுமான பல துணிகள் கிடந்தன. அதே பாய் மீது சுமார் 13 வயதுள்ள ஒரு பெண் சட்டையின் கைக்கு பூ தையல் வேலை செய்துகொண்டு உட்கார்ந்திருந்தாள். அப்பெண் வதனத்தில் மணிப்புருவின் சுத்த சாத்வீகமான சாயலும், சீமைக் கமலத்திலுள்ளது போன்ற பிரகாசமும் தாண்டவமாடின. வில் போல் மிகவும் அழகாய் வளைந்திருந்த புருவங்களும், சம்பங்கி மொட்டிற்கொத்த அழகிய மூக்கும், கருவண்டுபோலத் தோன்றிய அகன்ற கண்களும், பவளம்போல் சிவந்திருந்த அதரங்களும், முத்து வரிசைபோல் அழகாக அமைந்த பல் வரிசைகளும், கண்ணாடிபோல் வழவழப்பாகவும், மிருதுவாகவும் அமைந்திருந்த அவளது அழகிய கன்னங்களில் அடிக்கடி தென்பட்ட அதிருஷ்டக் குழிகளும், காண் போர் பரவசமடையும்படிக்கு இருந்தது. கருத்து அடர்ந்து செழிப்பாக வளர்ந்திருந்த அவளது கூந்தல் அழகாக பின்னப்பட்டு கணுக்கால் வரைக்கும் புரண்டுக் கொண்டிருந்தது. அன்றலர்ந்த ரோஜா மொட்டிற் கொத்த அவ்வழகிய சிறுமி மிகவும் ஏக்கங் கொண்டவளைப் போல் காணப்பட்டாள்.

அவ்விடமிருந்த கண்ணாடி பீரோக்களில் தையல் வேலைத் திறமையைக் காண்பிக்கும் வண்ணம் பலவித சட்டை மாதிரிகளும், குழந்தைகள் பாவாடைகளும், தலையணை உரைகளும், மேஜைத் துணிகளும் ஒழுங்காகத் தொங்க விடப் பட்டும், மடித்து வைக்கப்பட்டு மிருந்தன.

தைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த அச்சிறுமி தனது தாயாரை நோக்கி "அம்மா நேற்றேனும் ஏதாவது கிராக்கி வந்ததா? இந்த மாதம் வியாபாரம் சுத்த மோசம்போலிருக்கிறதே?'' என்று கேட்டாள்.

"ஆமாண்டியம்மா. நமக்கு இது சோதனை காலம் போலிருக்கு. இந்த மாதம் கையில் ஒரு பைசாகூடச் சேரவில்லை. புது வியாபாரம்தான் நடக்கவில்லை என்றால் பழைய பாக்கி கொடுக்க வேண்டியவர்கள்கூட ஒருவராவது ஒரு தம்படிகூடக் கொடுக்கவில்லை. உன்னுடைய பள்ளிக்கூடச் சம்பளத்துக்கும், வீட்டு வாடகைக்குமாவது இரண்டு காசு சேர்ந்தால் தேவலை. நாளுக்கு நாள் ஜீவனம் நடத்துவது மிகவும் கஷ்டமாகவிருக்கிறதே! நம் ஜன்மமே சுகத்தைக் காணாத ஜன்மம்'' என்று கண்ணீர் உதிர்த்தாள் அப் பெண்ணின் தாய்.

தாயாரின் துயரத்தைக் கண்ட மகளும் கண் கலங்கி "அம்மா நான் படிப்பை நிறுத்திவிட்டு இனிமேல் உனக்குத் தையல் வேலையில் உதவியாகவிருக்கிறேன். நீ அல்லும் பகலும் கஷ்டப்பட்டு 'ஸ்கூல் பீஸ்' தர, நான்மட்டும் ஏன் ஸ்கூலுக்குப் போகவேண்டும்?'' என்றாள்,

தாயார்:—"கண்ணே, நீ அப்படி செய்யக்கூடாது. நீ படித்து பாஸ் செய்து பேரும் புகழும் கொண்டு வரும் நன்னாளைத் தான் நான் இரவும் பகலும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். பகவான் நமக்கு இன்றில்லாவிட்டால் நாளைய தினம் அருள்புரிவார். கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார். சரி நான் குளித்துவிட்டு சமைக்க போகிறேன். யாராவது வந்தால் கவனித்துக் கொள்'' என்று கூறிவிட்டு தைப்பதை அத்துடன் நிறுத்தி விட்டு உள்புறம் சென்றாள்.

அம்மாதுதான் ஜானகி; அச்சிறுமி ஜானகியின் செல்வப் புதல்வி லக்ஷ்மி. தனது ஆபத்துக் காலத்தில் அதிதமாக உதவிய லக்ஷ்மியம்மாளின் பெயரையே ஜானகி தனது பெண்ணுக்குச் சூட்டினாள். ஜானகி லக்ஷ்மியம்மாளின் விருப்பப்படி அக்குடும்பத்தினருடனேயே சேலம் வந்து சேர்ந்தாள். உடம்பில் சற்று பலம் வந்தவுடன், டாக்

"அட்டா! உன் தையல் திறமை உன் தாயாருடையதைத் தோற்கடிக்கும் போலிருக்கிறதே........" என்றாள் சீமாட்டி

டர் வீட்டின் அருகிலேயே இரண்டு அறைகள் வாடகைக்கு அமர்த்திக்கொண்டு தாத்தா வைத்துப் போன அற்ப சொத்தில் ஜீவனம் நடத்தி வந்தாள். அவ்வற்ப சொத்தும் நாளுக்கு நாள் கரைந்துகொண்டு வரவே, தனக்குத்தெரிந்த தையல் வேலையைக்கொண்டு அக்கம் பக்கங்களிலிருக்கும் பெண்மணிகளுக்கு சட்டை, ரவிக்கை, பாவாடை முதலியவைகளைக் கூலிக்குத் தைத்து கொடுத்து ஜீவனம் நடத்த உபாயம் தேடினாள். நாளடைவில் கிராக்கிகளும் சுமாராக வர ஆரம்பித்தன. சில பெண்கள் அவளது தையல் திறமையைக் கண்டு வியந்து அவளிடம் தையல் கற்கவும் துவங்கினர். நாளடைவில் ஜானகியின் வீடு ஓர் தையல் பள்ளிக்கூடமாக மாறிற்று. கையில் கொஞ்சம் பணம் சேர்ந்ததும் ஜானகி ஒரு கால் தையல் மெஷினும் வாங்கினாள். அடுத்த வருஷம் சற்று பெரிய வீட்டிற்குக் குடிமாற்றினாள். சேலம் நகரம் ஜானகிக்கு கொஞ்சம் பழகுவதற்குள் டாக்டர் குடும்பத்தினர் கோயமுத்தூருக்கு மாற்றப்பட்டு சென்றுவிட்டனர். ஜானகிக்கு தனது ஆப்த நண்பர்களின் பிரிவால் கை ஒடிந்த மாதிரியாயிற்று. ஆனால் ஜானகிக்கும், டாக்டர் குடும்பத்தினருக்குமிடையே அவ்வப்பொழுது கடிதப் போக்குவரத்துமட்டும் நடந்துகொண்டிருந்தது.

குழந்தை லக்ஷ்மி நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக செல்வமாக வளர்ந்து வந்தாள். ஜானகியின் செல்விக்கு இப்பொழுது பதிமூன்று வயது நிரம்பிவிட்டது. தாயைப்போலக் குழந்தை; நூலைப்போல சேலை என்ற பழமொழிக்கேற்றவாறு அக்குழந்தை மிகவும் சுறுசுறுப்பாகவும், புத்திசாலியாகவும் இருந்தாள். அவள் 6-வது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். தனக்கு வேறெந்த விதத்திலும் கடவுள் அதிர்ஷ்டத்தை அளிக்காவிடினும் அபூர்வகுண சௌந்தர்யங்களடங்கிய ஓர் கன்யாரத்தினத்தையேனும் அளித்தாரே என்று ஜானகி அடிக்கடி பகவானிடம் தனது நன்றியறிதலை செலுத்துவாள்.

ஜானகியம்மாள் குளிக்கச் சென்ற ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் அவர்கள் வீட்டு முன்புறம் ஓர் கோச் வண்டி வந்து நின்றது. அதில் வீற்றிருந்த நடுத்தர வயதினளான ஸ்திரீ ஒருத்தி வீட்டின் முன்புறம் தொங்கவிடப்பட்டிருந்த பலகையில் பொறித்திருந்த வாக்கியங்களை படித்துவிட்டு வண்டியிலிருந்து கீழே இறங்கி வந்து வீட்டினுள் புகுந்து கூடத்தை ஒரு முறை நோக்கினாள். அந்த ஸ்திரீ பாய் மீது வீற்றிருந்த அச்சிறுமியை நோக்கி புன்முறுவலுடன் "அம்மா குழந்தை ஜானகியம்மாள் வீட்டிலிருக்கிறாரா?" என்று விசாரித்தாள்.

லக்ஷ்மி:—ஆமாம், வீட்டில் தான் இருக்கா. குளிக்கப் போயிருக்கா. இப்பவே வந்துடுவா! உட்காருங்கோ மாமி, என்று உபசரித்து அவளருகில் ஓர் நாற்காலியை கொண்டு வந்து போட்டாள்.

வந்த ஸ்திரீ நாற்காலியில் உட்காராமல் அவ்விடமிருந்த பீரோக்களின் ஒன்றின் அருகிலும் சென்று துணிகளின் வித விதமான தையல் வேலைபாடுகளையும் பார்வையிட்டாள். "அம்மா, குழந்தை இவ்வளவும் உனது தாயாரால் தைக்கப்பட்டவைகளா? என்ன ஆச்சரியம்? எவ்வளவு அற்புத வேலைப்பாடாகவிருக்கிறதே எவ்வளவு நேர்த்தியாகவும், அழகாகவும் ஒழுங்காகவும், மெஷினில் தைத்த மாதிரி ஒரே சூக்ஷ்மமாக செய்யப்பட்டிருக்கின்றன! இவ்வளவு ஒழுங்கான பூநூல் வேலையையும், க்ரோஷா தையல் வேலையையும் இதற்கு முன் நான் பார்த்ததே இல்லை! உனக்கும் எம்ப்ராய்டெரி செய்யத் தெரியுமா என்ன?" என்று அன்புடன் வினவினாள்.

லக்ஷ்மி: "நீங்கள் கையில் பிடித்துக்கொண்டிருக்கும் சட்டைக்கு நான் தான் எம்பிராய்டரி செய்திருக்கிறேன். ஆனால் அம்மா தைக்கும் அளவு என்னால் தைக்க முடிகிறதில்லை. எனக்குப் பள்ளிக்கூடம் போக வேண்டி இருக்கிறது. ஒழிந்தபோது நான் நான் தைப்பது வழக்கம்."

ஸ்திரீ:— "அடாடா உன் தையல் திறமை உனது தாயாருடையதை தோற்கடிக்கும் போலிருக்கிறதே. இந்தச் சின்ன வயதிலேயே நீ எவ்வளவு கெட்டிக்காரியாக விருக்கிறாய்டியம்மா! இந்தச் சட்டையை எங்கள் விஜயத்திற்கு வாங்கிக் கொண்டு போகிறேன்." என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே அவ்விடம் ஜானகியம்மாள் பிரவேசித்தாள்.

ஜானகியம்மாள் வந்திருந்த ஸ்திரீயைப்பார்த்து வணங்கி, வரணும், வரணும், எங்கள் ஏழை வீட்டுக்கு என்ன காரணமாக வந்தீர்களோ?" என்று வினயமாக விசாரித்தாள்.

சீமாட்டி "சில துணிகளை உங்களிடம் தைக்கக் கொடுக்க வந்தேன். நீங்கள் சட்டை பாவாடை முதலியவைகளுக்கு மிகவும் அழகாக குறைந்த விலைக்கு எம்பிராய்டரிசெய்தும் தைத்தும் கொடுக்கிறீர்களென்று கேள்விபட்டேன். ஆதலால் உங்களுடையவிலாசத்தை விசாரித்தறிந்துகொண்டு வந்தேன். வாஸ்தவமாக உங்களுடைய தையல் வேலைகள் மிகவும் புகழத்தகுந்தவையாகவிருக்கின்றன. போன நவராத்திரி சமயத்தில் மைசூரில் நடைபெற்ற அகில இந்திய பொருட்காட்சி சாலையில் தங்கள் வேலைத்திறமைக்குத் தங்க பதக்கம் கிடைத்ததாமே?"

ஜானகி சற்று சங்கோஜமாகவே "ஆமாம், அதற்காக தாங்கள் என்னை இவ்வளவு பிரமாதமாகப் புகழ்வதற்கு நான் பாத்திரமல்லவே! என்று பதிலளித்தாள்.

சீமாட்டி "அப்படியல்ல. தங்கள் வேலைத் திறமையைப் புகழ எனக்கு அறிவு போதாதென்று சொன்னால் நான் ஒப்புகொள்கிறேன். இந்தத் தரமும் ஏதாவது வேலைப்பாடுகளை மைசூர் பொருட்காட்சிக்கு அனுப்ப உத்தேசித்திருக்கிறீர்களா?"

ஜானகி "அவர்களிடமிருந்து என்னமோ அனுப்பி வைக்கும்படி கடிதம் வந்திருக்கிறது. நாற்பது அல்லது ஐம்பது உருப்படிகளையாவது அனுப்பலாமென்றிருக்கிறேன். சென்னை சுதேசிப்பொருட் காட்சியிலும், பங்களூர் சுதேசிப்பொருட்காட்சியிலும் இரண்டு தங்கப் பதக்கங்கள் இந்த வருடத்தில் வந்திருக்கின்றன. எல்லாம் தங்களைப்போன்ற பெரியவர்களின் ஆசீர்வாதம். சட்டைகளின் அளவையும், எந்த சட்டைக்கு எந்த ரகம் பூத்தையல் வேலை செய்யவேண்டுமென்பதையும் மாதிரி காட்டி விட்டுச்சென்றால் கூடிய சீக்கிரம் தைத்து விடுகிறேன்.

சீமாட்டி "நான் சொல்வதை விட நீங்களே சில நேர்த்தியான பூத்தையல் வேலைகளை பொறுக்கி எடுத்து காண்பியுங்கள்.

ஜானகி "இதோ இது பூவலை தையல்வேலை, இது ஷேடோவொர்க் எம்பராய்டரி. இது க்ராஸ் ஸ்டிச் எம்ராய்டரி இது பைன் எம்ராய்டரி" என்று விளக்கி வித விதமான அழகிய பல தினுசுகளைப் பீரோக்களிலிருந்து எடுத்து எடுத்து மேஜைமீது பரப்பினாள். சீமாட்டி எதைப் பொறுக்குவதென்று தோன்றாமல் திகைத்துப் போய் விட்டாள். அந்தத் துணிகளை வெகுநேரம் வரைக்கும் புரட்டிப் புரட்டி பார்த்து விட்டு கடைசியில் இரண்டு மாதிரிகளை பொறுக்கிக் கொடுத்து விட்டு "சரி, நான் போய்வருகிறேன். உங்களுக்கு ரொம்ப சிரமம் தந்து விட்டேன். உங்கள் குழந்தை தங்கமானவள். இவளைக் கண்டால் என் பெண் ரொம்ப ஆசைப்படுவாள். சாயந்திரம் வண்டி அனுப்புகிறேன். குழந்தையைக் கூட்டிக்கொண்டு நீங்களும் எங்கள் வீட்டிற்கு வரவேணும்" என்று மிகவும் பரிவாக அழைத்தாள்.

ஜானகி ஆனந்தமும் ஆச்சரியமும் கொண்டவளாக "எங்களை இவ்வளவு அன்புடனும் ஆதரவுடனும் அழைப்பவர்கள்தான் யார் இருக்கிறார்கள்? குழந்தையை அனுப்பி கொடுப்பதில் ஆக்ஷேபனையொன்றுமில்லை, ஆனால் சாயந்திரம் வேளையில் நான்தான் கடையை விட்டு வர இயலாது. தாங்கள் தவறாக நினைக்கக் கூடாது. தங்களது விலாஸம் என்னவோ?" என்றாள்.

சீமாட்டி "அதற்கென்ன உங்கள் சௌகரியம் போல் செய்யுங்கள். என் விலாசம் 'ராமசந்திரன்' பார் அட்லா, சிவஸ்வாமிபுரம்." உங்கள் குழந்தைக்கு மாதம் பத்து ரூபாய்கள் கொடுக்க தயார். தினசரி மாலைப் பொழுதில் வண்டியும் அனுப்புகிறேன். எங்கள் வீட்டிற்கு வந்து என் பெண் விஜயாவிடம் விளையாடி விட்டு அவளுக்கு கொஞ்சம் தையல் வேலையும் கற்றுகொடுத்து விட்டு செல்லலாமே?"

ஜானகி மிகவும் நன்றியறிதலுடன் "அதற்கென்ன அப்படியே ஆகட்டும். உங்கள் தயவு ஒன்றிருந்தால்போதும். லக்ஷ்மி! நீ என்ன சொல்கிறாய்?"

லக்ஷ்மி "அம்மா நீ ஒண்டியாயிருக்கணுமே?"

"ஜானகி:— "எனக்கென்ன பயம்? என்னை யார் என்ன செய்து விடுவார்கள்? லக்ஷ்மியை இருட்டுக்கு முன்னால் வீட்டிற்கு அனுப்பி விட்டால் நான் நிர்விசாரமாகவிருப்பேன்."

சீமாட்டி "ஆறு ஆறரை மணிக்குள் அனுப்பி விடுகிறேன். போதுமா?" என்றாள்

தாய், மகள் இருவரும் தலையை அசைக்கவே, சீமாட்டியும் லக்ஷ்மியின் முதுகைப் பரிவுடன் தட்டிகொடுத்து விட்டு அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு வண்டியில் போய் ஏறிக்கொண்டு சென்றாள்.

தாயாரும், பெண்ணும் தங்களுடைய கஷ்ட காலத்தில் வந்து உதவுவதற்கென்று பகவானே இந்தச் சீமாட்டியை தூதனுப்பி இருக்கிறாரென்று எண்ணி எண்ணி சந்தோஷத்தினால் பூரித்தனர். சந்தோஷ மிகுதியால் அவர்கள் வாயில் பேச்சுகூட புறப்படவில்லை. மௌனமாக ஒருவரை ஒருவர் சிறிது நேரம் பார்த்தவாறு நின்றிருந்தார்கள். அன்று ஞாயிற்றுக்கிழமை. லக்ஷ்மி திரும்பவும் பாய் மீது உட்கார்ந்து சாவகாசமாக தைக்கலானாள். அவளது அழகிய கண்களும் கைகளும் தையல் வேலையில் லயித்திருந்தனவே தவிர அவளது மனது பலவிதயோசனைகளால் குழம்பியிருந்தது. அச்சிறுமியின் களங்கமற்ற மனது இனி தனது தாயாருக்கு சம்பாதித்து தரப்போகிறோமென்ற ஆனந்தத்தினால் புளகாங்கிதமடைந்தது. அன்று அச்சிறுமி மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்யலானாள். அன்று அந்த சீமாட்டியின் வீட்டிற்கு எந்த சிற்றாடையை கட்டிக்கொண்டு செல்லலாம். முதல் முதல் தனது நூதன தோழியைக் கண்டதும் என்ன பேசுவது, அவர்கள் பெரிய மனுஷாளாயிற்றே அவர்களிடம் எவ்விதம் நடந்துக் கொள்வது என்ற பலவித எண்ணங்கள் அவளது உள்ளத்தில் ஒன்றன்பின் ஒன்றாக தோன்றி மறைந்தன. தனது கையிலிருந்த தையல் வேலையைக் கீழே வைத்துவிட்டு ஓடிப்போய் தனது சிறிய பெட்டியை திறந்து ஒவ்வொரு புடைவையாக எடுத்துப் பார்த்தாள். அவளிடமிருப்பது ஒரே ஒரு பட்டுச் சிற்றாடைதான். அந்தப் பட்டுப்புடவையையும் அதற்கு ஏர்வையான ஓர் பழுப்பு கலர் ஸில்க் ஜாக்கெட்டையும் போட்டுக்கொண்டு செல்வதென்று தீர்மானித்தாள்.

மத்தியானம் சாப்பாடு முடிந்தவுடன் அம்மாவிற்கு உதவியாகச் சில்லரை வேலைகளை செய்து, முடித்துக் கொண்டு, பள்ளிக்கூட பாடங்களையும் மிகவும் ஜடுதியில்

(16-ம் பக்கம்)



முஸ்லிம்லீக் கூட்டம்

சமீபத்தில் லீக் காரியக்கமிட்டி பம்பாயில் ஜனாப் ஜின்னா தலைமையில் கூடியபொழுது பாகிஸ்தான் கோரிக்கையையே வற்புறுத்தியதுடன் காங்கிரஸ் மீதும் குறை கூறித் தீர்மானத்தை நிறைவேற்றியது.

ஆக்கமுறை வேண்டும்

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் எழுதியது

பத்திரிகைகளில் வெளியாகும் சமாசாரம் தாமதித்து வருகிறது; தடைப்பட்டும் வருகிறது. எப்படியிருந்தாலும் நிலைமையை நிதானிக்கப் போதுமான தகவல்கள் வெளியாகி வருகின்றன. காங்கிரஸை அடக்கப் புறப்பட்டபோது ஏக காலத்தில் பல பிரதேசங்களில் கலவரமும் கலகமும் ஏற்படுமென்று எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். காங்கிரஸ் பலாத்காரத்தை ஆதரிக்கவில்லை. காங்கிரஸை அடக்கினர். பலாத்காரம் தலை தூக்க ஆரம்பித்திருக்கிறது. தலைவலி போக திருகுவலி வந்திருக்கிறது. பலாத்காரத்தை அடக்க மக்களுடைய ஆதரவு பூராவும் வேண்டும். இல்லையேல் அடக்குவது எளிதல்ல. அந்த ஆதரவு இன்று விசதமாக இல்லை. காரணம் என்ன? அதிகாரிகள் சிந்திக்க வேண்டும். கவர்ன்மெண்டின் போக்கு யாருக்கும் பிடிக்கவில்லை; நம்பிக்கையூட்டவில்லை. கண்டனக் குறிகள் கண்ணைக் குத்துகின்றன. மிதவாதிகள் ஆதரிக்கவில்லை; முதலாளிகள் ஆதரிக்கவில்லை; தொழிலாளர் ஆதரிக்கவில்லை; பெண்மக்கள் ஆதரிக்கவில்லை. எல்லாரும் சமரஸத்திற்கு வழி காண வற்புறுத்தி வருகின்றனர். எங்கும் காணும் பொதுவான அபிலாஷைகளுக்கு கூர் கட்டியதே காங்கிரஸ் செய்த பாவம். காங்கிரஸை அடக்கினால் காங்கிரஸுக்கு வலுவூட்டி வந்த காரணங்கள் விலகுமா? அடக்கு முறை மாத்திரம் உதவாது. அடக்கு முறை பயன்படவும் ஆக்க முறைவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டில் ஸ்தானம் வகிக்கும் இந்திய மெம்பர்கள் இதை அறிவுறுத்தவேண்டும்; நிலைமையை இவ்வாறு விட்டு வைப்பதற்கில்லை. ஆபத்தாக முடியும்.

* * * * * * * * *

ஸர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் ராஜீனாமாச் செய்து விட்டார். இந்தியா கவர்ன்மெண்டுக்கும் அவருக்கும் ராசியில்லை. ஏற்கனவே இரண்டு முறை அங்கே பதவி வகித்திருக்கிறார். மாதக்கணக்கில் சக்கிரம் சுழன்றது. இந்த முறை இரண்டு வாரங்களுக்கு மேல் ஓடவில்லை. பழிதான் கண்டமிச்சம்; பெருமைப்பட ஹேதுமில்லை. விலக்கொண்டதற்கு அபூர்வ காரணம் குறிப்பிட்டிருக்கிறார். சமஸ்தானங்களின் எதிர்கால வாழ்வை காப்பாற்ற சுவாதீனம் வேண்டுமாம். சொந்தப்பிள்ளையிடத்தில் இல்லாத பற்றும் பாசமும் சுவீகாரப்பிள்ளையிடத்தில் பிறந்துவிட்டது. ஏதோ காரணம் சொல்லவேண்டும். அவ்வளவுதான். அதோடு நின்றிருக்கலாம். நிற்கவில்லை. அதிகச் சமர்த்து காட்டியிருக்கிறார். கவர்ன்மெண்டின் அடக்குமுறை ஆரோகணத்தைத் தாங்கிப் பேசியிருக்கிறார். கழற்றிக்கொள்ள அதைச் சொல்ல வேண்டியிருந்தது போலும். காரணம் எதுவாயிருந்தாலும் அவர் விலகிக்கொண்டதை அவருடைய நண்பர்கள் வரவேற்பர். சமஸ்தானத்தில் நல்ல வேலை செய்து வந்தார். அதை விட்டு வசதியில்லாத இடத்தில் மாட்டிக்கொண்டு தவிப்பதில் லாபமில்லை. இந்தியா கவர்ன்மெண்டில் ஸ்தானம் வகிப்பவருக்கு வெளியிலே தொடர்பு இருக்க வேண்டும். இல்லையேல் உள்ளே செல்வாக்கிராது.

இந்திய ஸர்க்கார் விளம்பர மெம்பர் பதவியை ராஜிநாமாச் செய்த ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர்.

சென்றவார நிகழ்ச்சிகள்

காந்திஜியின் சிறை வாழ்க்கை

பம்பாய் இந்திய வியாபாரச் சங்கத்தினர் மகாத்மாவின் தேக நிலையைப்பற்றி ஸர்க்கார் தகவல் அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதற்கிணங்கி சீக்கிரத்தில் பம்பாய் ஸர்க்கார் ஒரு அறிக்கை வெளியிடுவார்கள் எனத் தெரிகிறது. காந்திஜி சுகமாக விருப்பதாகவே தெரிகிறது. கவர்ன்மெண்டு டாக்டர்கள் அவர் தேக நிலையைப் பரிசோதனை செய்து பார்த்து அவர் சுகமாக இருப்பதாகத் தெரிவித்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

மகாத்மாவுக்கு விருப்பமான தினசரிப் பத்திரிகை அவருக்கு இப்போது கொடுக்கப்படுகிறது. அவர் வழக்கப்படி விடியற்காலை நான்கு மணிக்கு எழுந்து விடுகிறார். காலைப் பிரார்த்தனை இப்போது முன்னைவிட அதிக நேரம் நடக்கிறது. அவரும் டாக்டர் சுசீலா நாயரும், ஸ்ரீமதி கஸ்தூரிபாயும், மிஸ் மீரா பென்னும் கீதை பூராவும் பாராயணம் செய்கிறார்கள். காலை ஆறுமணிக்கு அவர் ஆட்டுப் பாலை அருந்திவிட்டு உலாவப் போகிறார். அவருக்கு நீண்ட நேரம் உடம்பு பிடித்துவிடப்படுகிறது. வழக்கப்படி மத்தியானத்திலும் மாலையிலும் அவர் சப்பாத்தியும், பழ ரசமும் சாப்பிடுகிறார். பகலில் அவர் அதிக நேரம் நூற்கிறார். அதன் பின் பத்திரிகைகளைப் படிக்கிறார். சில சமயங்களில் கொரான் படிக்கிறார்.

* * * *

ஸர் ஸி. பி. ராஜிநாமா

இந்தியா கவர்ன்மெண்ட் விளம்பர இலாகா மெம்பர் ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் சென்ற 21-ந் தேதி தம்து பதவியை ராஜிநாமா செய்தார். அவரது ராஜிநாமாவை வைஸ்ராய் அங்கீகரித்து விட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

9

"ஸத்துக மந்திரம்"

வ. வேணுகோபாலன்

காவிரிப்பூம்பட்டினத்தில் பல பெளத்த சங்கங்கள் இருந்தன. ஜைன சங்கங்களும் மிகுதியாக இருந்தன. இரண்டு சங்கங்களுக்கும் மதிப்பு அதிகம் இருந்தது. பெளத்த சங்கங்களுள் இந்திர விகாரத்தைச் சார்ந்த பெளத்த மஹா சங்கமே பெரியது. அந்தச் சங்கத்தில் பெளத்தமதப் பெரியார்கள் பலர் இருந்தனர். அவர்களுக்குப் புத்த சத்துவ முனிவர் என்பவர் குருவாக விளங்கினார். அந்தப் பெளத்த மஹா சங்கத்தைப் பின் பற்றிப் பல பெளத்த சங்கங்கள் ஆங்காங்கே இருந்தன. அவற்றில் இருக்கும் பெளத்த பிக்ஷுக்கள் பலருக்கும் புத்த சத்துவரே தலைவராக விளங்கினார்.

கொள்கையில் வேறுபாடு

அந்தப் பெளத்த மஹா சங்கத்திற்கு முற்றும் மாறான கொள்கையை உடையதாய், ஸத்துக மந்திரம் என்னும் பெளத்த சங்கம் விளங்கியது. ஸத்துக மந்திரம் என்பது, ஸத்துகனால் ஸ்தாபிக்கப்பட்ட பெளத்த சங்கம். அதில் பெளத்த பிக்ஷுக்கள் மிகுதியாக இருந்தனர். ஆனால் அந்த பெளத்த பிக்ஷுக்களுக்கும் பெளத்த மஹா சங்கத்துப் பெளத்த பிக்ஷுக்களுக்கும் கொள்கையில் பெரிதும் மாறுபாடு இருந்தது.

புத்த தேவனுடைய கொள்கையைப் பின் பற்றுபவர்களில் மூன்று வகை உண்டு. அவர்கள் சிராவக யானத்தார், மஹா, யானத்தார், மந்திரயானத்தார் என்று கூறப்பெறுவர். அம்மூன்று வகையிலும் வேறுபாடு அதிகம் இருந்தது. சிராவக யானத்தைச் சேர்ந்தவர்கள் மாமிசம் உண்ணல், மதுபானம் செய்தல், வெற்றிலை தின்னல் முதலியவற்றை விலக்கியவர்கள். மஹாயான, மந்திரயானத்தைச் சேர்ந்தவர்கள் மாமிசம் உண்ணுதலும் மதுபானம் செய்தலும் வெற்றிலை முதலிய போகப் பொருள்களை நுகர்தலும் உண்டு. இன்னும் பல வகையிலும் சிராவகயானத்தாருக்கும், மஹாயான மந்திரயானத்தாருக்கும் வேறுபாடு இருந்தது.

வேந்தன் புகட்டிய புத்தி

இந்திர விகாரத்தைச் சார்ந்த பெளத்த மஹா சங்கத்தினரும் அவரைப் பின் பற்றியவர்களும் சிராவகயானத்தைச் சேர்ந்தவர்கள். ஸத்துக மந்திர பெளத்த சங்கத்தினர் மட்டிலும் மஹாயானயானத்தைச் சேர்ந்தவர்கள். இத்தன்மையால் ஸத்துக மந்திர சங்கத்திற்கும் பெளத்த மஹா சங்கத்திற்கும் விரோதம் இருந்தது. பெளத்த மதத்தைப் பின் பற்றிய சோழ வேந்தனும் சிராவகயானத்தைச் சேர்ந்தவன். அதனால் அவனுக்கு ஸத்துக மந்திரத்தின் மீது உள்ளூர வெறுப்பு இருந்து வந்தது. அதைத் தவிர ஸத்துகமந்திரத்தில் நடந்து வரும் பல அநீதங்களும் அவன் வெறுப்பிற்கும் கோபத்திற்கும் காரணமாக இருந்தன. ஸத்துக மந்திரத்தின் நேர்மையற்ற கொள்கைகளையும் காரியங்களையும் ஒழிப்பதற்கு வழி தேடினான். ஸத்துகனையும் அந்தச்சங்கத்தின் குருவாகிய புத்த மித்திர அடிகளையும் அழைத்துப் பன்முறை குற்றங்களை எடுத்துக் கூறிப் புத்தி புகட்டி "நேர்மையுடன் நடக்க வேண்டும்" என்று கூறியுள்ளான். ஆனால் ஸத்துகன் அரசன் மொழியைப் பொருட்படுத்துவதே இல்லை. மதுபான மயக்கத்தில் களிப்புடன் பல குற்றங்களைச் செய்து வந்தனர். அந்தச் சங்கத்தினர் நாளடைவில் கொலை, களவு, காமம் முதலிய பாவங்களை மிகுதியாகச் செய்தனர். ஸத்துகனுக்கு மிக நெருங்கிய அன்பர்களே அந்தக் காரியங்களில் தலைமை வகித்தனர். பஞ்ச மஹா பாவங்களும் அந்தச் சங்கத்தில் தலையெடுத்து வளர்ந்தன. அவற்றை வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர் ஸத்துகன் கூட்டத்தினர்.

காளனைப் பிடிக்க முயற்சி

அந்தச் சங்கத்தில் பிக்ஷுக்களைப் போல் பிக்ஷுணிகளும் மிகுதியாக இருந்தனர். ஸத்துகன் ஆணைப்படி நடக்கும் பல வீரர்கள் அந்தச் சங்கத்தில் உபாஸகர்களாக இருந்தனர் உபாஸகைகளான பெண்களும் உண்டு. பாலகன் என்பவன் உபாஸகனாகவும் சில சமயம் பிக்ஷுவாகவும் இருப்பான். காரிய முறைகளில் ஸத்துகனோடு ஒத்துழைக்க நேரும் போது பாலகன் பிக்ஷுவேஷம் களைந்து வீர வேஷம் கொள்வான். உபாஸகர்கள் யாவரும் வீரர்களே. ஸத்துக மந்திரத்தில் எந்த காரியங்களும் அவர்களாலேயே நடைபெறும். ஸத்துகன் வெளியில் உபாஸகனே. சில சமயங்களில் பிக்ஷுவாகவும் தோற்றமளிப்பான். இந்த உபாஸகர்களாலேயே

"இந்தத் துஷ்டையையும் அவ்வாறு தண்டியுங்கள்: தண்ணீர் இறைக்கத் தவறினல், படுகுழியில் தள்ளிச் சமாதி செய்யுங்கள்" என்று கட்டளையிட்டான் காளன்.

கொலை, களவு முதலியன நடைபெறும். உபாஸர்களுக்குத் தலைவன் காளன் என்னும் பெயரோன். அவனைப் பிடிப்பதற்குச் சோழ வேந்தன் எத்துணையோ முயற்சிகள் செய்தும் பயனிலவாயின. நகரில் அவனால் நடக்கும் கொலை, களவுகள் கணக்கில் அடங்கா. காளன் என்றால் அந்நகரில் எவரும் மனங்கலங்குவர்; களவாடிய பொருள்கள் யாவும் பெளத்த சங்கத்தில் மதுபானத்திற்கும் மாமிசவுணவிற்கும் உபயோகமாகிவந்தன. மாமிசம் உண்ணுதலும் மதுபானம் செய்தலும் பாவம் என்றால், 'விலைகொடுத்து வாங்கிய மாமிசத்தை உண்ணலாம்' என்பது புத்தவாக்கியம் என்பார்கள். அவர்கள் செய்யும் தீய செயல்கள் ஒவ்வொன்றிற்கும், புத்தவாக்கியங்களை எடுத்துக் கூறிச் சமாதானம் சொல்லுவர். அந்தச் சங்கத்தில் வந்துசேரும் பெளத்த பிக்ஷுக்கள், பிக்ஷுணிகள் பலர்; அங்கு நடக்கும் குற்றங்களைக்கண்டு, அதற்கு மனஞ்சகியாமல் ஓடிவிடுவதும் உண்டு. அவ்விதம் தெரியாமல் ஓடுபவர்களால் சங்கத்திற்குக் கெடுதி விளையும் என்று தோன்றினால், அவர்களை அந்தரங்கமாய்க் கொன்றுவிடுவது வழக்கம்.

காதலுக்குக் கண்ணுண்டோ!

மஹாபிக்ஷுவாகிய புத்தமித்திர அடிகள் நாள்தோறும் கேட்பவர் உள்ளம் மகிழும்படி, பெளத்த தர்ம விஷயங்களை எடுத்துக்கூறுவார். கேட்பவர்கள் மெய்மறந்து கேட்பார்கள். ஸத்துகன் தொடர்பு ஏற்பட்டது தொடங்கி பத்திரையும் வசந்தியும் நாள்தோறும் அங்கே வரத் தவறுவதில்லை. தொடக்கத்தில் அறவுரைகேட்கும் காரணத்துடனும், ஆவலுடனும் வந்தனர். இப்போதோ, பத்திரை, ஸத்துகனுடன் குலாவி மகிழ்வதற்கு வரலானாள். பாலக பிக்ஷுவுடன் கூடிக் குலாவுதற்கு வரலானாள் வசந்தி. வசந்தி பாலகனுடன் தொடர்பு கொண்டிருப்பதைப் பத்திரையும் ஸத்துகனும் அறியாமலில்லை. "தன்னைப்போன்ற ஓர் இளமங்கை தானே அவள்!" என்று எண்ணிப் பேசாதிருந்தாள் பத்திரை. "கைம்பெண்ணாகிய நானும் சங்கத்தில் அறவுரை கேட்கச் சேர்ந்து கொள்கிறேனே" என்று வசந்தி அன்று கூறியதற்குக் காரணம் அவள் பாலகனிடம் கொண்டகாதலே என நாளடைவில் பத்திரைக்குப் புலப்பட்டது. அதுகுறித்து வசந்தியைப் பத்திரை பரிகாசம் செய்வதும் உண்டு. 'காதலுக்குக் கண்ணுண்டா?' எனத் தனக்குள் தானே கூறிச் சமாதானம் செய்து கொள்வாள் பத்திரை.

அந்தப் பெளத்த சங்கத்தினரின் தீய கொள்கைகள் உண்மையில் பத்திரைக்குப் பிடிக்கவில்லை. "பெளத்தமதத்தின் உண்மை என்ன?" என்பதை அறிவதற்கு ஆவல் கொண்டிருந்தாள். ஆனால் அதைப் பூர்த்திசெய்யத் தகுதிவாய்ந்தவர் எவரும் அங்கு இல்லை. அந்தச் சங்கத்தைப்பற்றி அவளுக்கு உள்ளூர வெறுப்பிருந்தாலும், ஸத்துகனிடம் கொண்ட தீராக் காதலால் அவை அவள் மனத்தை வருத்தவில்லை. பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும், கள்குடித்தலையும், மாமிசம் உண்ணுதலையும் காணும்போது முற்றும் அவள் வெறுப்புக்கொள்வாள். தன் தந்தை மும்முடி நாய்க்கன் அவ்வப்போது கூறிய வார்த்தைகள் அவள் ஞாபகத்திற்கு வரும். அப்போது மனம் வருந்துவாள்; ஸத்துகனை நினைக்கும்போது மனம் குளிரும். 'தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்?' 'ஊன் தின்பவர்க்கு அருளாட்சி இல்லை' என்பன பொய்யா மொழியன்றோ? மும்முடி நாய்க்கன் ஸத்துக சங்கத்தைப் பற்றிக்கோள் கூறும்போது, பத்திரை மனம் ஒவ்வாமல் ஸத்துக சங்கத்தின் சார்பாகவே பரிந்து பேசுவாள். பன்முறை ஸத்துகனும், மும்முடிநாய்க்கனுக்குத் தக்க சமாதானம் சொல்வான்.

மறுமொழி இல்லை

"விலைக்குப் பெற்ற மாமிசத்தை உண்ணலாம் என்று புத்த பகவானே கூறியுள்ளார்" என்று ஒருநாள் ஸத்துகன் சொன்னான். அப்போது மும்முடிநாயக்கன்: "தின்னுதற் பொருட்டுக் கொலை செய்யாராயின், விலைப்பொருட்டு மாமிசம் தருவாரும் இல்லை" என்று கூறினான். அதற்கு மறுமொழி கூறாமலே சென்று விட்டான் ஸத்துகன்.

ஸத்துக மந்திரத்தின் தீச்செயல்களைப் பொருட்படுத்தாமல் பத்திரை பழகிவந்தாள். பல பெண் கொலைகளைக் காளன் செய்துள்ளான்; பல இடங்களில் களவுகள் செய்துள்ளான்; அவனைக்கொண்டே ஸத்துக மந்திரத்தில் பல தீய காரியங்கள் மிகுதிப்பட்டன. அவற்றை ஒழிப்பதற்கும், காளனைப் பிடித்துச் சிறை செய்வதற்குமே, இளந்தத்தன் ஒற்றர் தலைவனாக அரசனால் நியமிக்கப்பட்டான். அவனுக்கு உதவியாக அச்சனும், பாண்டிய நாட்டிலிருந்து புதிதாக வந்த ஜயதுங்கனும் நியமிக்கப்பட்டனர். அவர்கள் பலவாறு முயன்றும் காளனைப் பிடிக்கமுடியவில்லை. ஸத்துக சங்கத்தின் உள் நிகழ்ச்சிகளையும் அறிய இயலவில்லை. ஸத்துகனின் முன்னறிவே அவர்கள் முயற்சி வீணாகிவந்தமைக்குக் காரணம். எனினும், முற்றும் அவர்கள் முயற்சி வீணாகவில்லை. ஸ்த்துக மந்திரத்தில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் அறிய முடியாமற் போயினும் உபாயத்தால் ஓரிரு நிகழ்ச்சிகளை அறிந்து கொண்டான் இளந்தத்தன். பத்திரையின் தொடர்பு ஸத்துகனுக்கு ஏற்பட்டபின்பு - அணிமையில் நிகழ்ந்த இரண்டு சம்பவங்களை எளிதில் அறிந்து அரசனிடம் உணர்த்தினான்

பிக்ஷுவின் காதல்

ஒருநாள் அந்தச் சங்கத்தில் உள்ள லோகபந்து என்ற பெளத்தபிக்ஷு ஒருவர் பிக்ஷுணிகளுள் ஒருத்தியாகிய சந்திரகலா என்பவளைக் கண்டு காதல் கொண்டார். அப்போது அந்தப் பிக்ஷுணி தனிமையாகப் புத்த தேவனைக் குறித்துத்தியானம் செய்திருந்தாள். லோகபந்து காதல்மிக்கவராய் சந்திரகலாவிடம் அணுகிக் காதல் மொழிகளைக் கூறினார். அதைக் கேட்டு உள்ளம் துணுக்குற்றுக் கலங்கினாள் பிக்ஷுணி.

"அடிகளே! போதிநாதன் ஆலயத்தில் இவ்வாறு துறவியாகிய தாங்கள் பேசலாமா? இவ்வாறு நடந்துகொள்ளலாமா? அடியேன் பேசியதற்கு மன்னிக்கவும்" என்று கூறி அகன்று நின்றாள். லோகபந்து புன்னகையுடன் அவள் அருகில் சென்று, "பேதாய், பெளத்தத் துறவிகளுக்குக் காதல் உண்டாதல் அரிது. ஆதலால் அவர்களுக்கு எவ்விடத்தும் எப்போதும் இது நிகழலாம்; அதில் குற்றம் சிறிதும் இல்லை" என்றார். பிக்ஷுணி - சந்திரகலா மனங்கலங்கி வேறுபுறம் ஓடினாள். லோகபந்துவும் அவளைத் துரத்திக்கொண்டு ஓடினார். முடிவில் மஹா பிக்ஷுவாகிய புத்தமித்திரரிடம் சென்று, இருவரும் நிகழ்ந்ததைக் கூறினர். புத்தமித்திரர் பிக்ஷுவின் செயலில் குற்றமில்லை என்று கூறினர். அல்லாமல், பிக்ஷுவை அவமதித்ததற்காகச் சந்திரகலாவுக்குத் தண்டனை விதித்தார். அதைக் கேட்டுக் கோபம் கொண்ட பிக்ஷுணி எதிர்வாதம் செய்து அவரது கொள்கையை மறுத்தாள். உடனே புத்தமித்திரர் கோபம் கொண்டு "இவளை இருட்டறையில் அடைத்து வைத்து இரவில் காளனைக் கொண்டு தக்கவாறு தண்டிக்கச் சொல்லுங்கள்" என்று உபாஸகர்களிடம் கூறினார். உடனே அவள் இருட்டறைக்குக் கொண்டுபோகப் பட்டாள்.

காளனின் கட்டளை

அன்றிரவு பெளத்த சங்கத்தின் உட்புறத்தில் நிலவறையில் காளன் முன் நிறுத்தப் பட்டாள் சந்திரகலா. அவளைக் காளன் விசாரித்தான். காளனைக் கண்டதும் உயிரற்றவள் போல் ஆனாள் பிக்ஷுணி. "பிக்ஷுணிகள் யாரேனும் குற்றம் செய்தால் நமது உபவனத்தில் இரவு முழுவதும் தண்ணீர் இறைக்கவேண்டும்; பகலில் மணல் சுமக்க வேண்டும். ஆதலால் இந்தத் துஷ்டையையும் அவ்வாறு தண்டியுங்கள்; தண்ணீர் இறைக்கத் தவறினால், படுகுழியில் தள்ளி சமாதி செய்யுங்கள்" என்று கட்டளை இட்டான். உடனே வீரர்கள் அவளை அழைத்துச் சென்று மதில் சூழ்ந்த, பெரிய அவ்வுபவனத்திற்குத் தண்ணீர் இறைக்குமாறு துன்புறுத்தினர். சந்திரகலா தன்னால் இயன்றவரையில் நீர் இறைத்து விட்டுச் சோர்வுற்றாள். வீரர்கள் வைதும் அடித்தும் துன்புறுத்தினர். அதைக்கண்டு மனம் பொறுக்காதவளாய் உயிரைவிடத் துணிந்து, "நான் இனி தண்ணீர் இறைக்கேன்; என் உயிரை மாய்த்து விடுங்கள்" என்று கூறிக் கீழே விழுந்து மூர்ச்சையானாள். இரக்கமற்ற அவ்வீரர்கள் அவளைத் தூக்கிச் சென்று படுகுழியில் போட்டு மேலே மணல் கொண்டு மூடி விட்டனர். உடனே அதைக் காளனிடம் அறிவித்தனர். அதைக்கேட்டுக் காளன் சிறிதும் வருந்தி இரக்கம் கொள்ளவில்லை. பலகொலைகளைச் செய்த அவன் மனம் கல்லாகியிருந்தது. இந்தப் பெண் கொலை விவரம் இளந்தத்தனுக்கு எவ்வாறோ எட்டிவிட்டது. மேன்மேலும் ஒற்றறிவதற்கு அவன் முயற்சி எடுத்துக்கொண்டான்.

மாகதி மீது மையல்

மற்றொருநாள் அதேபோன்ற சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அந்தச் சங்கத்தில் அணிமையில், புதிதாக மாகதி என்ற கைம்பெண் ஒருத்தி வந்து சேர்ந்தாள். அவள் மிக்க அழகுடையவள். அவள் மஹாபிக்ஷுவான புத்தமித்திரரிடம் உபதேசம் பெற்றுப் பிக்ஷுணியானாள். அந்த மாகதியைக் கண்டு காதல் கொண்டான் அமிர்த சந்திரன் என்ற பெளத்த பிக்ஷு. புத்தமித்திரருடைய மாணவர்களில் அவன் முதன்மையானவன். அவன் மாகதியிடம் காதல்கொண்டு நடு இரவில், அந்தப் பிக்ஷுணியிருக்கும் அறைக்குத் தனியே சென்று அவளிடம் தன் வேட்கையை உணர்த்தினான். அவன் தன்மையைக் கண்ட மாகதி ஆச்சரியமும் அச்சமும் கொண்டாள்.

"அடிகளே, கொலை, களவு, கள், காமம், பொய் என்பன ஆகா என்று புத்த பகவான் கூறியுள்ளாரே! தாங்கள் இத்தகைய தீச்செயலுக்கு உட்படலாமா? நீண்ட நாட்களாகத் தாங்கள் துறவியாக விளங்குகிறீர்கள். நானும் துறவொழுக்கம் கொண்டுள்ளேன்; ஆதலால் தங்கள் செய்கை பாபத்தைத் தரும்" என்றாள்.

"நங்காய், நீ இந்தச் சங்கத்திற்குப் புதியவள்; ஆதலால், புத்தர் அருளிய வினயபிடகத்தின் உண்மையை நீ உணராய்!"

"அடிகளே! வினயபிடகத்தின் உண்மையை உணரேன்; எனினும் பொதுவாக பெளத்த தருமங்களை அறிவேன்"

"நீ உண்மை அறியாமல் பேசுகிறாய்; நான், கூறுவதைக் கேள்."

"அடிகளே, தாங்கள் கூறும் அறவுரையைக் கேட்க ஆயத்தமாய் இருக்கிறேன்"

குற்றமுடையதல்ல

"வினயம் என்பது உலக வர்ஜியம், பிரக்ஞப்தி வர்ஜியம் என இருவகை. லோக வியவகாரத்திற்கு லோகம் நீக்கியவற்றை நீக்குதலே உலக வர்ஜியம். கடவுள் தனது திவ்ய ஞானத்தால் குற்றமுண்டு என்று நீக்கியவற்றை நீக்குதலே பிரக்ஞப்தி வர்ஜியம். ஆகவே, கொலை, களவு, காமம், கள், பொய் என்பன உலக வர்ஜியமே; அவை பகவானால் குற்

(13-ம் பக்கம்)

திட்டமான வாழ்க்கை

★

வ. ரா.

நண்பரின் வருகைக்கு காத்துப் பயனில்லை என்பது போல ஆகிவிட்டது. அவருக்காக எவ்வளவு நேரம் காத்துக்கொண்டிருக்கிறது? இனி அவர் வரமாட்டார் என்று நினைக்கும்பொழுது, அவர் வந்து சேர்ந்தார். அவர் உடம்பெல்லாம் ஒரே பிராண்டல் மயம். ரத்தக்கறை படிந்த துண்டு, அவருடைய தோளின் பேரில் இருந்தது. 'என்ன! யுத்தமா?' என்று அவரைக் கேலி செய்தேன்.

நண்பர்:— கொரில்லா (குரங்கு) சண்டை!

நான்:—பிரான்ஸ், ஸெக்கோஸ்லவேக்கியா, ரஷ்யாவின் சில பகுதிகள் இந்த இடங்களில் தான், குரங்குச் சண்டை நடந்து வருவதாகக் கேள்விப்படுகிறோம்.

நண்பர்:— சென்னையிலும் இப்பொழுது அந்தச் சண்டை நடந்து வருகிறது!

நான்:—ஜப்பானியர்கள் உள்ளே நுழைந்து விட்டார்களா, என்ன!

நண்பர்:—நிஜக் குரங்குச் சண்டை, ஸ்வாமி! குரங்கு மாதிரி போடும் சண்டை அல்ல!

நான்:—அதென்ன?

நண்பர்:—சென்னையில், இப்பொழுது ஏகப்பட்ட குரங்குகள் சுயேச்சையாக லீலை புரிகின்றன என்பது உமக்குத் தெரியாதா? குரங்கின் கண்ணில் படுகிற அத்தனை சாமான்களும் அப்படியே 'அபேஸ்'!

நான்:—குரங்குகள் அவைகளைத் தூக்கிக்கொண்டு போய் விடுகின்றனவா?

நண்பர்:—அதை ஏன் கேட்கிறீர்கள்? சாமான்களை மட்டுமா? குழந்தைகளைக்கூட தூக்கிக்கொண்டு போய்விடுகின்றன!

நான்:—அவைகளை விரட்டப்படாதோ?

நண்பர்:— அவைகளை விரட்டி, யுத்தம் செய்ததால் தான், இத்தனை பிராண்டல்கள், ரத்தக்கரைத்துணி! வ. ரா. நான் குரங்கோடு சண்டை போடுவதை, டிக்கட்டு வாங்கி வேடிக்கை பார்க்க வந்தவர்களைப் போல, நூறுபேர்கள் பார்த்துக்கொண்டு எட்டத்தில் நின்றுகொண்டிருந்தார்களேயல்லாமல், கிட்டத்தில் ஒரு 'ஈ, காக்கை,' வரணுமே! என்ன! உயிர் அவ்வளவு வெல்லமா?

பூமிக்குப் பாரம்

நண்பர் இதைச் சொல்லச் சொல்ல, என்க்குச் சிரிப்பும் துக்கமும் கலந்து வந்தன. நான் சொல்லுவதைப்போல, அவரும் ஜனங்களின் பேரில் பழி சுமத்தினதைப் பற்றிச் சிரிப்பு! குரங்குக்கு பயந்து ஒதுங்கி நிற்கும் நபர்கள் பூமிக்கு பாரம்தானே என்ற துக்கம்!

நான்:—நீரும் நம்மவர்களைப் பற்றி, இவ்வாறு அவதூறு பேசத் துவக்கிவிட்டீரா! நீர் இப்படிச் சொன்னால், வ.ரா. வோடு பழகின 'சகவாச தோஷம்' என்பார்களே!

நண்பர்:—நடந்ததைக் கூட சொல்லக் கூடாதோ! பத்துப்பேர் சேர்ந்திருந்தால், குரங்குகளை அப்படியே பிடித்திருக்கலாமே! எனனை ஒண்டியாகவிட்டு, அவர்கள் ஆழம்பார்க்கலாமா? அது நியாயமா?

நான்:—உலகத்திலே, நியாயத்தைப் பார்த்து காரியம் செய்யும் காலம் மலையேறிப் போய்விட்டது. வலியான் தனது வலிமையின் இறுமாப்பினால், மனம் போனவாறு, காரியம் செய்கிறான். மெலியுவன், அவனுக்குப் பயந்து, வேலைசெய்கிறான். தன்னிச்சையும், பயமும் தான் உலகத்தை தற்போது வதைத்து ஆட்டிவரும் மூல சக்திகள்.

நண்பர்:—இப்படியே உலகம் போய்க் கொண்டிருந்தால்-?

நான்:—ஈசுவரன் பார்த்துக் கொள்ளுகிறான் என்று பக்தனைப் போலத் தன்னை பாவித்துக்கொண்டு, அசல் கோழை உளறி அட்டஹாசம் செய்கிறான். அரைகுறைக் கோழைகள் எல்லாரும் அவனுக்கு 'சபாஷ்' கொடுத்து, ஆரவாரம் செய்கிறார்கள்.

நண்பர்:—கோழைத்தனத்துக்கு மருந்து கிடையாதா? மாற்று இல்லையா?

நான்:—கோழைத் தனத்துக்கு மாற்று தைரியம்!

நண்பர்:—கேலி செய்கிறீர்களே! தைரியம் எப்படி வரும் என்று கேட்கிறேன்?

நான்:—தைரியத்தை பயிற்சி செய்து கொள்ள வேண்டும். பயிற்சி செய்யாமல், "ஆண்டவன் இருக்கிறான்; அவதாரம், வால் நக்ஷத்திரத்துக்கு அடுத்தால் போல தோன்றுவது நிச்சயம். அரக்கன் அழிவான், என்றும் அரசாங்கம் பார்த்துக் கொள்ளும் என்றும் பேதையைப் போல பேசிக்கொண்டிருப்பதால், தைரியம் வந்துவிடாது. தவிர, தைரியத்தைப்பற்றி, மேடையில் பிரசங்கம் செய்தாலும், கொட்டாவி விட்டுக்கொண்டு, நண்பர்களுடன் விவாதம் செய்வதாலும், தைரியத்தை பழக்கிக் கொள்ள முடியாது.

எப்படி வரும்?

நண்பர்:—தைரியத்தைஎப்படி பழக்கிக் கொள்ளுவது?

நான்:—இருட்டில் துணையில்லாமல் போனால், ஒரு வகை மனோ திடம் உண்டாகும். நோயாளியின் பக்கத்தில் இருந்து தொண்டு செய்தால், மீனு நிம்மதி ஏற்படும். அதிலிருந்து தைரியம் உண்டாகும். தகாத காரியத்தைச் செய்யும் நபருக்கு கீழ்ப்படியாமல், அவனை எதிர்த்துப் போராடினால், தைரியம் உண்டாகும். தவறு என்று தெரிந்த ஜன சமூகப் பழக்கத்தை விட்டுவிட்டு, புதுமாதிரிவாழ்க்கைநடத்தத் துணிந்து, ஜனங்களின் அவதூறுக்கு ஆளானால், அதனால் ஒருவனுக்கு தைரியம் உண்டாகும்.

நண்பர்:— இதற்குத்தான், பயிற்சி என்று சொல்லுகிறீர்களோ?

நான்:—நீர் குரங்கோடு 'யுத்தம்' செய்து, பிராண்டல்களையும் ரத்தக் கரைகளையும் சன்மானம் பெற்றதும் பயிற்சிதான்.

நண்பர்:—சரித்திர புருஷர்களுக்குள், உங்களுக்குத் தெரிந்த வரையில், தைரியத்தில் யார் மாண்பு கொண்டவர் என்று தோன்றுகிறது?

நான்:—தாங்கள் கொண்டிருந்த கொள்கைக்காக, உயிரை புன்னகையுடன், நீத்தவர்கள் அனைவரும் தீரர்கள்தான். ஏசுவின் தைரியம் என் உள்ளத்தை அப்படியே கலங்கும்படி செய்கிறது. மகம்மது நபியின் தைரியமும் மாண்பு மிக்க தைரியமாகும். கீழ்ப் படித்தரத்தில் வந்தால், சர்ச்சிலின் தைரியமும் போற்றத்தக்கதே. ஆனால், மகாத்மா காந்தியின் தைரியத்தின் அளவைப்போல, அழகைப்போல, ஆற்றலைப்போல வேறு யாருடைய தைரியத்தையும் சொல்லுவதற்கில்லை. ரஷ்யாவின் நிகரில்லாத தலைவர் லெனினுடைய தீரம்கூட மகாத்மாவின் தைரியத்துக்கு சற்று அடக்கம்தான்.

நான்:—தைரியம் என்பது என்ன? கோபுரத்திலிருந்து மண்ணில் குதித்து, தலை சுக்கு நூறாகச் செய்து கொள்ளுவதும் தைரியம் தான். துப்பாக்கி முனையில், மார்பைக் காட்டிய சுவாமி சிரத்தானந்தரின் செயலும் தைரியம்தான். பிரான்ஸிலிருந்து உருத்தெரியாமல் ஆள் மாறாட்டமாக, போலீசாருக்குத் தெரியாமல், இந்தியாவுக்கு வந்த ஸ்ரீ வ். வெ. சு. அய்யர் அவர்களின் நெஞ்சழுத்தம் போற்றுதற்கு உரியது. ஐரிஷ் தலைவர் டவாலரா, பிரிட்டிஷ் சிறையிலிருந்து தப்பியோடியது பிரமிக்கத்தக்க செயலாகும்.

நண்பர்:—ஒவ்வொன்றும் ஒரு வகையான தைரியம். மகாத்மாவின் தைரியம், எல்லாவற்றையும்விட உயர்ந்தது என்று எப்படிச் சொல்லுகிறீர்கள்?

நான்:—மனக் கசப்பும், மன ஒதுக்கமும், மறைத்தலும், தப்பித்துக்கொள்ள ஆசையும் இல்லாமல், வாழ்வையும் சாவையும் சமமாக மதித்து, வாழ்வின் மறுபுற ஓட்டம் தான் சாவு என்பதைத் தெளிந்துகொண்டு, வாழ்க்கை இன்பமயமானது என்பதை உணர்ந்து கொண்டிருந்தும், உலகத்தின் நன்மைக்காக, எந்த உயிருக்கும் தீமை இல்லாத வகையில், தனது உயிரை, புன்னகையுடன் தியாகம் செய்ய நினைக்கும் தைரியத்துக்கு இணையே கிடையாது.

நண்பர்:—நம்ம தேசத்தைப் பற்றி, ஒரு வார்த்தையாவது நல்லதாகச் சொல்லுகிறீர்களே!

நான்:—ஆனால், காந்தியின் தைரியத்தை, வெறும் சாதனத்தால், அடைந்துவிட முடியாது. பயிற்சி மட்டும் போதாது. எனவே, பயிற்சியால் ஏற்படக்கூடிய தைரியத்தையாவது நம்மவர்கள் அடையப் பெற்றால்தான், இந்த நாட்டுக்கு கதிமோக்ஷம் ஏற்படும்.

கதிமோக்ஷம் எப்பொழுது?

நண்பர்:—நம் நாட்டுக் கனி என்று மகாத்மாவைப் புகழ்கின்றீர்களா?

அட்டைப் படம்

★

ஸ்ரீ காசியில் மணிகர்ணிகா கட்டம்.



சாயாதான் அவனுக்கு உயிர்

தீயணைக்கும் படையினர் இந்தியாவின் அஞ்சா நெஞ்சம்படைத்த தீரர்கள். ஸிவில் தற்காப்பைச் சேர்ந்த மற்றவர்களும் அப்படித்தான். அவர்கள் எல்லோருக்கும் சாயா என்றால் உயிர். தீயணைக்கும் படையினருக்கு அக்னியோடு போராடும் பலமும் தெம்பும் கொடுப்பது தேயிலைதான்.

அவனுடைய உதாரணத்தைப் பின்பற்றி கஷ்டத்தை மறக்க இந்தியத் தேயிலையை சாப்பிடுங்கள்.

மனச்சோர்வு காலங்களில்

இந்தியன் டீயை குடியுங்கள்

இந்தியன் டீ மார்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது I K 185

இந்தியத் தேயிலையில் மிகச்சிறந்தது லிப்டன்ஸ்

ஜாகூஜா, வெள்ளைலேபில், தேயிலைப்பெண் தரங்கள்.

சந்தாதாரர்களுக்கு

அறிவிப்பு.

1943-ஏப்ரல் முதல் தேதியிலிருந்து 'சுதேசமித்திரன்' வாரப் பதிப்பின் சந்தா கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டிருக்கிறது.

இந்தியா, சிலோன்.

மூன்று மாதம்	ரு.	2 12
ஆறு மாதம்	,,	5 0
ஒரு வருடம்	,,	9 12
தனிப் பிரதி	,,	0 3

அயல் நாடுகளுக்கு.

ஒரு வருடம்	ரு	19 8

மூன்று மாதங்களுக்குக் குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப் படமாட்டாது. கையிருப்பிலுள்ள சந்தா கணக்குகள் புதிய விகிதப்படி மாற்றப்படும்.

ஸர்க்குலேஷன் மானேஜர்.

தமிழ் நாட்டிற்கு சகுந்தலை படத்தை அளித்த சந்திர பிரபா ஸினிடோன் 1943-ல் அளிக்கும் நட்சத்திரப் படம்

மீரா

★

M. S. சுப்புலக்ஷ்மி

சித்தூர் நாகையா N. S. கிருஷ்ணன் K. சாரங்கபாணி

செருகளத்தூர் சாமா T. A. மதுரம் T. S. பாலையா

மற்றும்

பேபி ராதா

(சகுந்தலையில் பரதனாக நடித்த குழந்தை)

டைரக்ஷன்; ★ ஸ்டுடியோ:

எல்லிஸ் R. டங்கன் நியூடோன் ஸ்டுடியோஸ்.

இது

சந்திர பிரபா ஸினிடோன்

மற்றும்

நியூடோன் ஸ்டுடியோஸ்

சேர்ந்து தயாரிக்கும் படம்.

"எப்பொழுதும் உபயோகியுங்கள்"



வாசு சங்கு மார்க் பட்டணம்பொடி

உலகமெங்கும் புகழ்பெற்றது

வாசு பூபேந்தரநாத் & கோ. மதிராஸ் பெஜவாடா.

இனும் வைத்திய வித்தை

பூர்ண ஆரோக்கியம், இன்ப வாழ்க்கை, நல்ல சந்ததிக்கும் வீர்ய...

மதன மஞ்ஜரி பார்மஸி, 184 சைனா பஜார், மதராஸ்.

காந்தி ஜோஸியர்.

ஒரு வருஷப்பலன் மாதவாரி எழுத ரு. 3. ஆருடம் 5 கேள்விகளுக்கு பதில் ரு. 1. வி. பி. அணா 5. ஜனன கால விவரம் OR எழுதும் நேரம் தேவை.

ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி. S1

பாரதியார் - புதுவை நிகழ்ச்சிகள்

புயற் காற்று

★

ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி

புதுச்சேரியில் நள வருஷம் கார்த்திகை மாதம் 8-ம் தேதி புதன்கிழமை இரவில்-அபாரமான புயற்காற்றடித்தது. பெரிய, கிழவனுர்கள் தங்கள் வாழ்நாளில் அதுபோன்ற புயலைப் பார்த்ததில்லை என்று கூறினுர்கள். (அதாவது நூறு வருஷங்களாக) சாயங்காலத்திலிருந்தே காற்றுத் தேவன் ஊத ஆரம்பித்துவிட்டான். எப்படிப் பட்ட காற்று! கூகூ வென்று விண்ணைக் குடைந்திடும் காற்று. கும்பிருட்டு. என் தந்தையார் இரவுகளில் அரவிந்தர் வீடு சென்று வேத ஆராய்ச்சி செய்வார். அங்குதான் இராப் போஜனத்தை அனுப்புவோம். இரவு ஒன்பது மணிக்குமேல் தான் அவ்விருவரும் ஆராய்ச்சியிலீடுபடுவார்கள். பின்பு விடியற்காலை ஐந்து மணி வரைக்கும் அவ்விதமே உட்கார்ந்திருப்பார்கள். இருவருக்கும் களைப்போ, சோர்வோ, உண்டாவதில்லை. அன்றும் வழக்கம்போல் மாலை ஆறு மணிக்குத் தந்தையார் புறப்பட்டார்.

என் தாயார்:—இன்று போகாவிட்டால் என்ன? மழையும் காற்றுமாயிருக்கிறதே!

தந்தை:—ஒன்றுக்கும் அஞ்சாத நீ இந்த இடிக்கும் மழைக்கும் பயப்படப்போகிருயா?

தாயார்:—இல்லை. என் மனம் ஏதனுலோ இன்று அதைர்யமடைகிறது.

தந்தை:-ஒரு நல்ல காரியம் செய்யப்போனுல் அதற்கு எத்தனை தடை!

இதற்குள் நான் என் தங்கை பாப்பா எல்லாருமாகச் சேர்ந்து கொண்டு அப்பா போவதை நிறுத்தி விட்டோம். தந்தையும் இதைக் கேட்டு மனம் சலனமடைந்தார். சமாதானமின்றி அப்படியும் இப்படியும் உலாவினுர். சரியாகப் போஜனமும் அருந்தவில்லை. ஒன்பது மணியிருக்கும். வாயு தேவன் சீறி எழுந்தான். கோபமூட்டப்பெற்ற புலியைப்போல. பிரளயத்தில் ஏற்படும் என்கிருர்களே அதுபோல் மழையும், தண்ணீர் தெருக்களில் இடுப்புவரை ஓடுகிறது. புதுவையில் தென்னை மரங்கள் அதிகம். காற்று ஆரம்பித்ததும் சடசடவென்று மரங்கள் சாய்ந்தன. வீடுகள் இடிந்து விழுந்தன. மரங்கள் விழுந்ததால் மின்சாரக் கம்பிகள் அறுந்து விளக்குகள் எல்லாம் அணைந்து ஊர் பூராவும் ஒரே அல்லோலகல்லோலம். நாங்கள் அன்றுதான் வேறு வீட்டுக்கு குடிவந்திருந்தோம். அதாவது (பழைய வீட்டிற்கு எதிர் வீடு) எங்கள் வீட்டு மாடியிலும் நாலைந்து மரங்கள் சாய்ந்தன. தந்தையார், தாயாரிடம் சொன்னுர்:—

பெண்கள் தெய்வீகத்தன்மை பொருந்தியவர்கள் என்பதை இன்றுதான் பிரத்யக்ஷமாகக் கண்டேன். அதனுல்தான் நான் இன்று வேத ஆராய்ச்சிகூட முக்யமில்லை, உன் மனதில் ஏதோ ஸம்பவம்நடக்கும் என்று தோன்றி விட்டது. கஷ்டப்படும் போது எல்லாரும் ஒன்ருயிருந்தே அதை அனுபவிப்பது நல்லது என்பதற்காகத்தான் நான் போகாமலிருந்தேன்.

தாயார்:—என் மனம் இன்று காரணமில்லாமல் கலங்கிற்று. ஏதோ ஆபத்து ஏற்படாதிருக்கவேண்டுமே என்றுதான் உங்களை வழிமறித்தேன்.

தந்தை:—வானம் உறுமுகிறது. உலகம் நடுங்குகிறது. நாம் இப்பொழுது ஏதாவது செய்ய முடியுமா? பராசக்தியைத் துதித்து துன்பம் வராமல் காக்கச் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை.

தாயார்:—ஐயோ! நேற்று நாமிருந்த வீட்டில் தென்னை மரங்கள் சாய்ந்து மாடியின் ஒரு பாகம் இடிந்து விழுகிறதே! எல்லாரும் அலறும் சப்தமும் அதற்கு மேல் வாயுவின் உறுமலும் என்னை திக்பிரமையுடையச் செய்கிறதே! இது என்ன காற்று! இது என்ன இன்று யுக முடிவா? தெரியவில்லையே!

பழநி ஆண்டவர் பங்குனி உத்திர திருவருட்பிரசாதம் பெற ரூ. 1. மாதக் கார்த்திகை தோறும் தங்கள் நாம நக்ஷத்திரத்தால் அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்ப வருட சந்தா ரூ. 7. ஆண்டவருக்கு விசேஷ அபிஷேக, அர்ச்சனை, ஆராதனைகள் செய்து பஞ்சாமிர்த, சந்தன, விபூதி, பிரசாதங்கள் பார்சலில் பெற ரூ. 10.

பழநி மஹாத்துவம் புக் படங்களுடன் 4 அணு.

P. நடராஜ பண்டாரம்,
மலைக்கோவில் அய்யன்மிராஸ்,
பழநி. S. I.



12-5-1882-ல் பிறந்தவர். 2-5-43-ல் அறுபதாம் ஆண்டு நிறைவு - நாள் அடையும் பண்டிதர் வ. மு. இரத்தினேச்வரய்யர்



கன்யாகுமரி க்ஷேத்திரம்

இந்தியாவின் தென்கோடி - குமரி முனையிலுள்ள கன்யாகுமரி ஆலயம் பிரசித்தி பெற்ற புண்ய க்ஷேத்திரமாகும். இரு கடல்கள் கலக்கும் இச்சங்கமத்தில் வருஷ முழுவதும் பல்லாயிரக்கணக்கான மக்கள் நீராடுகின்றனர்.



ஹமாமின் புதியவடிவத்தை கவனிக்கவும்.
டாம்கோ விற்பனை இலாகா,
நெ. 1, வாரன் ரோட், பீமண்ணபேட்,
மைலாப்பூர் - மதராஸ்.

A TATA PRODUCT

இந்தியாவின் எண்ணிறைந்த ஜனங்களும் ஹமாம் ஸோப்பை உபயோகித்து ஸ்நான சுகத்தை அனுபவிக்கிருர்கள். ஹமாம் உடலைச் சுத்தம் செய்து மனதிற்கு உல்லாசத்தையளிக்கிறது.

ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு

TS. 2944.

தந்தை:—"செல்லம்மா! இவ்வளவு தூரம் மனதைக் குழப்பிவிடாதே! இதோ ருக் வேதம். படித்துப் பொருளுரைக்கிறேன். அரவிந்தர் வீட்டில் வாயுவின் ஸ்தோத்திரம்தான் படிப்பதென்று நினைத்திருந்தேன். இதோ பிரத்யக்ஷமாகவே அவனை தரிசித்தேன். ஒரு கெடுதலும் வராது. தேவியின் அருளால். அவள் சக்தி குமாரன்" என்று இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போதே சூருவளிக் காற்றடித்து, மழைத் தண்ணீர், யானைத் துதிக்கையில் பாய்ச்சுவது போல வீட்டுக்குள் வந்து விழுந்தது. காற்று ஜன்னல் கதவுகளை உடைத்து கண்ணுடிகளையெல்லாம் தூள் தூளாக்கி விளக்கையும் அவித்தது.

தாயும் தந்தையும் அந்த மாடியில் சற்று ஒதுப்புறமாய் எங்களை இருக்கச் சொல்லிவிட்டு, ரொம்ப சிரம்ப்பட்டு விளக்கேற்றி, சுற்றும், சாமான்களை வைத்து மறைத்தார்கள். ஒருவிதமாக விளக்கு அணையாமல் நின்றது.

தந்தை:— செல்லம்மா! ஊழிகாலத்து முடிவும் இவ்விதம் தான் இருக்கும். உலகம் ஜலப்ரளயம் ஓடும் நீர் அக்னித் தண்ணீர்! சக்தி காற்ருக மாறிவிடுவாள். சிவன் வெறிகொண்டிருப்பான். காற்று சீறி சிதறடித்து, ஆகாசத்தில் மின்னை விளைத்து, நீரை நெருப்பாக்கி, நெருப்பை நீராக்கி, நீரைத் தூளாக்கி, தூளை நீராக்கி, சண்டமாருதம் இந்த விதமாக காற்று யுக முடிவு செய்வான்.

காற்றே நம்மைக் காப்பான். மேகங்களை ஒன்ருேடொன்று மோதச் செய்து, இடிக்கப் பண்ணி, கடலைக் கலக்கி, மண்ணைப் புரட்டி விளையாடுகிருன்.

'காற்றே! ஒலியே! வலிமையே! உன்னை வணங்குகிறேன். காற்றே! உயிரே! அகில உலகத்திற்கும் உயிரளிக்கும் தேவனே! நீயே உயிர் என்ருல் உன்னுல் அதை அழிக்க முடியுமா? எனவே உயிர் அழியவில்லை. உன்னோடு கலக்கிறது. சிறிய உயிர் அகண்டமான உயிரோடு சேருகிறது. மரணம் இல்லை.

தாயார் இதுகேட்டு சிறிது தைரியம் பெற்ருர். இப்போதும் எங்களுக்கு அந்த ஸம்பவங்களை நினைக்கும்போது மயிர் கூச்சிடுகிறது. மெய் சிலிர்க்கிறது. பின்னும் மழையும் காற்றும் நிற்கவில்லை. தந்தையார் அந்த அற்புதத்தை, சக்தியின் விளையாட்டைக் கண்டு வியந்து பின் வரும் பாட்டைப் பாடிக் கொண்டு குதிக்கலானுர்.



K. K. வரதராஜன் — கமலம்

சேலம் செவ்வாய்ப்பேட்டை பிரபல நூல் வியாபாரி B. P. சின்னசாமி செட்டியார் குமாரத்திக்கும், செவ்வாய்ப் பேட்டை ராமசாமி செட்டியார் குமாரன் K. K. வரதராஜனுக்கும் சமீபத்தில் விவாகம் நடைபெற்றது.

திக்குகள் எட்டும் சிதறி தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தித்தோம்
பக்க மலைகளுடைந்து — வெள்ளம்
பாயுது பாயுது பாயுது — தாம் தரிகிட.
தக்கத் ததிங்கிட தித்தோம் — அண்டம்
சாயுது சாயுது சாயுது — பேய் கொண்டு
தக்கை யடிக்குது காற்று — தக்கத்
தாம் தரிகிட தாம் தரிகிட தாம் தரிகிட தித்தோம்
வெட்டி யிடிக்குது மின்னல் — கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது
கொட்டி யிடிக்குது மேகம் — கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச் சட சட்டச் சட டட்டா — என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையு மிடிய — மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா'!
அண்டங் குலுங்குது தம்பி — தலை
ஆயிரம் தூக்கி யச்சேனுடம் பேய்போல்
மிண்டிக் குதித்திடுகின்ருன் — திசை
வெற்புக் குதிக்குது வானத்து தேவர்
செண்டு புடைத்திடுகின்ருர் — என்ன
தெய்வீக காட்சியைக் கண் முன்பு கண்டோம்
கண்டோம் கண்டோம் கண்டோம் — இந்தக்
காலத்தின் கூத்தினைக் கண் முன்பு கண்டோம்
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்.

பின்பு காலை ஆறு மணிக்கு புயற்காற்று அடங்கிற்று.

(தொடரும்).

டால்டா விலைகள்

மூலப் பொருள்களின் விலைகள் அதிகரித்ததினுலும், வரி கொடுக்க வேண்டியிருப்பதினுலும், டால்டாவின் விலைகளை சிறிது உயர்த்தி யிருப்பதை, பொது ஜனங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிருேம். பம்பாய், சென்னை, கல்கத்தா முதலிய *முக்கிய நகரங்களில் டால்டா உபயோகிப்பவர்கள் ஏப்ரில் முதல் தேதியிலிருந்து கொடுக்கவேண்டிய சரியான விலைகள் பின் வருமாறு:—

சீல் டின் வரியுடன்

1 பவுண்டு	— அணு 12	5 பவுண்டு	— ரூ. 3-10
2 பவுண்டு	— ரூ. 1-8	10 பவுண்டு	— ரூ. 6-15

* பஞ்சாப், ஐக்கிய மாகாணங்கள், விற்பனைவரி, சுங்கம் வசூலிக்கப்படும் ஊர்களிலும், கோடைகானல் முதலிய மலை நாடுகளிலும் விலை சிறிது கூடுதலாயிருக்கும்.

டால்டா உபயோகிக்கும் பொது ஜனங்களின் நலத்திற்காக தயாரிப்பவர்களால் பிரசுரிக்கப்பட்டது.

DALDA

இந்தியாவின் பிரசித்தி பெற்ற சமையல் பொருள்

HVM. 25-168 TM THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD., BOMBAY

குழந்தைகளின் சரல் தலைக்கட்டி வியாதிகளுக்கு
பிரபல நிவாரணியான

"ஜம்மியின் லிவர்க்யூர்"

உபயோகியுங்கள்.

நோட்டீஸ்

எமது வைத்திய ஆலோசகர் கீழ்கண்ட இடங்களுக்கு விஜயம் செய்கிருர். அவரிடம் கீழ்கண்ட தேதிகளிலும் இடங்களிலும், காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரையும் மாலை 4 மணி முதல் 6-30 மணி வரையும் ஆலோசனை பெறலாம்.

இடம்		தேதி	விலாசம்.
காரைக்குடி	,,	28 & 29	ஏ வி ஸ் ஸ்டைல் புராவலாஸ் நம்பர்கள்
திருப்பத்தூர்	,,	30	S P [illegible] மெடிகல் மார்ட்
தேவக்கோட்டை	,,	31	மீனுக்ஷி ஸ்டோர்ஸ்
சிவகங்கை	ஏப்	2	மீனுக்ஷி & கம்பெனி

பரமக்குடி; மதுரை, பெரியகுளம், வத்தலகுண்டு, திண்டுக்கல்லுக்கும் விஜயம் செய்வார்.

ஜம்மி வெங்கட்ரமணய்யா அண்டு ஸன்ஸ்
ஸப் ஆபீஸ்: கும்பகோணம்.

D. K. வெங்கடேசன் — கனகரத்னம்

சேலம் செவ்வாய்ப்பேட்டை பிரபல நூல் வியாபாரி B. P. சின்னசாமி செட்டியார் குமாரத்திக்கும், ஆம்பூர் D. K. வெங்கடேசனுக்கும் சமீபத்தில் விவாகம் நடைபெற்றது.

குண்டலகேசி

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

றம் உடையுணை என்று கூறப்படவில்லை. ஆதலால் காமம் குற்றமுடையதல்ல''

"என்ன? காமம் குற்றம் உடையதல்லவா; தாங்கள் கூறுவது அதிசயம்!''

"பேதாய், இன்னும் கேள்; 'எட்காய் நீளம் காமமார்' என்பது புத்த வாக்கியம் அன்றோ? அல்லாமல், மதுபானம் செய்யும் சங்கத்தார் காமம் அடக்கி இருப்பரோ?''

"அடிகளே, தாங்கள் உண்மை கூறினலும், காமத்தால் பாவம் சம்பவிக்கும் என்பது வெளிப்படையன்றோ?''

"கிளி மொழியாய் கேள்; பொருள்கள் எல்லாம் க்ஷணந்தோறும் கெடுகின்றன என்பது புத்தர் வாக்கியம் அல்லவா? ஆதலால், காமம் ஆடினலும், அந்த க்ஷணத்திலேயே பாவம் மூந்நும் கெடும். ஆகவே, காமம் ஆடியவர் கர்மபந்தராதலும், அவருக்குப் பலாநுபவமும் இல்லை என்பது வெளிப்படை''

"அவ்வாறென்றால், கொலை முதலியனவும் குற்றம் இல்லையோ?''

"ஐயம் என்ன? கொலை முதலியன பரமார்த்த வகையால் குற்றம் இல்லை என்பதனுலேயே, லோக வர்ஜியம் என்று வியவகாரத்தால் கொள்ளப்பட்டது. ஆதலின் காமத்தால் உண்டாகும் பாவம் கணத்தில் கெடும்''

இவ்வாறு அமிர்தசந்திர பிக்ஷு தனது புத்தி சக்தியால் பலநியாயங்களை எடுத்துக் காட்டி மாகதியைத் தன் வசமாக்கினர். இளமங்கையாகிய அவளும் பிக்ஷுவிடம் மோகம் கொண்டு அவர் கூறிய நியாயங்களை ஏற்றுக்கொண்டாள். பின்னர் இருவரும் காதல் மிக்கவராய் உபவனத்திற்குள் சென்றனர். இந்நிகழ்ச்சியையும் எவ்வாறோ அறிந்து கொண்டான் இளந்தத்தன்.

ஒற்றுமையே இல்லை

இவ்வாறு பௌத்தமதத்திற்கே, பெரும் பழியைத் தருவனவாகிய தீச் செயல்களை ஸத்துகமந்திரத்தினர் செய்து வந்தனர். பௌத்தமஹாசங்கத்தில், இவைபோன்ற செயல்கள் சிறிதும் நிகழா. உயர்ந்த கொள்கைகளையுடையவர்களாயிருந்தனர் அவர்கள். வாய்மை நான்கையும் சீலம் ஐந்தையும் தாங்கிய பெருந்துறவிகள் பௌத்தமஹா சங்கத்தில் இருந்தனர். பௌத்தமஹா சங்கத்திற்கும், ஸத்துக மந்திரத்திற்கும் சிறிதும் கொள்கைகளில் ஒற்றுமையே இல்லை.

ஸத்துக மந்திரத்தில் நடக்கும் நேர்மையற்ற காரியங்களை அவ்வப்போது, காணக் காண, பத்திரைக்கு வெறுப்பு அதிகமாயிற்று. பௌத்த மதத்தில் கூட சந்தேகம் உண்டாயிற்று அவளுக்கு. ஆனல், ஸத்துகனுடைய இன்பத்திலே மூழ்கி எல்லாவற்றையும் மறந்திருந்தாள். பத்திரையைக் காட்டிலும் பன்மடங்கு சந்தேகம் கொண்டிருந்தாள் வசந்தி. அவளும் அந்தபாலக பிக்ஷுவின் இளமையின்பத்தில் மூழ்கி எல்லாவற்றையும் மறந்திருந்தாள். எனினும் சமயம் நேர்ந்தபோதெல்லாம் விழித்துத் தன் நிலையை உணர்ந்து கொள்வாள்.

ஸத்துகன், பத்திரையின் மாளிகைக்குச் செல்வதும், பத்திரை ஸத்துக சங்கம் வருவதும் இப்போது சாதாரணமாகி விட்டன. வணிகர் வீதியில் உள்ள பலர், ஸத்துகனுக்கும், பத்திரைக்கும் ஏற்பட்ட தொடர்பை அறிந்து பலவாறு பேசிக்கொண்டனர். ஸத்துகனிடம் உள்ள அச்சத்தால் எவரும் வெளிப்படையாகப் பேசியதில்லை. மும்முடி நாய்க்கனும் ஸத்துகனிடம் விரோதம் கொள்வதற்கு அஞ்சி அவனுக்கு உகந்தவாறு நடந்து கொண்டான்.

வழக்கம் போல் ஸத்துக மந்திரத்திற்குப் பத்திரையும் வசந்தியும் அன்று வந்தனர். அன்று சங்கத்தில், 'சர்வம் அநாத்மகம்' என்னும் விஷயத்தைப்பற்றி உபந்நியாசம் செய்தார் புத்தமித்திர அடிகள். பிக்ஷுக்களும் பிக்ஷுணிகளும் அவர் கூறுவனவற்றைப் பக்தியோடு கேட்டிருந்தனர். ஆனல் ஸத்துகன் மட்டிலும் பத்திரையுடன் விநோதமாகப் பேசிய வண்ணம் வேறுபுறம் சென்று கொண்டிருந்தான். பாலகன் வசந்தியுடன் பேசிய வண்ணம் அவர்கள் பின்னே போனுன்.

ஸுமங்களனிடம் சந்தேகம்

உபதேசம் கேட்கும் பிக்ஷுக்களின் கூட்டத்தில் உள்ள ஒரு பிக்ஷுமட்டிலும், ஸத்துகன் முதலியவர் பேசும் இடத்தை உற்று அடிக்கடிக் கவனித்தான். அன்று மட்டும், அல்ல கடந்த சில நாட்களாகக் கவனித்து வருகிறன் அந்தப் பிக்ஷு, புதிதாகப் பௌத்த சங்கத்தில் சேர்ந்தவன் அவன். அந்த நாட்டிற்கே அவன் புதியவன் என்று தெரிந்தமையால் அவன் விஷயத்தில் ஸத்துகன் அதிகக் கவனம் செலுத்தவில்லை. அந்தப் பிக்ஷுவைப் அங்குள்ளவர் 'ஸுமங்களன்' என்று அழைத்து வந்தனர். ஆனல் அந்த ஸுமங்கள பிக்ஷுவைப் பார்க்கும் போதெல்லாம் வசந்திக்கு மட்டிலும் ஐயம் உண்டாகும். அடிக்கடி அவன், தன்னையும், பத்திரையையும் உற்றுப் பார்ப்பதை உணர்ந்துகொண்டாள். ஸத்துகனையும் பாலகனையும் அவன் ஒவ்வொரு கணமும் கவனிப்பதை எளிதில் உணர்ந்து சந்தேகம் கொண்டாள். அவையல்லாமல், அவன் முகமும், வேறு எங்கோ பார்த்த முகமாய் இருக்கிறதே என்று அவளுக்கு அடிக்கடித் தோன்றும். ஆனல் தன் மனத்தில் எழுந்த ஐயத்தை அவள் வெளியிட வில்லை. வசந்தி அவனை உற்று நோக்கும்போது அவன் வேறு பக்கம் திரும்பிக்கொள்வான். அதன் காரணம் என்ன?

இந்நிலையில், ஸத்துக மந்திரத்தின் வாயில் காவலன் ஓடோடியும் வந்து ஸத்துகனை வணங்கி நின்றான். ஸத்துகனும் பாலகன் முதலியவர்களும் துணுக்குற்றனர்.

"ஸத்துகரே, சோழவேந்தன் அரண்மனையைச்சேர்ந்த முத்து மாலைகள், எட்டும், பொன்னறையிலிருந்து களவு போயினவாம். அவற்றில் புலி முத்திரை உள்ளனவாம். அம் முத்து மாலைகள் யாரிடம் காணப்பட்டாலும் உடனே அவரைச் சிறை செய்யுமாறு அரசன் கட்டளையிட்டிருக்கிறன். அல்லாமல், காளன் என்னும் கள்வனைக் கண்டுபிடித்து அரசனிடம் அவனை ஒப்பிப்பவர்க்கு தகுந்த சம்மானம் அளிப்பானும் அரசன். இவ்வாறு வீதியில் முரசறைந்து மொழிந்து செல்கிறன் வள்ளுவன். நம் வாசலில் கணநேரம் நின்று கூறிச்சென்றான்'' என்று அவன் கூறி விட்டுத் திரும்பிச் சென்றான்.

அதைக்கேட்டு ஸத்துகன் முதலியவர் திடுக்கிட்டனர். இடி இடிப்பதுபோல் வெடி நகை செய்தான் ஸத்துகன். அதைக்கேட்டு விலகி நின்றனர் பத்திரை முதலியவர். அடுத்த கணத்தில் ஸத்துகன் கண்களில் தீப்பொறி பறந்து உடனே அடங்கின. கோபத்தை மறைத்துச் சிறிது புன்னகை செய்தான் பத்திரையை நோக்கி. பிக்ஷுக்கள் யாவரும் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கண்டு மனங் கலங்கினர். அந்தப் புதிய பிக்ஷு ஸுமங்களன் மட்டிலும் ஸத்துகனைப் பார்ப்பதற்கு அஞ்சி, மிக நடுங்கியவனாய் நின்றான். அவன் நடுங்கிப் ப[illegible]ந்து சா[illegible] வசந்தி குறிப்பாகக் கண்டு கொண்டாள். அவளுடைய சந்தேகம் உறுதி பெற்றது. அவன் யார்?

அடுத்த வாரம்

'ஸுமங்கள பிக்ஷு'

பிரபல ஜோதிஷர்
மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஜாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல்கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் கோம் தேவை: பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "சந்திரிகை" ஏல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

இப்பொழுது உங்கள் தேவைக்கு வேண்டிய ரெக்ஸோனு கிடைப்பது கடினமாயிருந்தால் அதற்காக கவலைப்பட வேண்டாம். இந்த அற்புதமான, ஔஷத சக்தி வாய்ந்த இதமளிக்கும் சோப்பிற்கு ஏற்பட்ட நெருக்கடி தாற்காலிகமானதே.

சரும ஆரோக்கியத்திற்கு ரெக்ஸோனு

RP. 19-111 TM REXONA PROPRIETARY LIMITED

தமிழர் வீரம்

வீரமும் காதலும்

பி. ஸ்ரீ

"பழைய தமிழ் இலக்கியத்திலே நல்ல நல்ல காதற் பாடல்கள் காணப்படுகின்றன என்கிறீர்களே: உண்மை தானு?'' என்று கேட்டார் சென்னைவாசியான நண்பர். "ஆம்; அழகான காதற்பாடல்கள் சங்க இலக்கியத்தில் உண்டு: அவற்றில் சில, உலக இலக்கியத்திலேயே இடம் பெறத் தக்கவை'' என்று பதில் சொன்னேன். உடனே கிராம வாசி, "பழைய தமிழர்-குணதிசயத்தின் சிறப்பியல்பு வீரம் என்றல்லவா சொல்லிக்கொண்டிருந்தீர்கள்? அப்படியானல் வீரப் பாடல்களல்லவா பண்டைத் தமிழிலக்கியத்தின்சிறந்த பாடல்களாக இருக்க வேணும்? நல்ல பாடல்களெல்லாம் காதற் பாடல்கள் என்கிறீர்களே?'' என்று ஒரு கேள்வி கேட்டார். "நானும் அதே மாதிரி ஒரு கேள்வியைத் தான் அடுத்த கேள்வியாகக் கேட்க இருந்தேன்'' என்றார் நகர நண்பரும்.

"நல்ல நல்ல பாடல்களெல்லாம் சிங்காரப் பாடல்கள் தான் என்று நான் சொல்லவில்லையே?'' என்று சொல்லிவிட்டு மேலும் சொன்னேன்:—"பழைய வீரப் பாடல்களிலும் பல அழகானவை: அவற்றிலும் இலக்கிய உலகத்திலே நல்ல இடம் பெறத்தக்க பாடல்கள் உண்டு. உண்மையில் வீரத்திற்கும் காதலுக்கும் விரோதம் கிடையாது. பழைய தமிழ் நாகரிகத்தை வீரமும் காதலும் வளர்த்து வந்தன என்பதைக் குறித்துப் பழைய தமிழிலக்கியத்தை அறிந்தவர்களுக்குள் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. அந்த நாகரிகத்தின் ஸாராம்சம் காதலை உயிராகக் கொண்ட வீரம்தான் என்றே சொல்லிவிடலாம்.''

"அது எப்படி? இந்த நாளில் நம்முடைய பெண்கள் தங்கள் அபிமானத்தால் வீரர்களையும் கோழைகளாக்கி விடுகிறர்களே! நம் வீரர்களில் பெரிய காரியங்களைச் செய்யத் துணிகிறவர்களே அபூர்வம்: அவர்களுக்கும் பெரிய பெரிய முட்டுக்கட்டைகள் போட்டுவிடுகிறர்களே! பழைய காலத்தில் மாத்திரம் வேறு விதமாக இருந்திருக்க முடியுமா?'' என்று கேட்டார் கிராம நண்பர். "பழைய தமிழிலக்கியத்திலிருந்து காதல் வீரத்தை வளர்த்ததற்கு ஆதாரம் காட்டுங்கள், பார்க்கலாம்'' என்று நகர நண்பரும் ஆவலாய்க் கேட்டார்.

தினைப்புனமும் காதற் கிளிகளும்

அதற்கு நான், "வள்ளி கல்யாணம் கேள்விப்பட்டிருக்கிறர்களல்லவா? கதை தெரியுமா?'' என்று ஒரு பதில் கேள்வி போட்டேன். "ஆஹா! தெரியும்; நன்றாய்த் தெரியும்: வள்ளியம்மை 'ஆலோலம், ஆலோலம்!' என்று கிளிகளை ஓட்டுகிறளே! அப்படித் தினைப் பயிரைச் சேதம் செய்யும் கிளிகளை ஓட்டிக்கொண்டிருக்கும் போது அவளை முருகக் கடவுள் பார்த்துக் 'கிளியை ஓட்டும் கிளியே!' என்று கொஞ்சிக் கூப்பிடுகிறராம். ஒரு புராணிகர் எங்கள் ஊரில் அந்தப் புராணம் வாசித்தார்: அவர் அப்படியெல்லாம் புராணச் சரக்கோடு சொந்தச் சரக்கும் சேர்த்துப் பிரசங்கிப்பார்'' என்று சொன்னர் கிராமவாசி. "ஓஹோ! எனக்குக்கூடத் தெரியுமே: 'வள்ளி கல்யாணம்' என்று ஒரு கதா காலட்சேபம் நடந்தது சமீபத்திலே. கதையில், பிள்ளையார் ஒரு யானையாக வருகிறர்: வந்து வள்ளியைப் பயமுறுத்தித் தம்பியைக் காதலிக்கும்படி செய்துவிடுகிறர்! மதயானைக்குப் பயந்து வள்ளியும் காதல் செய்கிறள்! ஓ, ஓ; இதுதான் பழைய காதல்—முறையா?'' என்று சிரித்தார் நகர நண்பர்.

நான் சொல்லத் தொடங்கினேன்:—"அது முருகன் திருவிளையாடல்; பண்டைத் தமிழர்களின் காதல்—வரலாறுகளை ஒருவாறு நினைப்பூட்டுகிறது: அவ்வளவுதான். நான் சொல்ல வந்தது மனிதர்களின் உண்மையான காதல். வள்ளி கல்யாணக் கதையில் வரும் தினைப் புனத்தையும், காதலையும், மதயானையையும் லேசாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்: அதுபோதும். இனி நாம் பழம் புலவர்கள் தொகுத்து வைத்துள்ள செய்யுள்களை உதவியாகக் கொண்டு பண்டைப் பழங்காலம் என்னும் திரையைக் கொஞ்சம் விலக்கி அந்தக் காட்சியைப் பார்ப்போம். ஒரு காலத்திலே தமிழ் நாகரிகம் தினைப் பயிரைச் சூழ்ந்து வளர்ந்ததென்று ஊகிக்கலாம். தினைப்புனம் தமிழர் வீரத்திற்கும் தமிழர் காதலுக்கும் ஒருங்கே இசைந்ததொரு நிலைக்களமாக இருந்தது.''

"அது எப்படி?'' என்று இருவரும் ஏக காலத்தில் குறுக்கிட, நான் தொடர்ந்து பேசினேன்:- "தமிழ் நாகரிகம் மலைப் பிரதேசங்களில் பிறந்து காடுகளில் வளர்ந்ததென்று சொல்லலாம்: சங்க இலக்கியங்களின் உதவியோடு நாம் மானஸிக யாத்திரை செய்து பார்த்தால், மலைப் புறங்களிலும் காட்டுப் புறங்களிலும் உள்ள தினைப் புனங்களை மரங்களில் அமைக்கப்பட்டுள்ள பரண்களிலிருந்து கொண்டு பெண்கள் காவல் செய்வதைக் காண்போம். அவர்கள் கவண் முதலியன கைக்கொண்டு, விளைந்த தினையில் வந்து விழும் கிளிகள் முதலான பறவைகளை ஓட்டிக் கொண்டிருப்பார்கள். சில சமயங்களில் பக்கத்திலுள்ள மலையருவிகளில் நீராடுவார்கள்; சுனைகளில் நீந்துவார்கள்; சோலைகளில் பூக் கொய்வார்கள், விளையாடுவார்கள். இப்படிப்பட்ட பெண்களோடு, வில்லும் கையுமாகக் காடுகளில் வேட்டையாடித் திரியும் வீர புருஷர்களையும் தினைப் புனத்திற்குஅருகே சந்தித்திருக்கிறேம். இந்த நிலையில் தினைப் புனம் காதல்-நாடகத்திற்கு உரிய ஒரு களமாகக் கூடும் என்பதில் என்ன அதிசயம்?''

"அப்படிப்பட்ட காட்சி ஒன்றைக் கொஞ்சம் விவரித்துக் காட்ட வேணும்'' என்றார் கிராம நண்பர். "அப்படிப் பட்ட காதலுக்கும் வீரத்திற்கும் உள்ள தொடர்பையும் சற்று விளக்க வேணும்'' என்று வேண்டினர் நகர நண்பர்.

நான் சொன்னேன்:—"அந்த வீரர்களில் ஒருவன் தினைப் புனம் காவல் செய்யும் ஒரு பெண்ணேடு பேச விரும்புகிறன், அதற்கு ஒரு வியாஜம் வேணுமே: 'நான் ஒரு யானையைத் துரத்திக்கொண்டு வந்தேனே: அதைக் கண்டதுண்டோ?' என்று கேட்கிறன். இந்தத் தந்திரம்கூடவா அவளுக்குப் புரியாது? எனவே, பதில் இல்லை. 'என்னேடு ஒரு வார்த்தை பேசுவதும் பாவமா?' என்று அவன் வருந்துகிறன்; கெஞ்சுகிறன்; அப்போது யானை ஒன்று பிள்ளையார்-யானையல்ல; நிஜமான காட்டானைதான் இடிபோல் முழங்கி மரங்களைச் சட சட வென்று முறித்துத் தள்ளிக்கொண்டு வருகிறது. அந்தப் பெண், மனம் அழிந்தவளாய்க் கை வளைகள் ஒலிசெய்ய ஓடி வந்து அவனை அடைகிறள். உடனே அந்த வீரன் ஓர் அம்பைப் பிரயோகிக்கிறன். அது குறி தவருமல் யானையின் முகத்திலே பாய்ந்து விடுகிறது. உடனே மதயானை புறங்கொடுத்து ஓடுகிறது. இனி அந்த வீரனை அவள் மறக்க முடியுமா? சில சமயங்களில் தினைப்புனத்திற்கு அருகே சுனையிலோ, ஆற்றிலோ நீந்தி விளையாடும் பெண்களைப் பார்க்கிறேம். அப்போது கை தளர்ந்து கால் தளர்ந்து நீரிலே போகிறள் ஒருத்தி. அவளை விரைந்து வந்து எடுத்துக் காப்பாற்றுகிறன் ஒரு வீரன். பிறகு அவளுடைய நெற்றியைத் துடைத்து முகம் நோக்கி நகையாடுகிறன், 'அஞ்சாதே' என்று சொல்லி. அவளோ அச்சத்தோடும் நாணத்தோடும் தலை குனிந்து நிற்கிறள். இப்படிப்பட்ட காட்சிகள் சினிமாப் படங்களைப்போல் செந்தமிழ்க் களஞ்சியமான பழம் பாட்டுக்களின் வாயிலாக நமக்கெதிரே வருகின்றன. இக்காட்சிகளின் மூலமாக, வீரமும் காதலும் கலந்து தினைப் பயிரோடு தழைத்து, ஆதித்தமிழ் நாகரிகத்தைச் செழித்து வளரச் செய்த கதையை ஒருவாறு அறிந்து கொள்ளுகிறேம்.''

வீரம் தழுவிய காதல்

அப்போது நகர நண்பர், "நல்லது: தினைப்புனத்தில் தொடங்கிய அந்தக் காதல்—வாழ்க்கை வீரம் தழுவி வளர்ந்தோங்கியது என்கிறீர்கள். தினைக்காடு, காதலர் காட்சிக்கு உரிய களமாக விளங்கியதோடு வீரம் விளைத்தற்கு உரிய சந்தர்ப்பத்தையும் பழைய மக்களுக்கு அளித்தது என்பதில் எனக்கு இப்போது சந்தேகமில்லை'' என்றார்.

நான் மறுபடியும் சொன்னேன்:—"காதல் வீரத்தின் உயிராக அமைந்து, இல்லறம் வளர்ப்பதற்கு ஓர் அருந்துணையாயிற்று. இத்தகைய காதல், வாழ்க்கையாகிய வனத்திலே கற்பகத்தருவாகத் தழைக்கிறதென்றும், தாகமும் தாபமும் போக்கும் நீர்நிலையாக அமைகிறதென்றும் நம்முன்னேர் உணர்ந்து கொண்டார்கள். 'காமம் முதலான மதயானைகளிடமிருந்து நம்மைக் காப்பதும் காதல்' என்றும் தெரிந்து கொண்டார்கள். முயற்சிக்கு ஊன்று கோலாகி, அயர்ச்சியை ஒழிப்பதும் வீரம் தழுவிய காதலே என்று கண்டு கொண்டார்கள். ஏன்? இம்மை—இன்பத்தின் ஸாரமான இந்தக் காதலே மறுமை—இன்பமாகிய பேரின்ப சுகத்தையும் ஒருவாறு முன் கூட்டி அறிவிப்பதுபோலிருக்கிறது!—என்றும் எண்ணத் துணிந்தார்கள். இதனுல் தான், காதலைப் பக்திப் பெருங் காதலாகவும் உயர்த்தி விட்டார்கள்.''

"அப்படியானல், தமிழர்களது வீர வாழ்க்கை வளமுற்று வளர்ந்தோங்குவதற்கு ஆண்களைப்போல் பெண்களும் காரணமாக இருந்திருக்க வேண்டும்'' என்றார் நகர நண்பர். உடனே கிராமவாசி, "இந்தக்காலத்தில் போர் புரியும் நாடுகளிலுள்ள பெண்மணிகளைப்போல் அந்தக் காலத்துத் தமிழ்ப் பெண்களும் நிஜமாகவே போர் முயற்சிகளைக் காதலித்தார்களா?'' என்று ஒரு கேள்வி போட்டார்.

அதற்கு நான், "போர் புரிந்து கொலைத் தொழில் செய்வது தாய்க்குலமாகிய பெண்குலத்திற்கு இயற்கையில் உரிய தர்மமல்ல என்றுதான் நம் முன்னேர் கருதினர்கள். எனினும் வீர வாழ்வும் வீரச் செயல்களும்-ஏன் வீரச்சாவும் கூடக்-காதலிகளுக்குக் காதலர்களைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சியை அளித்தன என்று சொல்லலாம். காதலியாக அமைந்து வீரத்தை உருவாக்கியதுபோல், வீரத்தாயாகவும் வீரப் புதல்வர்களைப் பெற்று வளர்த்தார்கள் பழைய தமிழ்ப் பெண்மணிகள். பெண்களின் காதலே தாயன்பு, புதல்வியின் அன்பு, சகோதரியின் அன்பு முதலான அன்பு-வகைகளாகக் கிளைத்தும், பக்திக் காதலாக ஓங்கியும் பழந்தமிழர்களின் வீர வாழ்க்கையைப் பாதுகாத்து வந்தது—என்றுகூட நாம் தைரியமாகச் சொல்லி விடலாம்'' என்றேன்.

நோயற்ற வாழ்வு

சீத ஜ்வரம்

★

பண்டித எம். துரைசாமி ஐயங்கார்

மிகவும் ஈரப்பாங்கான பிரதேசங்களில் வசிக்கும் ஜனங்களில் பெரும்பான்மையோர் சீதஜ்வரம் என்னும் முறைக்காய்ச்சலால் பெரிதும் வருந்துவதுபற்றி இக்கட்டுரையைப்படிப்பது அவ்வியாதிக்கு உட்படும் அனைவருக்கும் உபயோகமாயிருக்கும்.

சீதஜ்வரம் என்பதற்குக் குளிர் ஜ்வரம் எனப்பொருள். இதை, விட்டு விட்டு காலம் மாறி வருவதால் விஷம ஜ்வரம் என்றும் ஆயுர்வேதம் அறிந்தவர் கூறுவர். தமிழில் இதைச் சாதாரணமாய் முறைக்காய்ச்சல் என்பார்கள். மலேரியா என்னும் ஆங்கிலப் பெயரால் இப்பொழுது பிரஸித்தம். ஆநூபதேசங்கள் என்கிற மிகவும் சதுப்புள்ள நிலங்களிலிருந்து கிளம்பும் ஒருவகை விஷவாயுவால் ஏற்படுவதால் இதை விஷஜ்வரம் என்றும் வழங்குவர். எப்பொழுதும் ஈரக்கசிவுள்ள புல் நிலங்கள், அடிக்கடியும் வெள்ளம் ஓடியும் வடிந்துகொண்டுமுள்ள சேற்றுப் பூமிகள், பெரிய ஏரிகளிலும் கல்லோரங்களிலும் நதிகளின் முகத்வாரங்களிலும் அலைகளால் ஒதுக்கப்படும் களிப்பான வண்டல் முதலிய மண்கள், தாழ்ந்து படர்ந்துள்ள செடிகொடிகளால் எப்பொழுதும் மூடப்பட்ட இடங்கள், சாணம், சாம்பல், குப்பை கூளம் முதலியதால் நிரப்பப்பட்ட நிலங்கள் ஆகியவை முக்கியமாய். இவ்விடங்கள் [illegible]தகதப்பாயிருக்குங் காலத்தில்—சீத ஜ்வரம் செழித்தோங்க மிகவும் ஏற்றவையாம். இந்தியாவைப் போன்ற உஷ்ண தேசங்களில் சொற்ப மழை அடிக்கடியும் பெய்துவிட்டு நிற்பதால் பூமியிலிருந்து கிளம்பும் ஆவியிலிருந்து உண்டாகும் ஒருவகை விஷத்தினால் சீத ஜ்வரம் தோன்றுவது வழக்கம். கனமான மழை பெய்து பூமி நன்றுகக் குளிர்ந்து, ஆவி எழும்பாமலிருந்தால் அவ்வித ஜ்வரம் உண்டாவது அரிது. சதுப்பு நிலங்களைத் தாராளமாய் ஜலம் மூடியிருக்கும்போது அங்கிருந்து இவ்விஷ ஆவி கிளம்புவதில்லை; ஆனால் ஜலம் வற்றிப்போய், தரையில் உஷ்ணம்பட்டு சதுப்பான அல்லது களிப்பான நிலத்திலிருந்து கிளம்பும் ஆவிதான் ஆரோக்கியத்தைக்கெடுக்கும் தன்மையது. இவ்விஷயங்கள்:

> ஆநூபதேசே தேசேஷு சாத்வலேஷு நதீதடே,
> க்ருஹேஷு சீதபூயிஷ்டே |
> ஷ்வதிகோ விஷமஜ்வர: ||

என்ற ச்லோகத்தில், நிகண்டு ரஹ நூலில் சுருங்கவும் விளங்கவும் கூறப்பட்டிருக்கின்றன.

"அதிக நீர்வளம் பொருந்திய விடமும், உலர்ந்து ஈரமில்லாத நிலமும் விஷ ஜ்வரத்தையுண்டு பண்ணுவதில்லை; ஈரமும் சேறும் அடர்ந்த சதுப்பான நிலம், ஈரமான வீடுகள் முதலியவை முறைக்காய்ச்சல் சம்பந்தமான விஷவாயுவைக் கிளப்புவதற்கு முற்றிலும் அனுகூலமானவை" என்று சில காலத்திற்கு முன் டாக்டர் பெர்கூஸன் என்பவர் "தி நேசர் அண்ட் ஹிஸ்டரி ஆப் மார்ஷ் பாய்ஸன்" என்னும் நூலில் கூறியிருப்பது நான் குறிப்பிட்ட ஆயுர்வேத ச்லோகத்தின் கருத்தினும் வேறு பட்டதாகத் தோற்றவில்லை. தாவரங்களான செடி கொடி புல் பூண்டுகளுடையவும், ஜங்கமங்களான பலவகைப் பிராணிகளுடையவும் பல வகைச் சரீர பாகங்கள் ஊறிப் பதனழிந்து அழுகிப்போகவும், பிறகு அவற்றிலிருந்துண்டாகும் விஷவாயுவை ஆவியாக வெளியிடவும் ஏற்ற நிலங்கள் ஆநூபம் என்னும் சதுப்பான சேறு முதலியன நிரம்பிய பூபாகங்களேயாம். அதிக ஜலம் நிரம்பிய வெள்ள ஓட்டமுள்ள இடமும், நன்றாகக் காய்ந்துள்ள பூமியும் அவ் விஷவாயுவை உண்டுபண்ணவோ, வெளிக்கிளப்பவோ ஏற்றவையல்ல.

இந்தியாவில் எப்பொழுதுமே, முக்கியமாய் சொற்ப மழை பெய்து நின்றுவிட்ட காலத்திலும் உஷ்ணமான பருவங்களிலும் சீத ஜ்வரம் பலரைப் பீடிப்பது இயல்பு. குளிர் காலத்திலும், நல்ல மழை பொழியுங் காலங்களிலும் இவ் வியாதி அவ்வளவு பிராபல்யம் அடைவதில்லை. முற்கூறிய விதமான ஆநூப தேசத்திலும் (சதுப்[illegible] அடுத்துள்ள [illegible] வசிப்பவருக்கு [illegible] ஜ்வரம் மிகத் துன்பம் விளைக்கும் தன்மையது: மழைக்காலத்தில் கூட வெகு பலமாகக் காற்றுத் தொடர்ந்து வீசுவதால் இவ்விஷ வாயு வேகமாகக் கிளம்பவும் பரவவும் அனுகூலம் ஏற்படும். இவ்விஷவாயுவைக் கிளப்புவதற்கு உஷ்ணம் காரணமென்றாலும், நடுப்பகலை விட மாலை நேரத்தில் இரவிலுமே இது அதிகமாய்ப் பரவுகின்றது.

> உபதஷ்டஞ்[illegible] சலம்ப[illegible]
> மசகைர் மக்ஷிகாதிபி: |
> ஜ்வரோ ரோகாஸ் ததப்யந்யே
> பவந்தி வ்யாப்துவந்தி ச ||

சீதஜ்வரம் என்னும் இக்குளிர் காய்ச்சல் தெள்ளுப்பூச்சி, கொசு, ஈ முதலியவை கடியதால் உண்டாகக்கூடுமென்றும் ஆயுர்வேதப்ரகாசம் முதலிய பண்டைக் காலத்திய கிரந்தங்கள் கூறுகின்றன. சீதஜ்வரத்திற்குக் காரணமான விஷம் மனிதர்களிடம் [illegible] பரவு[illegible] காலத்தில் [illegible] வைத்தியர்கள் [illegible]ந்துகொண்டதாகக் கூறிய[illegible]லும். மலேரியாவும் அது [illegible] வேறு பல பிணிகளும் [illegible]சு, தெள்ளுப்பூச்சி முதலியவற்றால் விசேஷமாகப் பரவுவதாக நமது முன்னோர் அநேகம் நூற்றாண்டுகளுக்கு முன்பே தெரிந்துகொண்டிருந்தனர் என்பதை நம் தேசத்தவர்களே கவனித்தவர்களல்ல. சாக்கடைகள், வெகுகாலமாகத் தேக்கங்கொண்ட [illegible] குளங்கள், தாவரங்களும் பிராணி சம்பந்த[illegible] வஸ்துக்களும் அடங்கிய குப்பை மேடுகள் முதலியவற்றில் உண்டாகும் [illegible]ங்களைக் கொசு முதலிய ஜந்துக்கள் மனிதரிடம் பரப்புவதால், அவ்வித இடங்களுக்கு அருகில் மனிதர் வாசம் செய்வது தகாது.

இந்த ஜ்வரம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தினந்தோறுமாவது, ஒரு நாள் விட்டாவது, அல்லது இடையில் இரண்டு நாள் விட்டாவது முறைப்படி ஏற்படுவதால் [illegible]காய்ச்சல் என்று வழங்குகிறோம். தினந்தோறும் தாக்கும் சீத ஜ்வரத்தை "அந்யேத்யுஷ்கம்" என்றும், ஒரு நாள் விட்டு மூன்றும் நாள் தாக்குவதை "த்ருத்யகஜ்வரம்" என்றும் இடையில் இரண்டுநாள் விட்டு நான்காம் நாள் தாக்குவதை "சாதுர்த்திக ஜ்வரம்" என்றும் கூறுவோம். இந்த ஜ்வரம் ஏறும்போது அதற்கு இவ்வொரு [illegible]வபிலும் மூன்று நிலைமை[illegible] உண்டு: முதல் நிலைமை சீதம் அல்லது குளிர் நடுக்கம் ஏற்படுவது. இந் நிலைமையில் தாங்கமுடியாத நடுக்கத்துடன் குளிரும். பலமான சோம்பலும் சோர்வும் காணும். சிலருக்குக் குளிர் என்னும் சீதவேகம் சொற்பமாயிருக்கலாம்; சிலருக்கு மிகவும் கனமான போர்வைகளாலும் அடக்கமுடியாத சீதவேகம் உண்டாகும். இதை அடுத்து தேகச் சூடு கடுமையாக அதிகரிக்கும். இந்த உஷ்ணவேகம் ஏற்படுகையில் உடலெங்கும் ஒரே கடுஞ் சூடாகவும், முகம் விம்மிச், சிவந்து, [illegible] வறட்சியடைந்தும், நா[illegible] மிகவும் பீடபடுத்தும் இருக்கும். இது இரண்டாவதான உஷ்ண நிலைமை. மூன்றுவது ஸ்வேத வேகம். அதாவது உடலெங்கும் வியர்வை உண்டாவது. சில நேரம் தொடர்ந்து வியர்த்த பிறகு ஜ்வரம் விட்டுவிடும். சீத ஜ்வரம் ஒருவனுக்கு உண்டான பிறகு அது குணமாகும் வரையில் ஒவ்வொரு தாக்குதலிலும் பெரும்பாலும் இந்த மூன்று நிலைமைகளும் முறையே ஒழுங்காக [illegible]பட்டுப் பிணியாளியை வருந்தச் செய்யும். அந்யேத்யுஷ்கம் என்னும் ஜ்வரம் தினந்தோறும் பொதுவாகக் காலையிலும், த்ருதீயகம் என்பது ஒரு நாள் விட்டு மூன்றும் நாள் பெரும்பாலும் பகற்பொழுதிலும், சாதுர்த்திகம் என்பது இடையில் இரண்டு நாள் விட்டு நான்காம் நாள் மாலை நேரத்திலும் தோன்றுவது வழக்கம். இவற்றுள் அந்யேத்யுஷ்கம் என்பதுதான் வெகு சாதாரணமாக உண்டாகும் சீத ஜ்வரம். சீத ஜ்வரம் சிலருக்கு அந்யேத்யுஷ்கமாகவும் சிலருக்கு த்ருதீயகமாகவும் வேறு சிலருக்கு சாதுர்த்திகமாகவும் வெவ்வேறு வகையில் வருவதாலும், உஷ்ண-சீத நிலைமைகளின் வேகங்கள் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமாக ஏற்படுவதாலும் இதை விஷம ஜ்வரம் என்று ஆயுர்வேதம் கூறுகிறது.

ஜ்வர வேகம் ஏற்பட்டிருக்கும்போது கைகால்கள் இடுப்பு முதலிய விடங்களில் அல்லது உடலெங்கும் வலியுண்டாம். கண்களில் அழற்சியும், சிலருக்குக் காதுகளில் இரைச்சலும் தோன்றும். தலைவலியுண்டாகும்: நாக்கு அழுக்குப் படிந்து வெளுத்தும் அருவருப்பான சுவையுள்ளதாகவும் இருக்கும். விரல்கள் வெளுத்துச் சுருங்கும். சர்மம் வறண்டு விடும். சிலுசிலுப்பான குளிர் உடலெங்கும் பொதுவாகவும், நடு முதுகில் முக்கியமாகவும் உணரப்படும். பிறகு நடுக்கமும், சுவாஸவேகமும் [illegible]ம். உடற் சூடு பிறகு மிகவும் அதிகப்படும். குளிர் ஆரம்பித்தது முதல், ஜ்வர வேகம் அதிகரித்து அதன் பிறகு வியர்வையுண்டாய் முழு ஜ்வரவேகமும் தணிவதற்குப் பெரும்பாலும் ஆறு மணி நேரம் செல்லும்.

சிகித்ஸை:—குளிர் நடுக்கம் ஏற்பட்டிருக்கையில் ஓர் அகன்ற பாத்திரத்தில் வெந்நீரை ஊற்றி அதில் பிணியாளி பாதங்களை இருத்தி வைத்திருக்கச் செய்யலாம். அத்துடன குடிப்பதற்கு வெந்நீரைக் கொடுக்கலாம். உஷ்ணம் அதிகரித்துள்ள (ஜ்வர வேக) சமயத்தில் வியர்வையை அதிகமாகவும் சீக்கிரமாகவும் உண்டாகும்படித் தூண்டுவதற்கு அனுகூலமாக ஸ்வேதநம் [illegible] ஆவிநீரை உடம்பிற் பிரவசச் செய்யலாம். இதற்கு ஒரு பாத்திரத்தில் கொதிக்கும் நீரை ஊற்றி அதில் நன்றுகக் காய்ச்சிய சிறிய செங்கற்கல்லைப் போட அதிலிருந்து ஆவி கிளம்பும். அந்த ஆவி முகத்திலும் உடலிலும் பரவும்படி ஒரு விசாலமான துப்பட்டியால் பிணியாளியைப் போர்த்தி நீராவி வெளியில் போகாதபடி செய்ய வேண்டும். இதற்கு ஒரு கயிற்றுக் கட்டில் மிகவும் அனுகூலமானது. கயிற்றுக் கட்டில் நோயாளியைப் படுக்கச் செய்து கட்டிலின் கீழே நீராவி கிளம்பும் பாத்திரத்தை வைத்து விட்டு கட்டிலின் நாற்புறமும் கீழே தொங்குமாறு துப்பட்டியால் நன்றாகப் போர்த்தி விடவும். வியர்வை தாராளமாய் விட்டு, உஷ்ணவேகம் தணியும் வரையில் அடிக்கடி செங்கற் கட்டிகளைக் காய்ச்சி அப் பாத்திரத்தில் போட்டு வருவது நலம். வியர்வை வந்து, ஜ்வர வேகம் தணிந்த பிறகு, பிணியாளி வியாதி நீங்கியதாக உணர்ந்த போதிலும், பலக் குறைவும் சோர்வும் தொடரும். பிறகு மறு நாளாவது இரண்டு நாள் கழித்தாவது சற்றேரக் குறைய அதே நேரத்தில் இக்குளிர்க்காய்ச்சல் மறுபடி உண்டாகும்.

ஜ்வரமில்லா[illegible]யிருக்கும்போது சீதாம்சுரஸம் என்னும் மாத்திரையை வேளைக்கு ஒன்று அல்லது இரண்டு வீதம் தினம் மூன்று அல்லது நான்குமுறை உட்கொள்வது நலம். பலமான ஜ்வரங்களில் "பஞ்சதிக்த ரஸக்ரியா" என்கிற மருந்தை வேளைக்குக் கால் அவுன்ஸ்வீதம் இரண்டு மூன்று ஸர்வஜ்வராரி மாத்திரையோடு உட்கொள்வது மிகவும் நல்லது. இதை 3 மணிக்கு ஒருமுறையாக தினத்தி[illegible]ரு 4 முறை உட்கொள்ளவேண்டும். பஞ்சதிக்த ரஸக்ரியாவும், ஸர்வஜ்வராரி மாத்திரையும் சீத ஜ்வரம் என்கிற குளிர் காய்ச்சலுக்கு மிகவும் சிலாக்கிய மான முக்கியௌஷதங்கள். அதிக நீடித்த ஜ்வரத்தினால் பலருக்கு பிலீஹம் என்கிற மண்ணீரல்வீங்கி வியாதிகொள்ளும். யக்ருத் என்கிற கல்லீரலும் வீங்கிவிடுவதுண்டு. அந்த நிலைமையில் பஞ்சதிக்த ரஸக்ரியா என்னும் மருந்தோடு சங்க பாஷாணதிவடி என்கிற மாத்திரையும் உபயோகிப்பது அவசியமாகும்.

'ரிஷ்ய சிருங்கர்' தமிழ் படத்தில் பிரதம ஸ்தானம் வகித்தவரும், போப்பாண்டவரால் புகழப்பட்டவரும், இனிய சங்கீத சம்பத்துடையவருமான திறமைவாய்ந்த தென்னிந்திய நடிகை ஸ்ரீமதி வஸுந்தரா தேவி சொல்லுகிறார்:

"தளிப்பட்ட நறுமணத்திற்காக நான் எப்பொழுதும் நரஸூஸ் காபி பவுடரையே உபயோகிக்கிறேன்.

Vasundhara Devi

நரஸூஸ் காபி

M. N. K.—16 PM.

புஷ்பஹாரம்

(16-ம் பக்கத்தொடர்ச்சி)

செய்து முடித்தாள். அன்றைய தினம் அச்சிறுமியின் முகாரவிந்தம் ஓர் விசேஷ உற்சாகத்தினால் அதிக மனோகரமாகத் தென்பட்டது. படித்து முடிந்தவுடன் வீட்டின் பின்புறம் தன் கையால் பயிரிடப்பட்டிருந்த தோட்டத்திற்குச் சென்று கனகாம்பர புஷ்பங்களை பறித்து வந்து அழகாக இரண்டு பந்துகள் கட்டினாள். அம் மாலைகளை அழகிய வடிவங்களிலும், புதிய புதிய மாதிரியிலும் தொடுத்தாள். மணி மூன்றடிப்பதற்குள்ளாகவே தாயாரை தலை பின்ன சொல்லாமல் தானாகவே அழகாகப் பின்னி தொங்க விட்டுக்கொண்டு, தான் தொடுத்த புஷ்பச் செண்டில் ஒன்றைத் தலையில் வைத்துக்கொண்டாள். மற்றொன்றை ஓர் ஈரத் துணியில் தனது புதிய தோழிக்கென்று சுற்றி வைத்து விட்டு, முகம் கழுவித் திலகமும் இட்டுகொண்டாள். மூன்று மணிக்குள்ளாகவே டீயும் தயாரித்து தாயாருக்கு கொண்டுவந்து கொடுக்கவே ஜானகியம்மாள் "இதென்னடி. லக்ஷ்மி! இதற்குள் டீ கொண்டுவந்து விட்டாயே? மூன்று மணி அடிப்பதற்கு இன்னும் அரை மணி இருக்கிறதே!" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

லக்ஷ்மி நாணத்துடன் "மாமி வண்டி அனுப்புவதற்குள் வேலையை எல்லாம் முடித்துக் கொண்டு 'டிரஸ்' மாற்றிக்கொண்டு, 'ரெடி'யாக்விருக்கலாம் என்று தான்" என்று சொல்லி விட்டு ஓடிப்போய் விட்டாள். ஜானகியம்மாளின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. "பாவம் குழந்தை. இது காறும் கூண்டிலடைபட்ட கிளி போல் வீடு விட்டால் ஸ்கூல் ஸ்கூலை விட்டால் வீடென்று கிடந்தாள். இன்றைக்கு அவளுடைய உத்ஸாகத்தைக் காண வெகு ஆச்சரியமாக இருக்கிறது. இனியாகிலும் பகவான் நம்மேல் கடாக்ஷம் வைத்து அருள் புரிவாராக" என்று பிரார்த்தித்தவாறு ஏதோ தைத்துக்கொண்டிருந்தாள்.

லக்ஷ்மீ, காப்பி அடுப்பில் பருப்பு போட்டுவிட்டு, தேய்த்து அலம்பி வைத்த பாத்திரங்களை புளி போட்டு அலம்பி சமயலறையில் கொண்டு வந்து வைத்தாள். இதற்குள் வண்டி வந்துவிட்டது. அச்சிறுமி அதற்கு முன்பு கோச் வண்டியில் ஏறினவளே அல்ல. வண்டியில் ஏறி உட்கார்ந்தவுடன் சந்தோஷமிகுதியால் அவளது உடம்பு சிலிர்த்தது. ஜானகியம்மாள் வாசற்படியில் வந்து நின்றவள் "லக்ஷ்மீ சீக்கிரம் வந்து விடு" என்று அன்புடன் கூறவே லக்ஷ்மீயும் ஆகட்டுமென்று தலையை அசைத்தாள். வண்டியும் ஓடத் தலைப்பட்டது.

(தொடரும்.)

மூன்றுதாமரை மார்க்கு பீடி.

S.A.H

S.A.H ரிஜிஸ்டர் 2221.

Rgd. No. 2221.

25 வருஷமாய் தென்னுடு முழுதும் குணத்திலும் மணத்திலும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop — S. அஹமது உசேன். கோட்டை, சேலம். S.I.R.

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் அவரது ராஜிநாமா கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:—

நான் ஒரு விஷயத்தைச் சந்தேகமறத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டித் தீர்மானத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட சட்ட மறுப்பு இயக்க சம்பந்தமாக இந்தியா கவர்ன்மெண்ட் அநுஷ்டிக்கும் கொள்கையையும் அது எடுக்கும் நடவடிக்கையையும் நான் பூரணமாக அங்கீகரிக்கிறேன். அந்த கவர்ன்மெண்டில் நானும் இதுவரை அங்கத்தினராக இருந்திருக்கிறேன். அந்த காங்கிரஸ் கமிட்டி தீர்மானத்தின் விபரீதப்பயனை நாம் இப்போதே கண்கூடாகப் பார்க்கிறோம்; இந்த நெருக்கடியில் எனது கருத்தைத் தாராளமாக வெளியிடவும். இந்த இயக்கத்தை வளரவிட்டால் இந்தியாவின் அபிவிருத்தியையும், சமஸ்தானங்கள் சம்பந்தப்பட்டவரையில் யுத்த ஏற்பாடுகளையும் பாதிக்கக்கூடுமாகையால் அதைத் தடுக்கவும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும் ஒரே நோக்கத்துடன்தான் நான் இப்போது ராஜிநாமா செய்கிறேன். இந்திய சமஸ்தானங்களின் நல்வாழ்வில் எனக்கு விசேஷ சிரத்தையுண்டு.

* * * *

இந்தியா சட்ட சபை

இந்தியா சட்ட சபையை அக்டோபரில் கூட்டுவதென்று முடிவு செய்த பிறகு தேசத்தில் நேரிட்ட சில நிகழ்ச்சிகளை உத்தேசித்து சட்ட சபையைச் சீக்கிரமே கூட்டுவது உசிதமாவென்று வைஸிராய் தமது சகாக்களுடன் யோசித்தார். செப்டம்பர் 14-ந்தேதி இந்தியா சட்ட சபையையும் சில நாட்கள் கழித்து ராஜாங்க சபையையும் கூட்டுவதென முடிவு செய்திருக்கிறார். இக்கூட்டம் சில நாட்களே நடக்கும். அடுத்த கூட்டம் பட்ஜட் கூட்டத்துக்கு முன்னர் நடக்காதென்று தெரிகிறது.

* * * *

புதிய இந்திய-இலங்கை ஒப்பந்தம்

இந்திய ஸர்க்காருக்கும் இலங்கை சர்க்காருக்குமிடையே தற்காலிகமாக சில சமரஸ ஏற்பாடுகள் நடந்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த ஏற்பாடுகள் பிரகாரம் இலங்கைக்கு இந்தியத் தொழிலாளர் குடியேறுவது சம்பந்தமாக இந்திய ஸர்க்கார் விதித்துள்ள தடை ஸெப்டம்பர் முதல் தேதியிலிருந்து நீக்கப்படுமென்றும் யுத்தத்துக்குப் பிறகு புதிதாக இந்திய-இலங்கை ஒப்பந்தம் பற்றி பேச்சு வார்த்தை நடக்குமென்றும் தெரிகிறது.

தற்போது இந்தியருக்கு விரோதமாக உள்ள சட்டத்தை இலங்கை வாபீஸ் பெற்று இதைப்போன்ற புதிய சட்டம் எதையும் செய்யாதிருக்கவும் ஒப்புக்கொள்ளும்,

இலங்கை அரிசி சப்ளையில் தட்டேற்பட்டிருப்பதால் கொஞ்சம் அரிசியை ஸப்ளை செய்ய இந்திய சர்க்கார் சம்மதித்திருப்பதாகத் தெரிகிறது.

* * * *

சியாங் அறிக்கை

இந்தியாவிலுள்ள சீனப் படைகளுக்கு மார்ஷல் சியாங் கெய் ஷேக் சென்ற 4-ந் தேதி ஒரு அறிக்கை விடுத்தார்.

அதில் அவர். இந்திய அரசியல் பற்றிய விவாதத்தில் அப்படைகள் கலந்துகொள்ளக் கூடாதென வற்புறுத்தியிருக்கிறார்.

* * * *

மீண்டும் ஸர் கிரிப்ஸ்

"பிரிட்டிஷார் இன்று இந்தியாவிலிருந்து வெளியேறுவதென்பது இந்தியாவை ஈத்தகைய அரசியல் முறையும், ஸர்க்காருமின்றி விட்டுச் செல்வதாகும். அராஜகம் வேண்டுவது அது தான். ஜப்பான் அங்நிலையில் இந்தியா மீது பாய்ந்தேதீரும்" என்று ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் "நியுயார்க் டைம்ஸ்" பத்திரிகைக்கு வரைந்துள்ள ஒரு கட்டுரையில் எழுதியிருக்கிறார். அவர் மேலும் கூறுவதாவது:—

பிரிட்டிஷார் வெளியேறினால் இந்தியாவிலுள்ள ஐரோப்பிய அமெரிக்க, சீன ஸோல்ஜர்களுக்கும் பிரஜைகளுக்கும், உயிருக்காபத்து ஏற்படும். மேலும் அதன் மூலம் நேசக் கட்சியின் வரிசையில் ஒரு பெரிய பிளவு ஏற்படும்.

சுய ஆட்சி வேண்டுமென்ற இந்திய மக்களின் 'கோரிக்கை விஷயத்தில் எனக்கு அனுதாபம் உண்டு. ஆனால் ஜப்பானியரையோ வேறு எந்த அச்சு நாட்டினரையோ உள்ளே விடுவதன் மூலம் அவர்கள் தங்கள் அபிலாஷையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாது. நேசநாடுகள் முதலில் யுத்தத்தில் ஜயிக்க வேண்டும். இவ்வுண்மையை இந்திய மக்களில் பெரும்பாலோர் உணர்ந்திருப்பதாக நான் நம்புகிறேன்.

நேசக்கட்சி சுதந்திரத்திற்காகப் போராடும் இந்த நெருக்கடியான சமயத்தில் ஒரு அனுபவ சாத்தியமற்ற கோரிக்கையை வெளியிட்டு அதை ஏற்காவிடின் சட்டமறுப்பு துவக்குவதென்ற ஏற்பாட்டைக் காங்கிரஸ் ஏற்குமாறு செய்தது மிகவும் வருந்தத்தக்கது. யுத்தம் முடிந்ததும் இந்தியர் தங்களுடைய சுய ஆட்சிக்கான ஒரு அரசியல் முறையை வகுத்துக்கொள்ள அவர்களுக்கு வசதி அளிக்கப்படுமென்பது பற்றிச் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் அதற்குமுன் ஒரு இடைக்காலமுண்டு. அதாவது யுத்தம் முடிந்து ஒரு புதிய அரசியல் ஏற்படும்வரை தற்போதைய அரசியலே நீடித்தாக வேண்டும்.

* * * *

சர்வகலாசாலை தாக்கப்பட்டது

கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை மீது ஒரு ஜெர்மன் விமானம் பெரிய வெடிகுண்டுகளையும் அக்னி குண்டுகளையும் வீசியது. இதனால் விலையுயர்ந்த கிடைப்பதற்கரிய புஸ்தகங்கள் நாசமாயின. கேம்பிரிட்ஜ் சங்கத்தின் விடுதியில் இக்குண்டுகள் விழுந்தன.

இங்கிலாந்தின் தெற்குக் கரையில் சில இடங்களில் ஜெர்மன் விமானங்கள் குண்டுகளைப் போட்டன. பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் ஏற்பட்டன,

* * * *

உலகப் பிரசித்தி பெற்ற நிவாரணி ஒவ்வொரு வீட்டிலும் அவ்சியமிருக்க வேண்டும்.

சரும தொந்திரவுகள், உபத்திரவங்களை ஜாம்-பெக் குணப்படுத்தும்.

வெட்டுக்காயம், சிராய்ப்பு, மற்றும் இதர கோளாறுகளுக்கு ஜாம்-பெக் அவசியம் வைத்திருக்கவேண்டும. புண்பட்ட இடத்தில் தடவினவுடன் அதன் அற்புத மூலிகை எண்ணெய் சருமத்திற்குள் சென்று, வலி, வீக்கத்லதப்போக்கி, சருமத்திற்கு போஷாக்களித்து, தழும்பின்றி குணப்படுத்தும். ஜாம்-பெக் மெழுகு ரூ. 1 அல்லது 2—4. ஸோப் ரூ. 1, பவுடர் ரூ. 1.

ஏஜண்டுகள்:- மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.



கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ், 7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.



பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சவூர்.

ஆடைகளை அதிக நன்றாக வெளுக்கிறது

உங்கள் ஆடைகளையும் வீட்டுத் துணிமணிகளையும் வெளுக்க இந்த விசேஷமான ஸோப்பு உங்கள் குடும்பத்துக்கு அவசியம் வேண்டும். 501 ஸ்பெஷல்வஸ்திரங்களை அதிக வெண்மையாக அலக்குகிறது. அது முற்றிலும் கலப்பற்றதாகையால் மிக மெல்லிய ஆடைகளுக்கும் கேடிழைப்பதில்லை. 501 ஸ்பெஷல் முற்றிலும் சுதேசி மிருகக் கொழுப்பற்றது.

டாம்கோ விற்பனை இலாகா:
1, வாரன்ரோட், பீமன்பேட்டை மைலாப்பூர், மதராஸ்
டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமி., டாடாபுரம்-பம்பாய்

A TATA PRODUCT

ரூஸ்வெல்ட் - நிருபர்கள் மகாநாடு

அமெரிக்க சர்க்கார் காரியாலயம் வாஷிங்டனில் இருக்கிறது. அக்காரியாலயங்கள் இருக்குமிடத்துக்கு 'ஒயிட் ஹவுஸ்' என்று பெயர். இங்கு வாரத்தில் இரண்டு தடவை ஜனாதிபதி ரூஸ்வெல்டும், பத்திரிகை நிருபர்களும் ரேடியோ நிருபர்களும் சந்தித்துப்பேசுகிறார்கள். 100 நிருபர்களுக்குக் குறையாமல் இதற்கு வருகின்றனர். அநேகமாக 300 நிருபர்கள் வரை இங்கு கூடுவர்.

செவ்வாய்க்கிழமை பிற்பகலிலும், வெள்ளிக்கிழமை காலையிலும் ஜனாதிபதியின் சொந்தக் காரியாலயத்தில் மேற்படி நிருபர்கள் வந்து சேருவர். அவர்கள் ரூஸ்வெல்டை அநேகம் முக்கியமான கேள்விகளைக் கேட்பார்கள். யுத்தம் காரணமாகவும், உள் நாட்டிலுள்ள பலவேறு பிரச்னைகள் காரணமாகவும் நாடு எங்ஙனம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது குறித்து ஜனாதிபதியிடமிருந்து அட்டவர்த்தனமாக அவர்கள் தகவல்கள் பெறுவார்கள். எதிரிகளுக்குப் பயன் படக்கூடும் என்று எண்ணக்கூடிய விஷயங்கள்தான் வெளியிடப்படுவதில்லை.

ரூஸ்வெல்டும், பத்திரிகா நிருபர்களும் நாட்டினரது நிலைமையைப்பற்றிச் சாயமுறையில் பரிசீலனை செய்வார்கள். இம்மகாநாடுகளில் நடக்கும் விவரங்களே எங்கும் பத்திரிகைகளிலும், ரேடியோக்கள் மூலமும் வெளியாகின்றன. அவற்றிலிருந்து அன்றாட யுத்தப்போக்கும், அமெரிக்காவில் குறிப்பிடத் தக்கதாக விருக்கும் அபிவிருத்திகளும் தெரிய வருகின்றன.

அமெரிக்க விவகாரங்கள் பற்றி ஜனங்களுக்குத் தீவிரமான ஞான மேற்படச் செய்வதற்காக ரூஸ்வெல்டு இரண்டு வழிகளைக் கையாண்டிருக்கிறார். முதலாவதாக ரேடியோ ஒலிபரப்பை விசேஷமாக உபயோகமாக்கி நாடெங்கும் விஷயங்களை ரேடியோமூலம் அறிய வசதிகளைச் செய்திருக்கிறார். அமெரிக்காவில் ரேடியோ 'ஸெட்' இல்லாத குடும்பமே இல்லையென்று சொல்லிவிடலாம். பக்கத்து வீட்டில் ஒருவரிடம் ஒரு ரேடியோ இருந்தால் அவ்வசதி இல்லாதவருக்கு அவர் உதவி செய்வார். இதனால் சாதாரண அமெரிக்கப் பிரஜைக்கும் நிர்வாகம் எப்படி நடக்கிறதென்பது தெரியும்.

பொது ஜனங்களுக்குத் தகவல் கொடுப்பதற்குப் பத்திரிகைகள் ஒப்பற்ற சாதனமாக விளங்குகின்றன. முன்பிருந்த ஜனாதிபதிகளைவிட ரூஸ்வெல்டு இந்த சாதனத்தை விசேஷமாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார். இவர்தான் இந்த வார மகாநாட்டு வழக்கத்தை ஸ்தாபித்தார்.

நிருபர்கள் வருகை

மகாநாடு ஆரம்பமாவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பாக நிருபர்களும் ஸ்திரீ நிருபர்களும் நிர்வாக அதிகாரிகள் காரியாலயத்துக்கருகே கூட ஆரம்பிப்பார்கள். ஜனாதிபதியைப் பார்ப்பதற்கு முன்பாக வெகு நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டு அங்கு போடப்பட்டிருக்கும் நாற்காலிகளில் அவர்கள் அமர்ந்து பொழுதைப் போக்குவார்கள். அல்லது கோஷ்டி கோஷ்டியாகக் கூடி நின்று அன்றைய முக்கியச்செய்தி குறித்து அளவளாவி அபிப்ராயம் பரிமாறிக்கொள்வர்.

மகாநாடு துவங்கவேண்டிய சமயம் நெருங்கிவிட்டது; நிருபர்களின் பத்திரிகைகள் வெளிவரக்கூடிய நேரமும் கிட்டிவிட்டது. வாஷிங்டனுக்கு அருகேயும், தொலைவிலுள்ள நகரங்களிலும் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் தந்திப்போக்குவரத்தைத் தயாராக வைத்துக்கொண்டு பத்திரிகைகளை அச்சிடாமல் நிறுத்தி வைத்திருப்பார்



ஜனாதிபதி ரூஸ்வெல்ட்

கள். ஜனாதிபதியின் செய்திக்காகவே அவர்கள் காத்திருப்பர். நிருபர்கள் பொறுமையற்றவர்களாக அங்கும் இங்கும் போய்வருவார்கள்.

இச்சமயத்தில் ரூஸ்வெல்ட் தமது வருகையை உணர்த்துவார். மகாநாட்டுக்கு அவர் தயார். "ஒயிட் ஹவுஸ்" அதிகாரிகளில் ஒருவர் தமது கைகளை இருமுறை தட்டுவார். இது நிருபர்களைப் பார்ப்பதற்காகக் ஜனாதிபதி காத்துக்கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவிக்கும் அடையாளம்.

ரூஸ்வெல்டு அறைக்குள் பிரவேசித்ததும் நிருபர்கள் நின்றுகொண்டிருப்பார்கள். ஜனாதி

(அடுத்த பக்கம்)

"அவனுக்கு எந்த வேலைக்கும் போதிய சக்தி இருக்கிறது!"

அவனுடைய பெற்றோர்கள் அவனை லக்ஷத்தில் ஒரு பையன் என்று நினைக்கிறார்கள். வாஸ்தவத்தில் பலத்துடன் கூடிய சாதாரண சிறுவன்தான். குடும்பத்திற்கு வேண்டிய உணவுகளை டால்டாவினால் தயார் செய்யும் முறையைக் கற்றுக் கொள்ளாம லிருந்திருந்தால் அவனுக்கு இப்பொழுது இருக்கும் பலத்தில் பாதிகூட இராது. புஷ்டியைத் தரத்தக்கதும், விடமின் கூடினதுமான உணவுதான் குறைந்த சக்தியைத் திரும்பவும் கொடுக்கும். அப்படி சக்தியை பெருமல் போனால் இயற்கையாகவே ஆரோக்கியம் கெட்டுவிடும். இந்த சமயத்தில்தான் டால்டா உதவியளிக்கிறது. டால்டாவினால் உணவிற்குச் சேர்க்கப்படும் போஷாக்கும், விடமினும் சக்தியை காப்பாற்றுகிறது. சுகத்திற்காக உங்களுடைய குடும்ப ஆகாரங்களை டால்டாவினால் சமையல் செய்யுங்கள். அதுதான் சக்திக்கு காரணம்.

விடமின் சேர்ந்த டால்டா சரீரத்தை திடகாத்திரமாக வளரச் செய்யவும், குறைந்த பலத்தை ஈடு செய்யவும் உதவுகிறது. விடமினுடன் சேர்ந்த டால்டா ஓர் சிறந்த ஆகார வஸ்து. அது சக்தியைத் தரக்கூடியது. உணவுகளை டால்டாவினால் தயார் செய்தால் ஆகாரத்திற்கு அதிக ருசி கிடைக்கிறது. அநேக உணவுப் பொருள்களில் விடமினும், சக்தியும் குறைவாக இருப்பதால், டால்டாவினால் உணவுகள் தயாரிப்பது ஓர் சிறந்த முறை. அது பாலர்களுக்கும், விருத்தர்களுக்குங்கூட நல்லது.

விடமின் சேர்ந்த டால்டா தாவர எண்ணெயால் தயார் செய்யப் பட்டதென்று உத்திரவாதமுள்ளது —சீல் செய்த டின்களில் விற்கப்படுகிறது

HVM 1-381 TM

THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD., BOMBAY.

...ருப்பிடிகளைப் பார்வையிடுகிறார்

[illegible]

(...ம் பக்க தொடர்ச்சி)

பதி,... அவரது பத்திரிகைக் காரியதரிசி மிஸ்டர் ஸ்டீபன் எர்லி, ... காகக் 'கொடுக்கப்படுகிற ... ஆனால் அவற்றைப் பிரசுரிக்கக் கூடாது.

[illegible]

—"ஸ்டேட்ஸ்மேன்"

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டைகனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த ... மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி. குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாக்கெட் ஒரு அணா. ஒவ்வொன்றும், 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE

CASTOR Oil CHOCOLATES

ஏஜண்டுகள்:—

மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்
154, ...ணியப்ப நாயக்கன் ...
...டி., மதராஸ்.

சிறுவர் பகுதி

மந்திரப் பெட்டி

(ஆர். மருதப்பா)

முன்னொரு காலத்தில் அஸ்தினபுரி என்னும் பட்டிணத்தில் ஒரு கிழவி இருந்தாள். அவள் அதிகாலையில் எழுந்து மாட்டுத் தொழுவங்களுக்குச் சென்று சாணம் பொறுக்கி வந்து விரட்டி தட்டி விற்று ஜீவித்து வந்தாள். அவளுக்கு சுப்பனென்று ஒரு பேரன் இருந்தான். அவன் முழு சோம்பேறி. கிழவியை ஏமாற்றுவதும் வேளா வேளை சாப்பிட்டு விட்டு ஊரை சுற்றுவதும் அவனுடைய அன்றாடவேலை. அதைக் கண்டு அந்த ஊரார் அவனைச் சோம்பேறி சுப்பன் என்று பட்டப்பெயருடன் அழைத்து வந்தார்கள்.

ஒருநாள் கிழவி அவனைக் கூப்பிட்டு "சுப்பா! எனக்கோ அதிக வயதாகி விட்டது. நடக்கவும் சக்தி இல்லை. நீ இன்னமும் சோம்பேறியாய் சுற்றிக் கொண்டிருந்தால் பட்டினியாகத்தான் சாகவேண்டும். நீ ஏதாவது வேலை செய்து சம்பாதித்தும் கொண்டு வந்தால் நான் முந்தியபடியே உனக்கு சமைத்துப் போடுகிறேன்" என்றாள்.

அதைக் கேட்ட சுப்பன், "பாட்டீ நான் இவ்வளவு காலமாகச் சோம்பேறியாய் ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தேன். எனக்கு என்ன வேலை செய்யத் தெரியும்? அதிலும் இந்த ஊர் பூராவும் நான் சோம்பேறி என்று தெரியும். அப்படி இருக்க எனக்கு வேலைக் கொடுக்க யார் முன் வருவார்கள்?" என்றான்.

கிழவி:—"நீ சொல்லுவது உண்மைதான். இந்த ஊரில் உனக்கு வேலை கிடைக்காது. அடுத்த ஊருக்குச் சென்று வந்து ஏதாவது வேலை செய்து சம்பாதித்து கொண்டு வா" என்றாள்.

சுப்பன் அப்படியே செய்வதாகச் சொல்லி புறப்பட்டு மறுநாள் பக்கத்து ஊரை அடைந்து கூலிவேலைக்கு சுற்றுத இடமெல்லாம் சுற்றி அலைந்தான். ஒரு வேலையும் கிடைக்க வில்லை. ... காலையடைத்தது. தன் ஊருக்குத் திரும்பினான். வரும் வழியில் ஒரு கிணறு. தாக சாந்தி செய்ய கிணற்றில் இறங்கினான். ஜலத்திற்குள்ளிருந்து பேச்சுக் குரல் கேட்டது. "நான் சாமர்த்தியமாக அந்த மந்திரவாதியினிடமிருந்து தப்பித்து வந்துவிட்டேன். ஆனாலும் அவன் என்னைத் தேடாமல் இருக்கமாட்டான்" என்றது ஒரு குரல்.

"அதைப்பற்றி நீ கொஞ்சமும் கவலைப்படாதே. இந்த இடத்தைக் கண்டு பிடிக்க அவனால் முடியவே முடியாது." என்றது இன்னொரு குரல்.

அதைக் கேட்ட சுப்பனுக்கு திக்கிவாரிப் போட்டது. "பேயோ பிசாசோ தெரியவில்லை. எவனோ ஒரு மந்திரவாதிக்கு பயந்து இங்கு ஒளிந்து கொண்டு இருக்கிறது போல் காணப்படுகிறது. நாம் ஒரு தந்திரம் செய்து பார்க்கலாம்" என்று நினைத்து, "ஓகோ! நீ மந்திரவாதியை ஏமாற்றிவிட்டதாக நினைத்துக்கொண்டு விட்டாயா? உன்னை எங்கிருந்தாலும் ... வரும்படி என்னை அனுப்பியிருக்கிறான். நீ மரியாதையுடன் மேலே வந்தால் பேச்சு. இல்லா விட்டால் அந்த மந்திரவாதியையே இங்கு அழைத்துக் கொண்டு வந்து விடுவேன்" என்றான்.

அதைக் ... நடுநடுங்கி கிணற்றுக்குள்ளிருந்து வெளியில் வந்தது ஒரு பூதம். அதைக் கண்டதும் சுப்பனுக்கு கைகால் நடுக்கமெடுத்தது. எனினும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை.

வெளியில் வந்த பூதம் சுப்பனை நோக்கி "ஐயா நான் அந்த மந்திரவாதியிடம் சிக்கிப் பட்டபாடு போதும் போதுமென்றாகி விட்டது. நான் இங்கிருக்கிறேனென்று மட்டும் அவனிடம் சொல்லாதே. உனக்கு ஒரு வெகுமதி ...

[illegible]

S. S. மஹாதேவன்
108, ...
பி. ஆர். பிள்ளை & ...
டெலிபோன்: 3331.

"...ஜ சஞ்சீவினி"

இது ...ன்றுதான் ... குழந்தைகளின் ... சொற்ப காலத்தில் நிச்சயம் குண மளிக்கும் சிறந்த மருந்து. ... ஏமாறுவீர்கள்.

Dr. பிள்ளா ... & பிரதர்
11, தெற்கு மாட வீதி, மைலாப்பூர், மதராஸ்.

...கோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில், கீழவீதி.
திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பகுளம் போஸ்டு.

டோங்ரே பாலாமிருதம்

பலஹீனமான குழந்தைகளுக்கு

விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

ஜகஜ்ஜாலன்

ஓர் அரிய பெரிய நூதனமான துப்பறியும் நாவல். ...ஜாலன் என்னும் திருடனுடைய வீரதீர பராக்கிரமங்கள். படிக்கப் படிக்க ஆச்சர்யமாயிருக்கும். 518 பக்கங்கள் கொண்ட சுத்தப்பதிப்பு. விலை ரூ. 1—12— — தபாற்செலவு அணா 8.
மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

...திய ரத்னம் பண்டித
எம். து...வாமி ஐயங்கார், ஏ. கே. ஏ. ஸி.
ஆயுர்வேத ...ணம், ஆயுர்வேதாசார்ய அவர்களுடைய ... தயார் செய்யப்படும் சித்தௌஷதங்கள்.

...தயோக ர...
...தஹம், பி... பிரெஷர் High Blood-Pressu... என்னும் வாதரோகம், ... ரோகிகளுக்கு 150 ... ரூ. ... 50 ... 6.

மாதுலுங்க ர...
...ன்மை, ... பித்தக் கோளாறுகள், கர்ப்பிணிகளின் பித்த ...ரங்கள், ... குழந்தை ... ற்குக் குளிர்ச்சிக்கும் ... 2. 1 புவுண்ட் ரூ. 5. 6 அவுன்ஸ் ...

ஹ்ரீதக்யாதி லேஹ்...
எவ்வித ...லபந்தத்தையும் ... நாள் ...திக்கும் ... ஸங்கடமுமில்லாமல் ... தேக ...லத்தை ... இரத்தமூலம், வயிற்றில் ... இவற்றிலும் மிக்க உபயோ... ரூ. 3. ... 1 ...

...வம்
...கும் இர்த்த விருத் ... மையாத அயத்திரா ... ராகம், பலயீனம், ... முதலிய சர்மரோகங் ... சொறி, ... ருந்துபவர் அவச்யம் ... கன் இவ... கூடிய ... 1 பவுண்டு ... உபயோகி... ரூ. 4.

இராஜாம்ருகாங்கம்:
க்ஷயரோகத்தைத் தீர்ப்பதற்குச் சாஸ்திரத்திலும் அனுபவத்திலும் மிகப் பெயர்... க்ஷயரோகிகள் வேறு சிகித்ஸைகளால் குணமடையாமல் இதனால் சுகமடைந்திருக்கிறார்கள். 100-மாத்திரை ரூ. 10 50 மாத்திரை ரூ. 5—8—0.

ஸித்த மகரத்வஜம்
... புஷ்டியை விருத்தி செய்ய ... பெண் இருபாலரும் உபயோகிக்கக் கூடிய சாஸ்திரப் ...ரஸித்தமான சித்தௌஷதம் ... தங்க ப...மம் கலந்த ஆர்யன் பார்... மகரத்வஜமே மிகவும் ... து. 1 தோலா செந்தூர... மாத்திரையுருவாக 100மாத்... ரூ. 15. 50 மாத்திரை ரூ. ... 25மாத்திரை ரூ. 4-8-0

சர்ம...ராகாந்தக லேபம்
எச்சில் தழும்பு, மேகப்படைகள், சொறி, சிரங்கு முதலிய தோலைப்பற்றிய கடுமையான வியாதிகளை சீக்கிரத்தில் நிச்சயமாகவும் திருப்திகரமாகவும் ...டியது நூற்றுக் கணக்கானபேர் சுகமடைந்திருக்கிறார்கள். பெரிய டப்பி ரூ. 1—4—0 சிறிய டப்பி அணா 12.

குறிப்பு:—எதற்கும் தபால் சார்ஜ் பாக்கிங் சார்ஜ் முதலியது வேறு.

... சாஸ்த்ரீய ஔஷதங்களும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன்)

"...பார்மஸி" — "ஆர்ய கிருஹம்"
11, ஆதியப்ப... முதலி தெரு :: வேப்பேரி போஸ்டு :: மதராஸ்.

...H. KHAN, (S.M.) 42, ...gate St., Fort, Bombay. ...1345.

நாங்கள் **501** ஸ்பெஷல்தான் உபயோகிக்கிறோம் — ஏனென்றால்

மிருகக் கொழுப்பற்றது

501 ஸ்பெஷலைத்தவிர 501 வாஷிங்ஸோப்பு ஒன்றும் உள்ளது. அதன் விலை இன்னும் குறைவு. நம் வீட்டில் எல்லா அவசியங்களுக்கும் தகுந்த ஸோப்பு. கியூபுகளாகவும், நீளக் கட்டிகளாகவும், வில்லைகளாகவும் ...வல்களாகவும் எல்லாப் பெரிய கடைகளிலும் கிடைக்கும். 501 ஸ்பெஷல் வில்லைகள் 3 ஸைஸ்களில் பெட்டிகளில் பா... செய்து விற்கப்படுகிறது.

...ம்கோ... இலாகா:
1, வாரன் ரோட், பீமண்ணபேட், மைலாப்பூர், மதராஸ்.
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்.

FS ...948.

...the Swadesamitran Power Press, Mount Road, Madras, Editor, C. R. Srinivasan

சீவக சிந்தாமணி - 10.

பெண்ணுயிர் காத்த பெரும் வீரம்

—வ. வேணுகோபாலன். எழுதியது

நீர் விளையாட்டிற்காகச் சென்ற ஆடவரும் மகளிரும் இராசமாபுரத்தின் சோலையிலேயே தங்கினர். இரண்டாம் நாளும் நீர் விளையாடி மகிழ்ந்தனர். சுரமஞ்சரியின் நட்பை மறுபடியும் பெற வேண்டுமென்று அருகக் கடவுளை வணங்கியபின் குணமாலையும் அவள் சேடியுடன் நீர் விளையாட்டிற்கு வந்திருந்தாள். பூக்களாலும் தழைகளாலும் அலங்கரித்துக்கொண்ட மகளிரும் ஆடவரும் ஊஞ்சலாடியும், பந்து விளையாடியும், நாட்டியமாடியும், உணவருந்தியும், கொடி வீடு கட்டி அதில் அமர்ந்தும் பொழுது போக்கினர். நீர் விளையாடிய ஒரு மங்கை கீழே உட்கார்ந்து தன் கூந்தலை விரித்துச் சுற்றிலும் பரப்பி உலர்த்தியிருந்தாள். அங்குச் சென்றுகொண்டிருந்த ஆண் மயில், அம்மங்கையைத் தன் பெட்டை மயிலென்று எண்ணித் தழுவியது. உடனே அம்மங்கை நடுங்கி தலை நிமிர்ந்து பார்த்தாள். மயில் மங்கையைக் கண்டதும் பயந்து ஓடியது இந்தக் காட்சியை சோலையிலுள்ள யாவரும் பார்த்துப் பரிகசித்திருந்தனர்.

ஓரிடத்தில் நீர் விளையாட்டிற்கு வந்திருந்த அந்தணர்கள் தாம் உண்ணுவதற்குக் கொணர்ந்த சோற்றை கரையில்வைத்துவிட்டு நீராடிக்கொண்டிருந்தனர். அப்போது பசியால் வருந்தி ஓடிக்கொண்டிருந்த நாய், அந்தச் சோற்றைக் கண்டு ஆவலுடன் கவ்வி உண்ணத் தொடங்கியது. அதைக் கண்டு கோபங்கொண்ட அந்தணர்கள் கல்லையும், தடியையும் எடுத்துக் கொண்டு அந்த நாயைத்துரத்திச் சென்று அடித்தனர். நாய் அவர்களைக் கண்டு பயந்து குரைத்துக்கொண்டே அங்கிருந்த குளத்தில் தாவி நீந்தியது. நீந்துகின்ற நாயை விடாமல் சுற்றிவளைத்து, அதன் காலொடியும்படி அடித்துப் போட்டனர் அந்தணர். அப்போது, கள்ளைக்குடித்து மதி மயங்கிய ஒருவன், தன் இரண்டு மனைவியருடன் பிதற்றிக்கொண்டே வந்து அந்தணர்களை வழி மறித்து வைதான்.

"மூடர்களே! என் நாயைக் கொன்று வீட்டீர்களே! அதன் உயிரைத் திரும்பக் கொடுங்கள். இல்லாவிட்டால் என் கைகளின் பாரத்தைத் தாங்குங்கள்; இரண்டுமில்லாதுபோனால் இந்தக் கள் நிறைந்த குடத்தால் உங்கள் தலைகளை உடைப்பேன்" என்று கோபித்து அதட்டினான். அந்தணர்கள் மனம் நடுங்கி நின்றனர். அந்த சமயம் அவ்வழியே வந்துகொண்டிருந்த சீவகன், கள் குடியனைப் போகச் செய்து அந்தணர்களையும் வேறு வழியே போகச் செய்தான். பின்னர் அவ்விடத்தே போகின்ற உயிருடன் குரைத்துக் கொண்டு கிடந்த நாயைச் சீவகன் பார்த்ததும் மனமிரங்கி அதனருகிலமர்ந்து தடவிக் கொடுத்தான். உயிர்போகும் தருணத்திலுள்ள அந்த நாயும சீவகனைக் கண்டு மகிழ்ந்து வாலை ஆட்டியது. நாய் நற்கதியை அடைய வேண்டும் என்றெண்ணிய சீவகன், அதன் காதில், பஞ்ச நமஸ்கார என்றும் மஹாமந்திரத்தை உபதேசித்தான். உடனே உயிர் நீங்கிய அந்த நாயுடலினின்றும் ஓர் தேவபுருஷன் தோன்றி சீவகன் முன் நின்றான்.

"ஐயா! நீ யார் என்பதைக் கூறவேண்டும்" என்று வியப்புடன் சீவகன் கேட்டான்.

"அரசகுமர! உன் அருளால் நாயுடலைவிட்டுத் தேவனானேன். சுகஞ்சணன் என்பது என் பெயர். யக்ஷருலகில் உள்ள சங்கவெண்மலையில் சந்திரோதயம் என்னும் நகரில் வாழ்பவன்" என்று சுதஞ்சணன் மொழிந்தான்.

"ஐயா! உன்னைக்கண்டு இணையில்லா இன்பத்தை யெல்லாம் பெற்றேன்" என்று சீவகன் மகிழ்வுடன் கூறினான்.

"அரசகுமர! உன்னை யான் அறிவேன். உலகமுழுவதும் நீ ஆளும்படி தருவேன்; உன் விருப்பம் என்ன?" என்று சுதஞ்சணன் கேட்டான்.

"சுதஞ்சண! பகைவரால் வளைக்கப்பட்டு யான் வருந்த நேரிட்டால் உன்னை நினைப்பேன்; வேறுவகையில் குறை சிறிதும் இல்லை" என்று சீவகன் சொன்னான்.

"அரசகுமர! என்னை நினைக்கும் போது உன்முன் நிற்பேன். என்னை உன் நண்பனாகவே எண்ணுவாயாக" என்று கூறிச் சீவகனைத் தழுவி விடை பெற்றுச் சென்றான் சுதஞ்சணன்.

சுதஞ்சணன் ஆகாயத்தே மறைந்து சென்றதும், இக் காட்சியைக் கண்ட பலரும் அதிசய முற்று நின்றனர். அதை அறிந்த சீவகன், "ஐயன்மீர்! புண்ணியம் செய்யாத நாய் பஞ்ச நமஸ்கார மந்திரத்தால் தேவனாகுமோ? இதுமாயமாக வல்லவா இருக்கிறது என்று எண்ணவேண்டாம்; நெருப்பில் போட்ட இரும்பு உருகிய பின், அதில் ரஸத்தை ஊற்றினால் மாற்றற்ற பொன்னாக விளங்குகிறதல்லவா? அதுபோல, நாய் தேவனாயிற்று என்று எண்ணுங்கள்" என்று கூறி மகிழ்வித்தான். எல்லோரும் வியப்புடன் பேசிக் கொண்டே சென்றனர்.

நீர் விளையாட்டு முடிந்தமையால் நகர மாந்தர் யாவரும் தங்கள் தங்களுடைய வாகனங்களில் ஏறிக் கொண்டு, நகருக்குத் திரும்பிப் போகலாயினர். சீவகனும் தன் தோழர்களுடன் உல்லாஸமாகப் பேசிக்கொண்டு நகரத்திற்குச் சென்றுகொண்டிருந்தான். ஆடவரும் மகளிரும் ஆரவாரத்துடன் கூட்டம்கூட்டமாய்ப் போய்க்கொண்டிருந்தனர்.

"உங்கள் சருமம் சுத்தமாகவும் மிருதுவாகவும் இருக்கும்"

லீலா சிட்னிஸ் இதை இன்னமும் அழகு படுத்தலாம் என்று உறுதியுடன் கூறுகிருள்!

இதோ ஓர் சினிமா நக்ஷத்திரத்தின் விசேஷ அபிப்பிராயம். அவள் சொல்கிருள் "நான் லக்ஸ் டாய்லெட் ஸோப்பை உபயோகிக்கும்படி உங்களுக்கு சிபார்சு செய்கிறேன். நான் அதையேதான் எப்பொழுதும் உபயோகிக்கிறேன். இதுதான் என் அழகின் இரகஸ்யம். என் சரும பாது காப்பிற்காக அதை முற்றிலும் நம்புகிறேன். அதனழகிய நுரை மாசு மறுவிற்குக் காரணமான தும்பு தூசிகளை சருமத் துவாரங்களி லிருந்து அப்புறப் படுத்தி, சருமத்தை சுத்தமாக்கி அதை பட்டுப் போல் மிருதுவாக்கும்.

லக்ஸ் டாய்லட் ஸோப்

சினிமா நடிகளின் அழகிய ஸோப்

LTS. 61—169 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED

அந்த சமயத்தில், வீதி வழியே, கட்டியங்காரனுடைய பட்டத்து யானையான அசனிவேகம் மதம்பிடித்துக் காலிற் கட்டிய சங்கிலியோடு கட்டுத்தறியையும் முறித்துக் கொண்டு முழங்கிய வண்ணம் ஓடி வந்தது. மதம் பிடித்த அந்த யானையின் முழக்கமும், உருவமும், ஓடுவதால் உண்டான அதிர்ச்சியும் எல்லோரையும் நடுங்கச் செய்தன. நீர் விளையாட்டு முடிந்து வீதி வழியே செல்லும் மகளிரும் ஆடவரும் வாகனங்களை விட்டு இறங்கி நாலா புக்கங்களிலும் ஓடினர். முத்துச் சிவிகையில் ஏறிச் சென்ற குணமாலை யானை ஓடி வருவதைக் கண்டு அஞ்சினாள்; உடனே சிவிகையைத் தூக்கி வந்தவர்கள் கீழே வைத்து விட்டு ஓடி விட்டனர். குணமாலையும் சேடியான மாலையும் சிவிகையினின்றும் வெளி வந்து ஓடுகையில் யானை அவ்வழியே வருவதைக் கண்டு நடுங்கி நின்றனர். யானை அருகில் ஓடி வருவதைக் கண்ட குணமாலை மயங்கி மூர்ச்சையுற்றுக் கீழே வீழ்ந்தாள். அதைக் கண்ட, சேடியாகிய மாலை, "இந்த யானை என்னைக் கொல்லட்டும்; அதற்குள்ளாக எந்த ஆண் மகனுயினும் குணமாலையைக் காப்பாற்றட்டும்" என்று எண்ணி, தன் இரு கைகளையும் தலைமேல் குவித்து நின்று, "இவ்விடத்தில், பெண்ணுயிரைக் காக்கும் ஆண் மக்கள் இல்லையோ! ஆண் மக்கள் இல்லையோ" என்று அலறியவளாய் யானை வரும் வழியே நின்ருள்.

தோழரோடு வந்து கொண்டிருந்த சீவகன் இந்தக் காட்சியைப் பார்த்தான்; அவன் மனம் பெண்ணுயிரைக் காக்க முற்பட்டது; "பெண்ணின் உயிரைக் காப்பாற்ருமல் அஞ்சி வாழும் வாழ்வைக் காட்டிலும் இறந்து போதலில் ஒரு குறையுமில்லை; இதனுல் கட்டியங்காரனுக்கும் எனக்கும் பகை உண்டானுல் அது பெண்ணுயிரைக் காட்டில் பெரிதல்ல" என்று உறுதி செய்து தோள் வீங்கும்படி உடலைக் குலுக்கித் தலை நிமிர்ந்து கச்சங்கட்டி, யானை முன் முழங்கி ஓடினன். குணமாலையை நோக்கி ஓடி வந்த யானை அவளை விட்டுத் தன் எதிரே வந்த சீவகனை எதிர்த்தது. சீவகன் முழக்கத்துடனே பூமியினின்றும் தாவிச் சிங்கம் போன்று யானையின் நெற்றியில் குதித்தான், அதன் தந்தங்களை, கைகளாலும் கால்களாலும் குத்தி உதைத்துச் சண்டை செய்தான். யானையோடு பொருதுகொண்டிருந்த சீவகன், "குணமாலையை அப்புறம் எடுத்துப் போங்கள்" என்று கூவினன். உடனே, மாலையும், பல மகளிரும் குணமாலையை எடுத்துச் சென்று சைத்தியோபசாரம் செய்தனர். குணமாலை, மனமயங்கியிருந்தாலும், 'குணமாலையை அப்புறம் எடுத்துச் செல்லுங்கள்' என்று சீவகன் கூறியதைக் கேட்டாளாதலால், பெண் உயிர் காத்த பெரும் வீரத்திற்கு மனமுருகியிருந்தாள்.

சீவகன் மீது அடங்காக் கோபம் கொண்ட யானை துதிக்கையால் அவனைச் சுழற்றி எறிவதற்குத் துதிக்கையைத் தூக்கியது. சீவகன் யானையியல்பறிந்தவனுதலால், உடலைச் சுருக்கிக் குனிந்து யானை அறியாமல் பின்புறமாகத் தாவிக் குதித்து ஓரிடத்தில் மறைந்திருந்தான். யானை சீவகனைக் காணுமல் வேறு வழியே ஓடி விட்டது.

யானை சென்ற பின்பு, குணமாலையிருக்கும் இடத்தைச் சீவகன் அடைந்தான். தன் உயிரைக் காப்பாற்றிய சீவகனுடைய ஆண்மையை எண்ணி அவனை நினைந்து கண்ணீர் ததும்ப உட்கார்ந்திருந்தாள் குணமாலை. குணமாலையின் நிலையை அறிவதற்கு அங்கு வந்த சீவகனைக் கண்டதும், நாணமடைந்து எழுந்து பூங்கொடியைப் போல் சாய்ந்து நின்ருள் குணமாலை. சீவகனுக்கு நன்றி பாராட்டுபவள் போல தன்னுடைய புன்னகை ததும்பும் முகத்தால் சீவகனுக்கு விருந்து செய்தாள். சீவகனுடைய கண்களும் குணமாலையின் கண்களும் ஒன்றையொன்று பருகுவன போல நோக்கின. இருவருடைய கண்களும், 'கண்ணோடு கண் நோக்கிய பின், வாய்ச் சொற்கள் வேண்டியதில்லை!" என்பதைப் புலப்படுத்தின. சட்டெனச் சீவகன் திரும்பித், தன் தோழருடன் மாளிகைக்குச் செல்லலானுன், குணமாலை சீவகன் சென்ற வழியையே நோக்கியிருந்து அவ்விடம் விட்டுத் தன் சேடியுடன் மாளிகை சென்று கன்னி மாடம் புகுந்திருந்தாள். சீவகனுடைய ஆண்மையும் அழகும் வடிவமும் குணமாலையின் உள்ளத்தே பதிந்து வருத்தின. சீவகன் நோக்கிய நோக்கம் அவள் உயிரைக் கணந்தோறும் வருத்திக் கொண்டிருந்தது, குணமாலையின் முகவாட்டத்தையும் மனச் சோர்வையும் கண்ட அவள் தாய் விநயமாலை "வருத்தத்திற்குக் காரணம் யாது?" என்று கேட்டாள். யானை கொல்ல வந்த செய்தியைச் சொல்ல அஞ்சிய சேடியர் வாய்பேசாதிருந்தனர்: அவர்கள் பேசாதிருந்தமையால், "சோலைக்குச் சென்று தோழியருடன் நீர் விளையாடி வந்த வருத்தம் தான்" என்று எண்ணிய விநயமாலை, குணமாலையைத் தழுவி அவள் கண்ணீரைத் துடைத்துத் தேற்றினுள்.

"குணமாலை, உன்னுடைய கிளி, 'எனக்குக் கிண்ணத்தே பால் கொடுக்கும் குணமாலையைக் கூப்பிடுங்கள்' என்று அழைத்துக்கொண்டே இருக்கிறது. அங்கு சென்று அதன் வருத்தத்தை மாற்று" என்று விநயமாலை கூறிச் சென்ருள். குணமாலை, கிளியின் நினைவு வந்தவுடன் தனியே எழுந்து சென்று 'யானையை அடக்கி என் உயிரைக் காப்பாற்றிய வீரனைக் காண்பது எந்நாள்?' என்று புலம்பினுள். பின்னர் கிளி இருக்குமிடம் சென்று அதை நோக்கி, "கிளியே! உன்னையல்லாமல் எனக்கு வேறு துணையில்லை. யான், பிழைத்திருக்கும்படி; யானையிடமிருந்து என் உயிரைக் காப்பாற்றிய காதலனிடம் நீ தூது சென்று வர வேண்டும்" என்று கூறினுள்.

"நங்காய்! வருந்தாதே, உன் காதலன் இந்நாட்டில் இருக்கின்ருனுல், இடம் முதலியன சொல்லு' என்று தன் மழலை மொழியால் கிளி கூறியது.

குணமாலை மன மகிழ்ந்து, தன் காதலை வெளிப்படையாகக் கூறி; சீவகன் இருக்குமிடத்தை உரைத்துக் கிளியைத் தூதாக அனுப்பினுள்.

கிளி, குணமாலையின் காதலைச் சொல்லுவதற்குச் சீவகன் மாளிகையை நோக்கிப் பறந்து சென்றது.

அடுத்த வாரம் :

தூது சென்ற கிளி

சரும சுகத்திற்கு ரெக்ஸோனு

சரும ஆரோக்கியத்தைக் காப்பாற்றுவதனுல் சருமத்திற்கு அழகை கொடுக்கிறது

இந்த அழகிய சோப் இருவித நன்மைகள் அளிக்கிறது. சரும ஆரோக்கியத்தைக் காப்பாற்றி சருமத்திற்கு அழகை அளிக்கிறது. முதலில் சுகாதார முறையில் சுத்தம் செய்கிறது. சருமத்திற்குக் கெடுதியளிக்கக்கூடிய கிருமிகளையும், அசுத்தத்தையும் நீக்குகிறது. அதிலிருக்கும் எண்ணெய் சத்துக்கள் சருமத்திற்கு வலுவூட்டி சருமத்திற்கு சுத்தமும், புதிய உணர்ச்சியும் அளிக்கிறது.

ரெக்ஸோனுவில் உள்ள "காடில்" உங்களது பாதுகாப்பு.

ரெக்ஸோனுவில், ஆரோக்கியமளிக்கக்கூடிய சுகாதார சத்துக்கள் நிறைந்த "காடில்" என்னும் பொருள் சேர்ந்திருக்கிறது.

மெல்லிய சருமத்திற்கும் உயர்ந்தது குழந்தைகளுடைய சருமத்திற்குக்கூட கெடுதியளிக்காத அவ்வளவு மென்மையானது. மிக மெல்லிய சருமத்தையும் சொறி, சிரங்கு முதலியவற்றினின்றும் பாதுகாக்கும்.

ரெக்ஸோனு பசை ஹிதமளித்து, புண், சொறி சிரங்கு படை முதலிய வற்றை சீக்கிரத்தில் குணப்படுத்தும்

THE RAPID HEALER Rexona OINTMENT REXONA PROPRIETARY LIMITED SYDNEY N.S.W.

Rexona

சோப்பும் பசையும் சரும அழகை அதிகமாக்கிக் காப்பாற்றுகிறது.

RP. 15—169 TM REXONA PROPRIETARY LIMITED

தாய் உள்ளம்

"கோதை" மொழிபெயர்த்தது

நமது தொடர் கதை

★

நகேந்திரநாத மித்தர் எழுதியது

★

வங்காளி மூலம்

★

முன் கதைச் சுருக்கம்

★

ஹரகண்ட பாபுவின் இளைய மனைவி சோபாராணி. அவரது மூத்த மனைவிக்கு கௌரி என்ற பெண்ணும் அமலன் என்ற புத்திரனும் இருக்கின்றனர். ஹரகண்ட பாபுவின் நிலைமை மிகவும் பரிதாபகரமானது. கௌரி சதா தனது சித்திக்கு எதிராகப் புகார் செய்து கொண்டே இருப்பது சகஜம். அவளிடம் தன் தம்பி அமலன் இருக்கக்கூடாது என்று அவனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு போய் விடுகிருள். ஊரில் எல்லாம் சோபாராணியைப் பழித்து வம்புப் பேச்சு: காலம் கடந்தும் அமலன் திரும்பி வரவில்லை. சோபாராணி மனதில் படும் கஷ்டம் சொல்லத்தரமன்று. இவ்விதமே காலம் கழிந்தது. ஹரகண்ட பாபுவும் காலமானுர்; சோபாராணியின் சகோதரன் சொத்துகளுக்குக் கார்டியனுக நியமிக்கப்பட்டார். அமலன் இங்கிலாந்து சென்ருன்: அவனுக்குப் பணம் சரிவரப் போகவில்லை:

3

அமலன் சீமைக்குப் போய் வந்தது வீணுகப்போய் விடவில்லை. சில நல்ல விஷயங்களையும் கற்று வந்திருந்தான். அவன் நன்ருக வர்ண சித்திரங்கள் தீட்டுவான்; கிரிக்கெட், பில்லியர்ட்ஸ் ஆகிய விளையாட்டுகளில் நல்ல ஸமர்த்தன்: தவிர, நவநாகரீகத்தின் கேந்திரஸ்தானமான இங்கிலாந்திலே எட்டு வருஷகாலம் இருந்ததன் பயனுக ஐரோப்பியர்களுடைய நடை, உடை, பாவனை, வாழ்க்கை, பாஷை முதலியவற்றை ஐயந்திரபறக் கொண்டிருந்தான். அந்த சிபார்சினுல் நவநகர் மஹாராஜா போஷித்து வந்த கிரிக்கெட் ஆட்டக்காரருடைய கோஷ்டியில் அவனுக்கும் இடம் கிடைத்தது. அதனுல் அவன் மஹாராஜாவுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் உண்டாயிற்று. கடைசியாக அவன் மஹாராஜாவின் அந்தரங்க உத்தியோகஸ்தர்களுள் ஒருவன் ஆனுன்.

ஆனுல் இந்த அதிர்ஷ்டம் அதிக நாள் நிலைக்கவில்லை. ராய் சௌதுரி அவர்களுடைய நடத்தை, தைரியம் 'திமிர்' துடுக்கு, அலக்ஷியம் ஆகியவை யாவும் கலந்திருந்தன. மஹாராஜாவின் வேலைக்காரர் சிலருக்கு அவன் நடத்தை பிடிக்கவில்லை. அதனுல் அவன் அங்கே நீடித்திருப்பது கஷ்டமாகப் போய்விட்டது.

ஆகவே அமலகுமாரன் கல்கத்தா திரும்பிவரும்படி நேரிட்டது. அங்கே வந்து மறுபடியும் வேலைக்குப் பிரயத்தனம் செய்தான். தன் செலவுக்குப் பணம் கொஞ்சம் அனுப்பவேண்டுமென்று கௌரிக்குக் கடிதம் எழுதினன். ஆனுல் ஒன்றும பிரயோசனப்படவில்லை. அவன் வக்கீலைக்கொணடு நித்தியானந்தனுககு ஒரு நோட்டீஸும் கொடுத்தான். ஆனுல் அதற்குத் தக்க பதில் தான் கிடைத்தது.

அமலன் அதிக நாள் இங்கிலாந்திலே தங்கி இருந்தபடியால் அவனுக்கு ஏராளமான நண்பர்கள் இருந்தார்கள்! ஆனுல் அத்தகைய நண்பர்களை அவன் பார்க்கப்போனுல ஒரு கோப்பை தேயிலை பானமே கிடைத்து வந்தது: சில சமயங்களில் சாப்பாட்டுக்கும் அவர்கள் அழைத்தனர். அதற்கு மேல் ஒன்றும் கிட்டவில்லை. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களும் அவனுக்கு அதிகமாக வாய்க்கவில்லை. ஏனெனில், இவன் ஒரு நண்பன் வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டு வந்தால், அவனை மறுமுறைதான் அழைத்துச் சாப்பாடு போட வேண்டும். அது தான் சம்பிரதாயம். ஆனுல் கல்கத்தா போன்ற பட்டணத்தில் கையில் பணம் இல்லாமல் அவனுல் என்ன செய்ய முடியும்.

இவவிதம் அமலன் தன் சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருககையில் அவன் நோய்வாய்ப்பட்டான். அது அதிகமாகி விடவே ஆஸ்பத்திரிக்குப் போகும்படி நேரிட்டது.

மூன்று மாத காலம் கழித்து அவன் ஆஸ்பத்திரியினினறும

தசரா!

இப்பெரும் தேசீயத் திருநாளில் ஒவ்வொரு வீட்டிலும் விருந்தளித்த வண்ணமே இருக்கின்றனர். இந்நன்னுளைக் கொண்டாட உங்கள் உற்ருரையும் நண்பர்களையும் காணச் செல்கிறீர்கள். எங்கு சென்ருலும் இனிய தின்பண்டங்களும் வழக்கம் போல் டீயும் அளிக்கிருர்கள். தசராவைப் போன்ற பெரும் விசேஷ நாட்களுக் கேற்ற ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் அளிக்கவல்ல பானம் டீ ஒன்று தான். ஒவ்வொரு விசேஷ நாளையும், டீ அளித்துப்சரித்துக் கொண்டாடுங்கள்.

இந்தியன் டீ

விசேஷ சமயத்திற்குகந்த உயர்ந்த பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளிவிடப்பட்டது IK 153

விடுவிக்கப்பட்டபோது, தான் தங்குவதற்கு ஏதாவது ஓர் இடம் வேண்டுமே என்ற கவலையே அவனுக்குப் பெரிதாக இருந்தது. அவன் உடல் மெலிந்து சோர்வுற்றிருந்தான். மனத்திலும் கவலையும் பயமும் குடிகொண்டிருந்தன. கையில் தம்பிடி கிடையாது. மேலே உடுத்துவதற்கும் துணி இல்லை. இப்படிப்பட்ட நிலையில் இருக்கும் எவனுக்கும் பைத்தியம் பிடித்து விடாதா என்பதை அவன் திரும்பத் திரும்பத் தன் மனத்திற்குள்ளேயே ஆலோசித்துப் பார்த்தான்.

* * * *

தூரத்திலிருந்து பார்த்தாலே நந்தகைதியின் நகர்ப்புறத்தே அமைந்திருந்த நித்தியானந்த பாபுவின் மாளிகை மிக்க அழகாகத் தோன்றும். சாலையை நோக்கி வெளி 'கேட்' ஒன்று இருந்தது. அதனுள் நுழைந்தால் பங்களாவின் வராந்தாவுக்குச் செல்லும் பாதை இரு வட்டங்களாகப் பிரிந்து காணப்பட்டது. பாதையின் இருபுறங்களிலும் மருதோன்றிச் செடிகள் நன்றாக வெட்டி விடப்பட்டு நின்றன. ஓரத்தில் செங்கற்கள் பூமியில் நடப்பட்டு பாதையின் எல்லையைக் காட்டி வந்தன. உயர்ந்த மரங்கள் இருபுறங்களிலும் தலை நிமிர்ந்து நின்றுகொண்டிருந்தன. ரோஜா வர்ணம் பூசப்பட்டிருந்த அந்தக் கட்டிடம் சாயங்கால வேளையில், பார்ப்போருக்கு அஸ்தமிக்கும் சூரியனுடைய காந்தி பட்டு செக்கர் நிறம் வாய்ந்த மேகத் துண்டமே பூமியில் இறங்கி வந்ததே போன்ற காட்சி அளித்து வந்தது.

அந்தப் பாதையின் வழியாக ஓர் இளைஞன் நிதானமான நடையுடன் சென்று கொண்டிருந்தான். அவன் உடலில் போட்டிருந்த சொக்காயை மறைத்து ஒரு போர்வையை அணிந்திருந்தான். அது கழுத்தை மூடிக்கொண்டது மட்டுமல்லாமல் அவன் முகத்தையும் பார்ப்போருக்கு நன்றாகத் தெரியாதபடி ஒருவாறு மறைத்திருந்தது. அவன் ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும்போதும் யாராவது வருவார் என்றே எதிர்ப் பார்த்து நடந்தவன் போலக் காணப்பட்டான். ஆனால் அவன் வராந்தாவை அடைந்தும்கூட ஒருவரும் எதிர்ப்படவில்லை. சிறிது நேரம் நின்று பார்த்து விட்டு கடைசியில் மங்கிய குரலில், "யாரங்கே, தர்வான்" என்று கூப்பிட்டான். முன்னறையில் விளக்குக்கூட ஏற்றப்படவில்லை.

வீட்டினுள்ளிருந்து ஒரு சிறுமி வெளியே வந்து, "என்ன வேணடும்?" என்று கேட்டாள்.

"நித்தியானந்த பாபு வீடு இது தானே?"

"ஆமாம், நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?"

"நான் கல்கத்தாவிலிருந்து வருகிறேன். நித்தியானந்த பாபு உள்ளே இருக்கிறாரா?"

"இல்லையே, அவர் கோட்டிலிருந்து இன்னம் வரவில்லை. உட்காருங்கள்"

"குழந்தாய், நித்தியானந்த பாபுவுக்கு நீ என்ன வேண்டும்"

"நான் அவருடைய மகள். நீங்கள் உள்ளே வந்து உட்காருங்கள்"

"அது சரி, உன் அத்தை எங்கே?"

"என் அத்தையா? அவள் உள்ளே தான் இருக்கிறாள்"

"நான் வந்திருக்கிறேன் என்று அவளிடம் சொல்ல மாட்டாயா?" என்று கெஞ்சினான் அந்த இளைஞன்.

அவனுக்குப் பதில் சொல்வதற்குப் பதிலாக அந்தச் சிறுமி உள்ளே ஓடி விட்டாள். அவள் நேரே சோபாராணியிடம் வந்து, "அத்தை, இங்கே வந்து பாரேன். உன்னைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார்" என்று கூப்பிட்டாள்.

"யார் அம்மா? என்னைப் பார்க்கவா? அதற்காக யார் வரக்கூடும்" என்று கேட்டாள் சோபாராணி.

"ஆமாம், உன்னைத்தான் பார்க்க வேண்டும் என்கிறார். அவர் ரொம்பவும் நல்லவராக இருக்கிறார்."

சோபாராணி முன்னறை வழியாக எட்டிப் பார்த்தாள். ஆனால் அங்கே வெளிச்சமே இல்லை. ஆகவே அவள் வேலைக்காரனைக் கூப்பிட்டு முன்னறையில் விளக்கேற்றச் சொல்லி விட்டுத் தன் உடையை மாற்றிக் கொள்ளப் போனாள். அவள் திரும்பி வந்து, அறையில் தட்டி மறைவில் நின்று கொண்டு வேலைக்காரனைக் கூப்பிட்டு, "யாரோ வந்திருக்கிறார் என்று குழந்தை சொல்லுகிறாள், அவர் யார் என்று பார்த்து என்ன வேண்டும் என்று கேள்" என்று சொன்னாள்.

அதற்குள்ளாக அந்த இளைஞன் முன்னறைக்கு வந்து விட்டான். அந்த அறை நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஒரு பக்கத்தில் ஒரு அழகான கட்டிலும் அதன் மீது நல்ல மெத்தையும் போடப்பட்டிருந்தன. கூட வெள்ளைத் தலையணைகளும் கிடந்தன. பக்கத்திலே ஓர் அலமாரியில் பல பெரிய புத்தகங்கள் அடுக்காக வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் முதுகில் தங்க 'கிலிட்'டால் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்கள் வெளிச்சத்தில் பளபளவென்று மின்னின. அலமாரியின் பக்கத்திலே சில நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. படுக்கைக்கு உயர விலை உயர்ந்த ஜாலர்களுடன் ஒரு பங்கா தொங்கிக் கொண்டிருந்தது. அறையின் மத்தியில் 'குளோபர்' விளக்குத் தொங்கிக்கொண்டிருந்தது. அதன் ஸ்படிகக் கற்கள் காற்றில் அலையுண்டு மெல்லிய சப்தத்தைக் கிளப்பின. அறையின் ஒரு பக்கத்தில் வீட்டுக்குள் செல்லும் வழிக் கதவு இருந்தது. வாசற்படியில் நீலநிறத்தாலாகிய படுதா ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. சோபாராணி அந்தப்படுதாவுக்குப் பின் புறத்திலிருந்து "பார்த்து, யார் அவர் என்று பார்" என்று சொன்னாள்.

நாட்டுப்புறத்து வேலைக்காரன் அவன்; உடனே திரும்பி வந்து, "ஆமாம். ஒருவர் வந்திருக்கிறார். கல்கத்தாவிலிருந்து வந்தவராம்" என்று சொன்னான்.

அவனுடைய மந்தபுத்தியை சோபாராணி நன்கு அறிவாள். ஆகவே அவள் அவனை மறுபடியும் அனுப்பி, வந்தவர் யார் என்பதை விசாரித்து வரச்சொன்னாள்.

ஆனால் அதற்கு அந்த இளைஞன் இடங்கொடுக்கவில்லை. அவனே முன் வந்து, "அம்மா! நான் யாரா? நான் தான் உன் பிள்ளை அமலன்" என்று சொன்னான்.

சோபாராணி திரையை விலக்கிப் பார்த்தாள். ஆம், அவன் அமலன் தான். ரூபம், முகம், சாயல், குரல் எல்லாம் அப்படியே தான் இருந்தன. அவன் தன் தந்தையைப் போலவே இருந்தான். அப்படி இருக்குமா? அவளுடைய கணவரைப் போலவே அவன் இருந்தான். ஆனால் வயதில் மட்டும் சிறியவனாகவும், நல்ல சிவப்பாகவும் இருந்தான். அவ்வளவுதான் வித்தியாசம். அவனுடைய தந்தை போர்வையைப் போர்த்திருப்பது போலவே அவனும் கழுத்தை மூடிப்போர்த்திருந்தான். "நான் தான் உன் பிள்ளை!" என்று அவன் சொன்ன வார்த்தைகள் அவளது உணர்ச்சியை உச்சஸ்தானத்திற்கு ஏற்றிவிட்டது. அது அவள் உள்ளத்தைத் திறந்து விட்டது. அதனுள் அடங்கிக் குமுறிக்கிடந்த அவளுடைய மாத்ருபாவத்தைக் கிளப்பிவிட்டது. மலடிகள் குழந்தைகளிடத்தே அதிகமான பிரியத்தை வைத்திருப்பவர்கள் அன்றோ?

சோபாராணி திரையை விலக்கிக்கொண்டு அறைக்குள் வந்தாள். அமலன் அவள் காலில் விழுந்து ஆசீர்வாதம் வேண்டுவதற்கு முன்னதாகவே அவள் அவனை வாரி அணைத்துக்கொண்டாள். தன்னைக் கௌரி மிகவும் அவமதித்து அவனை இட்டுக்கொண்டு சென்ற பிறகு அவள் உள்ளத்தில் அடங்கிக் கிடந்த உணர்ச்சி முழுதையும் கண்ணீராக வெளிக் கொட்டினாள். அந்தக் கண்ணீர் கங்கையின் ஊற்றுப் போல தங்குதடையில்லாமல் வழிந்தது.

அமலன் இவ்விதமான வரவேற்பு தனக்குக் கிடைக்கும் என்று எதிர் பார்க்கவில்லை. வெளி தேசங்களில் தங்கிப் பிற நாட்டாருடைய பழக்க வழக்கங்களைக் கைக் கொண்டாலும் நம் உள்ளத்துணர்ச்சி மட்டும் போவதில்லை. வெளி நாட்டாருடைய உணர்ச்சிகளை நாம் பெறுவதில்லை. தாயில்லாதவன் என்று தன்னை எண்ணிக் கொண்ட அதே அமலன் இன்றைக்குத் தாயுள்ளம் என்ன என்பதைக் கண்டு கொண்டான். அவனும் தன்னையறியாமல் முன்னம் இருந்த எட்டு வயதுக் குழந்தை போலவேமாறி அதை அனுபவித்தான். இடையில் கழிந்த வருஷங்கள் அந்த ஒரு நிமிஷப் பொழுதில் மறைந்து விட்டன. அவன் தன் தாயின் மடியில் முகத்தை புதைத்துக் கொண்டு விம்மி அழலானான்,

இவர்கள் இவ்விதம் இருக்கும் நிலையைப் பார்ப்பதற்காக போல நித்தியானந்த பாபுவும் அந்தச் சமயம் வீடு திரும்பி அந்த அறையுள் நுழைந்தார், விஷயம் என்ன என்பதை அவர் உடனே அறிந்து கொண்டார். அமலனைப் பற்றி அவர் அவ்வப்பொழுது விசாரித்துக் கொண்டிருந்தார். அவன் சீமையிலிருந்து திரும்பி வந்தது. ஆஸ்பத்திரியிலிருந்தது, அங்கிருந்து விடுவிக்கப்பட்டது. ஆகிய எல்லாம் அவருக்குத் தெரியும். ஆனால் அன்றைக்கு அது நடக்கப் போகிறது என்பதை அவர் எதிர் பார்க்கவில்லை. அவர் மிகவும் கடுமையான குரலில் தன் தமக்கையை பார்த்து "இவை எல்லாம் என்ன?" என்று கேட்டார்.

சோபாராணி அமலனைத் தன் பக்கத்தில் இழுத்து கொண்டு "என்ன அப்படிச் சொல்லுகிறாய்? என் மகனைத்தெரிய வில்லையா உனக்கு? இவன் அமலன்" என்று பதில் அளித்தாள்.

அவன் அதே குரலில், "அது எனக்குத் தெரிந்துதான் இருக்கிறது. ஆனால் என் வீடு சத்திரமில்லை, நாடோடிகள் வந்து தங்குவதற்கு?" என்று சொன்னான்.

நித்தியானந்தன் கூறிய இந்த வார்த்தைகள் சோபாராணியின் ஹிருதயத்தில் ஈட்டி போலப் பாய்ந்தன. அவள், "ஓஹோ! அப்படியா? உன் வீட்டைச் சாத்திரமாக்கவில்லை. நான் இன்றைக்கே என்மகன் அமலனுடன் போய் விடுகிறேன். நீ ஸௌக்மாக இங்கே இரு" என்று பதில் கூறினாள்.

நித்தியானந்தன், "அப்படியே! அவனுக்குக் குந்த எங்கே குடிசை யிருக்கிறதோ அங்கே உன்னையும் அழைத்துக் கொண்டு போகட்டும். ஆனால் இதைச் சொல்லி விடுகிறேன். நீ மறுபடியும் குந்தக் குடிசையில்லையென்றோ குடிக்கக் கூழ் யில்லை யென்றோ இங்கே வந்தால் நான் உன்னை இங்கே விட மாட்டேன்" என்று முடுக்காகச் சொன்னான்.

இதைச் சொல்லி விட்டு நித்தியானந்தன் உடைகளை மாற்ற அப்பால் போய் விட்டான். நித்தியானந்தன் கூறிய அந்தச் சொற்களைக் கேட்டு அமலன் தன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டான். உண்மை தான். அவனே தனக்கென ஒரு சிறு வீடும் இல்லாமல் இருந்தான். அடுத்த வேளை ஆகாரத்துக்கு வகையறியாமல் திண்றி வந்தான். அப்படியிருக்க அவளையும் அவன் உடன் அழைத்துச் சென்று கஷ்டப்படுத்த வேண்டுமா என்று ஏங்கியது அவன் உள்ளம்.

அமல குமாரன் முகத் தோற்றத்தைக் கொண்டே அவள் உள்ளத்தில் எழுந்த எண்ணத்தை அறிந்து கொண்டாள் அவன் உடனே அவன் பக்கத்தில் வந்து அவனுடைய கரத்தைத் தன் கைகளால் பற்றிக் கொண்டு, "அதைப் பற்றிக் கவலைப்படாதே, கடவுள் இருக்கிறார். அவர் நமக்குக் கட்டாயம் படி அளப்பார்" என்றுதேறுதல்கூறினாள்

அமலன் உடனே ஒரு வாடகை வண்டியைக் கொணர்ந்தான். தாயும் மகனும் அதில் ஏறிக்கொண்டு பலராம்பூருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

ஹரகண்டபாபு தாம் இறப்பதற்கு முன்னர், பாங்கியில் சோபாராணியின் பெயரால் ஐம்பதினாயிரம் ரூபாய் கட்டி வைத்திருந்தார். அதை அவர் சோபாராணியைத் தவிர வேறு யாருக்கும் சொல்லவில்லை. சோபாராணியும் தன் தம்பியின் நடத்தையைக் கண்டு சந்தேகம் கொண்டு அதை ஒளித்துவைத்திருந்தாள். தாயும் மகனும் பலராம்பூருக்கு வந்தவுடன், அவள் அதிலிருந்து கொஞ்சம் வாங்கிக் காரியத்தைக் கவனிக்கலானாள்.

தன் மாற்றாந்தாயிடம் நிஜமான தாயின் உள்ளம் இருந்ததென்பதை அப்போது அமல குமாரன் கண்டு கொண்டான்.

முற்றிற்று

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

விடிவெள்ளி

சிறு கதை
★
ரா. ஆறுமுகம்
எழுதியது

எப்போதாவது ஜாமத்தில் தூக்கம் பிடிக்காமல் எழுந்து விட்டேனாகில் வீட்டின் மேல் மொட்டை மாடியில்போய் உலாத்திக்கொண்டிருப்பேன். அப்போது எனக்கு அந்த ஞாபகம் வந்து விடும். என் நண்பன் மூர்த்தி சொன்ன கதை-இல்லை-அது கதை போலவே இருந்தாலும் உண்மையாக நடந்த சம்பவம்தான்.

மூர்த்தி தன் கிராமத்திலிருந்து ஒரு நாள் ஏதோ அவசர காரியமாகப் பக்கத்திலுள்ள நகரத்திற்கு வர வேண்டியதாயிற்று. பத்து மைல் நடந்து வந்துதான் ரயில் ஏற வேண்டும். ஆகையால் வெய்யில் ஏறுவதற்கு முன் ரயிலுக்கு வந்து விட வேண்டுமென்றெண்ணி வீட்டிலிருந்து அதி காலை 4-மணிக்கு கிளம்பி விட்டான். அவன் 4-மணி என நினைத்துக் கொண்டு புறப்பட்டு சுமார் 5-மைல் வந்த பிறகுதான் 'ஜாமக் கோழி' கூவியது. அப்போதுதான் அவன், தான் புறப்பட்ட நேரம் மிக்க அபாயகரமானது என்பதை யறிந்தான். அந்த வழியில் திருடர் பயம் அதிகம், அவனிடமும் சட்டைப் பையில் பத்து ரூபா இருந்தது. திருடர்கள் வந்து பணத்தைக் கொண்டு போய் விட்டாலும் பரவாயில்லை. பத்து ரூபாய்க்காக உயிருக்கே தீங்கிழைக்கவும் அவர்கள் தயங்க மாட்டார்கள். மறுபடி வீட்டிற்குத் திரும்பிப் போய்விடலாமா என்று யோசித்தான். 5 மைல் நடந்து திரும்புவதற்குப் பதிலாக அந்த தூரத்தைத் தொடர்ந்து மேலும் கடந்தால் ரயில்வே ஸ்டேஷனுக்கே போய் விடலாமே யென்றும் ஒரு எண்ணம். ஆகையால் என்ன வந்தாலும் வரட்டும் என்று துணிந்து புறப்பட்டு விட்டான்: வெகு தூரத்தில் அந்த இருட்டில் வரிசையாக மரங்கள் தெரிந்தன. அது ஒரு ஏரிக்கரை. அந்த இடத்தில் தான் திருடர்கள் பதுங்கியிருப்பது வழக்கம். அவன் அந்தப் பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்தவனாகையால் எத்தனையோ துணிகரமான திருட்டுகளை யெல்லாம் கேள்விப்பட்டிருந்தான். அதனால் அந்த இடத்தைத் தூரத்தில் கண்டதுமே அவனுக்கு உள்ளூர பயம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் பயணத்தை நிறுத்தவும் விரும்பவில்லை. மறுபடியும் மனதைத் திடப்படுத்திக் கொண்டே போய்க்கொண்டிருந்தான்.

நல்ல இருட்டுக்காலமாயிருந்தாலும் நக்ஷத்திரங்களின் ஒளியில் இருபக்கமும் முட்புதர்கள் நிறைந்த காட்டின் மத்தியில் சென்ற சாலையின் வழி மாத்திரம் வெள்ளை வெளேரென்று வெகு தூரத்திற்கு நன்றாகத் தெரிந்தது. சாலையின் இருபக்கத்திலுமுள்ள ஓங்கி உயர்ந்த கள்ளிப் புதர்களில் சர சர வென்று சத்தம் உண்டாகும் போதெல்லாம் 'தக்'கென நின்று கூர்மையாகப் பார்த்து அது மனிதர்களின் அசைவினால் ஏற்பட்டதல்ல, ஏதோ பூச்சிகளால் தான் உண்டாயிருக்க வேண்டும் என்று நிச்சயம்செய்துகொண்ட பிறகே மேற்கொண்டு செல்வான்.

இப்படியே ஒரு மைல் தூரம் தான் வந்திருப்பான். இதுவரை நேரே வடக்கு நோக்கிப்போய்க் கொண்டிருந்த வழி குபீரென கிழக்கே திரும்பிச் சென்றது. அந்தத் திருப்பத்தில் திரும்பியதும் அரை மைல் தூரத்திற்கப்பால் சுமார் 15-20 மாட்டு வண்டிகள் வரிசையாகப்போய்க் கொண்டிருந்ததைப் பார்த்தான். வண்டிக்கடியில் கட்டித்தொங்க விடப்பட்டிருந்த லாந்தர்களின் வெளிச்சத்தைக் கொண்டு அவை ஏதோ பாரம் ஏற்றிச் செல்லும் வண்டிகள் போலும் என யூகித்தான். ஆனால் அவைகள் கிழக்கு நோக்கி நகரத்துப் பக்கம் போகின்றனவா, அல்லது கிராமத்தை நோக்கி வருகின்றனவா என்று நிச்சயமாக அனுமானிக்க முடியவில்லை. ஒன்று மாத்திரம் நிச்சயமாய்த் தெரிந்தது. அவை அந்த ஏரிக்கரையை அடுத்துத்தான் சென்றுகொண்டிருந்தன. இன்னும் சிறிது நேரத்தில் கட்டாயம் அவை திருடர்களால் வழிமறிக்கப்பட்டு நின்று விடும். இந்த எண்ணம் அவனுக்கு உதித்ததும் அப்படியே கால்கள் பின்னப்பட்டு நின்று விட்டான். அவன் நின்ற இடத்திற்குக் கீழே ஒரு சிறு வாய்க்கால் தண்ணீரற்று வரண்டு கிடந்தது. அதற்கு ஒரு சிறு பாலம். அதன் சுவரின் மேல் அமர்ந்து விட்டான். வண்டிகள் வழி மறிக்கப்பட்டு கொள்ளை நடந்தால் சத்தம் கேட்கும். உடனே திரும்பி, வந்த வழியே ஓடி விடலாம், இல்லையேல் அந்த வண்டிகள் இந்தப் பக்கம் வருவதாயிருந்தால் வண்டிக்காரர்களிடம் ஜாடையாக திருடர் பயம் உண்டா இல்லையா என்பதை விசாரித்துக்கொண்டு மேலும் தொடர்ந்து நடையைக் கட்டலாம், என்று எண்ணி அங்கேயே உட்கார்ந்துவிட்டான். அவன் கால்கள் தான் ஓய்ந்திருந்தன. மனம் படாத பாடு பட்டது. சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே இருந்தான்.

ஐந்தே நிமிஷந்தான் அப்படிக் கழிந்திருக்கும். வண்டிகளின் சப்தம் வர வரக் குறைந்து கொண்டே போனதிலிருந்து அவை நகரத்தை நோக்கித் தான் போய்க்கொண்டிருக்கின்றன என்பது நிச்சயமாகிவிட்டது. ஆனால் வண்டிப் பக்கத்திலிருந்து ஒரு பர்லாங் தூரத்தில் யாரோ தன்னை நோக்கி வருவது தெரிந்தது. நெருங்கி வர வர அது மனித உருவம் தான் என்பதும் ஊர்ஜிதமாயிற்று. அதற்கு மேல் அவனால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. சட்டென வாய்க்கால் பக்கம் சந்தடி செய்யாமல் இறங்கி பாலத்திற்கடியில் மறைந்துகொண்டான். மெதுவாகத் தலையை நீட்டிப் பார்த்தபோது அந்த உருவம் ஒன்றையும் கவனிக்காமல் வேகமாகத் தன் வழியோடு போய்க்கொண்டிருந்தது. ஆனால் அடிக்கடி தன்னை யாரும் பின் தொடர்கிறார்களாவென்று மாத்திரம் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றது. தூய வெள்ளை வஸ்திரம் உடம்பை மறைத்திருந்தது. நடையிலிருந்து அது ஆணல்ல, பெண்தான் என்பது சந்தேகமறத் தெரிந்தது. 'இந்த அகால வேளையில் ஒரு பெண் எப்படித் தனியாய் வரமுடியும்? ஒரு வேளை மோஹினிப் பிசாசு என்கிறார்களே, அதுவாய் இருக்கலாமோ? அப்படியானால் யாருக்கோ பயந்தாற்போல ஏன் அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டு இவ்வளவு வேகமாய் நடக்க வேண்டும்? இதை எப்படித் தெரிந்துகொள்வது?' இந்த எண்ணங்கள் அவன் மனதில் மின்னல் வெட்டும் நேரத்தில்தான் தோன்றின. அதே வேகத்தில் ஒன்றையும் கவனியாமல் தொண்டையைக் கனைத்துச் சத்தம் கொடுத்தான். அந்த உருவம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து அப்படியே 'டக்'கென, நின்றுவிட்டது.

பாலத்திற்கடியிலிருந்து எழுந்து சாலையை அடைந்து அவன் அந்த உருவத்தை நோக்கி மெதுவாய்ப் போனான். அவனுக்கு அது சைத்தானோ என்ற சந்தேகம், அதற்கு அவன் திருடனோ என்ற திகில். இருவரும் ஒருவரையொருவர் நெருங்கப் பயந்து கொண்டே பத்தடி தூரத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். அந்த உருவம் கூர்மையாக அவனைப் பார்த்து விட்டுச் சிரித்துக் கொண்டே "ஓ நீங்கள் தானா? என்னைக் கொஞ்ச நேரத்தில் பயப்படுத்தி விட்டீர்களே" என்று கேட்டது.

ஆச்சரியத்தாலும் பயத்தாலும் அவன் உடம்பு சிலிர்த்தது. அந்தக் குரலிலிருந்தே அது ஒரு யௌவன மங்கையென்று தெரிந்ததும் அவனுக்கு என்ன பதில் சொல்வதென்றே தோன்றவில்லை; சற்று நேரம் மௌனமாகி விட்டான்.

"நீ ஒரு பெண்ணா?" என்று கேட்டான்.

அவன் கேள்வியைக் கேட்டுத் திடுக்கிட்ட அவள். "நீங்கள் யார்? நான் எனக்குத் தெரிந்தவராக்கும். என்று கேட்டுவிட்டேன்" என்றாள்.

"அதனால் பரவாயில்லை. இந்த நேரத்தில் நீ தனியாக இங்கே யாரை எதிர்பார்த்து வந்தாய்?"

"ஒருவரையும் எதிர்பார்த்து வரவில்லை, நான் என் கிராமத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறேன்"

"இந்த ஜாமத்தில் தனியாகவா?"

"ஆம், எனக்கென்ன பயம்? நான் இதோ பக்கத்துக் கிராமத்திலிருப்பவள்தான்"

"அப்படியானால் என்னை இன்னாரென அறியும் முன்பு 'ஓ நீங்கள்தானா' என்றாயே யாரென்று நினைத்துச் சொன்னாய்"

அதற்குப் பதிலளிக்க அவள் தயங்கினாள். அதில் ஏதோ மர்மம் இருக்கிறதென்பதை அவன் அறிந்து கொண்டான்.

"ஏன் தயங்குகிறாய்? என்னைப்பற்றி ஒன்றும் சந்தேகப்படாதே. தாராளமாகச் சொல்லு"

"தாங்கள் யாரோ? நான் எப்படிச் சொல்வது? அதனால் என்க்கு என்ன கஷ்டம் வருமோ?"

"உன் சகோதரனைப்போல் என்னை நினைத்துக்கொள். உனக்கு நான் நன்மை செய்ய முடியாவிட்டாலும் தீங்கு விளைவிக்கவே மாட்டேன்."

"சரி, அப்படியானால் உங்கள் பேச்சை நம்பி என் ரகசியத்தைச் சொல்லுகிறேன்!'

"வா, அதோ அந்தப் பாலத்தில் போய் உட்காருவோம்" என்று கூப்பிட்டான்.

வேறு வழியில்லாமல் அவளும் சம்மதித்து அவனைப் பின் தொடர்ந்துபோனாள். இருவரும் பாலத்துச் சுவரின்மேல் உட்கார்ந்தார்கள். அவள் சொன்னாள்:—

"சுருக்கமாகவே என் விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன். நான் பக்கத்துக் கிராமத்தில் உள்ள பெரிய குடும்பம் ஒன்றில் பிறந்தவள். என் தகப்பனார் பெயரைக் கேட்காதீர்கள். சிறு வயதிலேயே எனக்கு விவாகம் முடிந்துவிட்டது. இரண்டே இரண்டு வருஷந்தான் என் கணவரோடு இன்பமாகக்காலம் கழித்தேன். 20 நாள் ஜுரமாகப் படுக்கையில் படுத்தவர் மறுபடி எழுந்திருக்கவே இல்லை. அவர் இறந்த பின்பு அவர் வீட்டில் எனக்கென்ன வேலை? பட்டணவாஸத்தின் ஆசையை அன்றோடு ஒழித்துவிட்டு பழயபடியும் என் சொந்தக் கிராமத்திற்கு வந்துவிட்டேன். என்னை இந்தக் கோலத்தில் விட்டுவிட்டு அவர் சென்று சுமார் 3 வருஷங்களாகின்றன. பெற்றோர்கள் வீட்டாயிருந்தபோதிலும்கூட சிற்சில சமயங்களில் அவர்கள் என் விதியைக் குறித்து இடித்துக்காட்டிப் பேசும் பேச்சுக்கள் என் மனதைப் புண்படுத்தியே வந்தன. இன்னும் எவ்வளவோ துன்பங்கள், மனதிற்கும் உடலுக்கும். அதெல்லாம் இப்போதுசொல்லி என்ன பிரயோஜனம்?

"எங்கள் வீட்டிற்கு எதிரில் ஒரு வாலிபர் வந்திருந்தார். அவருக்குப் பம்பாயில் உத்தியோகம். விவாஹமாகாதவர். அவருடைய கல்யாணத்திற்காகத் தான் ஒரு மாதம் லீவு எடுத்துக்கொண்டு வந்திருந்தார். ஆனால் அவர் குடும்பத்தில் ஏற்பட்ட ஏதோ சில தகராறுகளினால் கல்யாணம் தடைபட்டுவிட்டது. அவர் வந்த நாள் முதல் என்னை

யே கவனித்துவந்தார். நானும் முதலில் அவரைக் கவனிக்காதவள் போலவே நடந்துகொண்டேன். சில நாட்களுக்குப் பிறகு என்னையும் அறியாமல் ஏதோ ஒரு பிரேமையினால் அவரை அடிக்கடி பார்க்கத் தலைப்பட்டேன். அவரும் துணிந்து எனக்கு இரகசியமாக துண்டுக் கடிதங்கள் எழுதி என் அறையின் ஜன்னலுக்குள் எறிந்து விடுவார். முதலில் நான்கைந்து கடிதங்களுக்கு நான் பதிலே அனுப்பவில்லை. பிறகு நானும் என் மனதில் உள்ளதை கடிதம் மூலம் வெளிப்படுத்தினேன்! அவர் என்னைப் பலர் முன்னிலையில் விதவா விவாகம் செய்து கொள்வதாக வாக்களித்தார். ஆனால் அது இந்தக் கிராமத்தில் நடைபெறாது என்பது எங்களுக்குத்தெரியும். அதனால்தான் இருவருமே இன்று பம்பாய்க்குப் புறப்பட்டுப் போவதாக முடிவு செய்தோம். எங்கள் கிராமத்திலிருந்து சற்று முன்பு சென்ற வண்டிகளெல்லாம் நகரத்திற்குப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தன. கடைசி வண்டியில் நான், வண்டிக்காரனுக்குத் தெரியாமலே, ஏறிவிட்டேன், அவர், என் காதலர், எனக்கு முன்பே இந்த இடத்தில் வந்திருப்பதாகச் சொன்னார். ஆனால் அவர் இதுவரை வரவில்லையென்று தெரிந்ததும் ஒரு சமயம் வீட்டில் தூங்கிவிட்டாரோ என்று கருதி வண்டியை விட்டு இறங்கிவிட்டேன். விடிவதற்கு முன் வீட்டிற்குப்போய் நான் எழுதி வைத்திருக்கும் அந்தக் கடிதத்தை என் பெற்றோர்கள் பார்க்கும் முன் எடுத்துக் கிழித்துவிட வேண்டும். இல்லாவிட்டால் எங்கள் முயற்சி பலிக்காமல் போகும். அதனால் தான் வேகமாகச் சென்றேன். உங்களைப் பார்த்ததும். எனக்கு அவர் நினைவே இருந்தபடியால், அவர் தானுக்கும் என்று நினைத்துக் கேட்டுவிட்டேன். அதனால் இவ்வளவு தூரம் என் கதையையும் சொல்ல வேண்டியதாயிற்று—" என்று பெரு மூச்சு விட்டாள். அந்த மூச்சில் அவள் தன் ரகசியம் அவனுக்குத் தெரிந்து விட்டதே என்று வருந்துவதாகத் தெரிந்தது.

"ஏன்? என்னிடம் சொன்னதால் இப்போது உனக்கென்ன நஷ்டம்?"

"இதை நீங்கள் வேறு யாரிடமும் சொல்லி விட்டால், அதனால் என்ன நேருமோ என்றுதான் பயப்படுகிறேன்."

"இன்னுமா என் மீது அவநம்பிக்கை. உன்னை யாரென்று நான் இப்போது தெரிந்து கொண்டேன். முத்துப் பிள்ளையின் மூதத மகள்தானே நீ?" என்றான்.

அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. சட்டென எழுந்து விட்டாள்.

"ஆம். எங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் எந்த ஊர்?" எனப் பயந்து கொண்டே கேட்டாள்.

"பயப்படாதே, உட்கார். நானும் உங்கள் கிராமம் தான். ஆனால் நான் கிராமத்தில் அதிகமாய் இருப்பதில்லை, அதனால் என்னை உனக்குத் தெரியாது. நான் தெற்குத் தெருவில்தானிருக்கிறேன். சரி, அது கிடக்கட்டும். உன்னை இந்த நேரத்தில் இந்தக் காட்டிற்குள் 'வரச் சொல்லி விட்டு வீட்டில் அயர்ந்து நித்திரை போக அவனுக்கு, உன் காதலனுக்கு, எப்படி மனம் வந்தது? அவன் தானா உன்னை ஆயுள்வரை வைத்துக் காப்பாற்றப் போகிறான் அவனை நம்பியா அவன் பின்னால் போகத் துணிந்து விட்டாய்?"

"அப்படித் திடீரென்று ஒருவரைப் பற்றிச் சொல்லிவிடலாமா? அவர் புறப்படும்போது என்ன தடை ஏற்பட்டதோ? வீட்டில் யாரும் விழித்துக் கொண்டிருந்தால் அவர்களையறியாமல் வர வேண்டாமா? அவருடைய பெட்டி, படுக்கை, என்னுடைய சாமான்கள் சில, முதலியவைகளையெல்லாம் ஒரு வண்டியில் போட்டுக் கொண்டு வருவதாகச் சொன்னார். என்ன காரணமோ தெரியவில்லை."

அவள் அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே வெகு தூரத்தில் அந்த இருட்டில் கிராமத்தின் பக்கத்திலிருந்து ஒரு வெளிச்சம் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அதைக் கண்டதும் அவள், "அதோ பாருங்கள். அவர் தான் வருகிறார் என்று நினைக்கிறேன்" என்றாள்.

"அப்படியானால் நீ அதிர்ஷ்டக்காரிதான்"

"அதில் உங்களுக்குச் சந்தோஷம்தானா?"

"என்ன இப்படிக் கேட்கிறாயே? பெற்றோர்களோ அல்லது சமூகமோ இப்படி இளமையிலேயே விதவையாகி விடும் பெண்களுக்கு ஒரு மார்க்கம் தேட முன் வராமலிருக்கும் வரையில் இம்மாதிரிச் சம்பவங்களை யாரும் தடுக்க முடியாது. அது நடப்பதே ஒருவகையில் நல்லதாகவும் தெரிகிறது. ஸரி, வண்டி சமீபித்து வருகிறது. அது உன்னுடைய காதலன் வண்டியாயில்லாவிட்டால், நீ இங்கே இருப்பது விபரீதமாகி விடும். ஆகையால் நீ பாலத்தடியில் மறைந்திரு. நான் இப்படியே உட்கார்ந்திருக்கிறேன். கட்டாயம் வண்டியிலிருப்பவன் என்னை ஏதாவது கேட்பான். அது உன் காதலனுடைய சத்தமாயிருந்தால் நீ வெளியே வந்து பேசிக்கொள்" என்றான்.

"நல்ல யோசனை சொன்னீர்கள்" என்று கூறி பாலத்திற்கடியில் போய் மறைந்துகொண்டாள்.

வண்டியும் வந்தது. பாலத்தைத் தாண்டி பத்து கஜமும் போய்விட்டது. "கொஞ்சம் நிறுத்தடா?" என்று யாரோ வண்டிக்குள்ளிருந்து சொல்லவும் வண்டி நிறுத்தப்பட்டது. வண்டிக்குள்ளிருந்து ஒரு வாலிபன் இறங்கிவந்து பாலத்தின் மீதிருந்த என் நண்பன் மூர்த்தியை, "யார் இங்கே இருக்கிறது?" என்றான்.

அவன் பதில் பேசவில்லை.

பாலத்திற்கு அடியிலிருந்து அவள் மேலே சாலைக்கு வந்து, "ஏன், நான் இதோ இருக்கிறேன்" என்றாள்.

"ராஜம்மாதானே பேசுகிறது?" என்று கேட்டான் தானிவந்த வாலிபன்.

"ஆமாம். சத்தம் கூடவா தெரியவில்லை?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

அவள் காதலனுக்குச் சந்தேகமாகிவிட்டது. பாலத்தின் மீதிருப்பவன் யார்? இருவரும் இங்கே தனித்திருப்பதற்குக் காரணம்? ஒருசமயம் புதிதாகச் சிநேகம் பிடித்து விட்டாளோ?

"ராஜம் இந்த ஆள் யார்?"

"யாரோ எனக்குத் தெரியாது. நீங்கள் சொன்னபடி வண்டியில் வந்திறங்கி இந்த இடத்தில் பார்த்தேன். இவர்தானிருந்தார். இருட்டில் இன்னாரெனத் தெரியாமல், நீங்கள்தானுக்கும் என்றெண்ணிப் பேசிவிட்டேன். பின்புதான் இவர் ஒரு வழிப்போக்கர் என்று தெரிந்தது. மேலும் நம்ப ஊர்க்காரர் தானும்"

"நம் சமாச்சாரத்தை ஏதும் உளறி விட்டாயா?" என்று சற்று தள்ளிவந்து மெதுவாய்க் கேட்டான்.

"ஆம், அதனாலென்ன? அவர் ஒருவரிடமும் சொல்லமாட்டார். பேச்சிலிருந்தே நல்லவராகத் தெரிகிறது. அவர் இல்லாவிட்டால் நான் உங்களை இங்கே பார்த்திருக்க முடியாது. அவர் இருந்தபடியால் தான் இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருக்க முடிந்தது"

அவன் பெருமூச்சுவிட்டான். அதன் அர்த்தத்தைக் கிரஹித்துக்கொண்ட பாலத்தின் மேலிருந்த என் நண்பன், "நீங்கள் என்னைப்பற்றிச் சந்தேகம் கொள்வதாகத் தெரிகிறது. ஒரு பயமும் இல்லாமல் போங்கள். உங்களுக்குப் பின்னாலேயே நானும் வருகிறேன். ஏன் வீணாக இங்கே பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? ஒரு சமயம் உங்கள் வீடுகளிலிருந்து யாரும் பின்தொடர்ந்து வரக்கூடும். அதிகாலையில் ஒரு ரயில் இருக்கிறது. அதில் ஏறிப் போய்விடுங்கள். அங்கிருந்து பம்பாய்க்கு சௌகரியமான வண்டியில் போகலாம்" என்று எச்சரித்தான்.

"வாஸ்தவம் தான். இன்னும் நாலு மைல் போக வேண்டும். அவரையும் வண்டியில் ஏறச் சொல்லுங்கள், போகலாம்" என்று துரிதப்படுத்தினாள் அவள்.

"வாருங்கள், நீங்களும் ஏறுங்கள். போகலாம்" என்றான் வாலிபன்.

"உங்களுக்கு வந்தனம். நீங்களிருவரும் புறப்படுங்கள். நான் நடந்தே வருகிறேன். யாரேனும் உங்களைத்தேடி வந்தாலும் என்னைக்கேட்பார்கள். நான் ஒருவரும் இந்தப் பக்கம்போகவில்லையென்று சொல்லித் திருப்பியனுப்பிவிடுகிறேன். அல்லது அவர்களிடம் பேச்சுக் கொடுத்தாவது நேரத்தைக் கடத்திவிடுகிறேன். அதற்குள் நீங்கள் ஸ்டேஷனையடைந்து வண்டியைப் பிடித்துவிடலாம்" என்று யோசனை கூறினான்.

"ஆமாம், அதுவும் ஒரு நல்ல யுக்திதான்" என்று ஆமோதித்தான் வாலிபன்.

தற்செயலாக ஆகாயத்தை அண்ணாந்து பார்த்த என் நண்பன் அப்போதுதான் உதயமாகிக் கொண்டிருந்த விடிவெள்ளியைக் கண்டு சந்தோஷம் கொண்டு, "அதோ பாருங்கள், சுக்கிரன் உதயமாகிவிட்டான். இது காறும் பிரகாசித்துக் கொண்டிருந்த மற்ற நக்ஷத்திரங்களெல்லாம் ஒளியிழந்து விட்டன. உங்கள் வாழ்க்கையிலும் ஒரு புது ஒளி உதயமாகிவிட்டது இனி கவலையொழிந்து அந்த விண் மீனைப் போன்று களிப்பாய் வாழ்வீர்கள். நேரமாகிறது, கிளம்புங்கள்..." எனத் துரிதப்படுத்தினான். அவர்களிருவரும் அவனை நமஸ்கரித்து விட்டு வண்டியில் ஏறினார்கள்.

என் நண்பனும் வண்டி பின்னாலேயே சென்றான். சிறுகச் சிறுக வண்டி முந்திக் கொண்டே போய்க் கண்களுக்கு மறைந்து விட்டது. அவன் இரண்டு மைல் சென்ற பின்னர் தான் கிழக்கு வெளுக்க ஆரம்பித்தது. புதருக் குள்ளிருந்த சின்னஞ் சிறு காட்டுக் குருவிகள் இனிமையாகச் சத்தமிட்டுக் கொண்டு சிறகை அடித்து வெளியே பறந்துகொண்டிருந்தன. வன மலர்கள்—மனிதர்களால் பெயரிடப்படாதவைகள்—ஏதோ ஒருவித நறு மணத்தை வாரி இறைத்தன. மணமற்ற கள்ளிப் புஷ்பங்கள் கூட அக் காலை வேளையில் கண்ணுக்கு காட்சியளித்தன. இளந்தென்றல் இலேசாக வீசிக் கொண்டிருந்தது.

"ஆஹா! இயற்கை என்னென்ன சந்தோஷக் குறிகளை வெளியிடுகின்றன. கேவலம் மனிதர்கள் மாத்திரம் இந்தக் காதல் விவாஹத்தை-அதுவும் விதவா விவாஹத்தை-ஒரு பாபமென்று கருதுகிறார்களே. இது என்றுதான் நீங்குமோ..." என நிந்தித்துக் கொண்டே நடந்தான்.

ஸ்டேஷனுக்கு வந்தபோது அதற்கு முன் ஒரு வண்டி போய் விட்டதாக அறிந்தான். ஸ்டேஷனைச் சுற்றிப் பார்த்தான். அவர்களிருவரும் அங்கே காணப்படவில்லை. கடவுள் கிருபையால் தப்பிப் பிழைத்தார்கள் என்று எண்ணிச் சந்தோஷம் கொண்டவனாய் அடுத்த ரயிலில் ஏறி, அவன் வேலையைக் கவனிக்கப் போய் விட்டான்.

இளமையும், வீரியமும் அளிக்கும் ஔஷதம். ரத்தசுத்தியளித்து, தளர்ந்த நரம்புகளுக்கு வலுவூட்டி, வீரிய விருத்தியளித்து, இல்லற வாழ்க்கையை இன்பமாய்க்கழிக்க உதவும். பாட்டில் ரூ. 10.

ஏ. பி. எண்ணெய் வெளிப்பூச்சுக்கு; எல்லா தோஷங்களையும் நிவர்த்திக்கும் அருமையான தைலம் பாட்டில் ரூ. 15.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனாபஜார் ரோடு, மதராஸ்.

மஹாதேவ தேசாய்

"இந்தியப் பாது காப்பு விதிகள் பிரகாரம் காவலில் வைக்கப்பட்டிருந்த ஸ்ரீ மஹாதேவ தேஸாய் சனிக்கிழமை காலை 8-40 மணிக்குக் காலமானார் என்று பம்பாய் ஸர்க்கார் மிகுந்த வருத்தத்துடன் அறிவிக்கிறது" என்ற செய்தி இம்மாதம் 16-ம் தேதியன்று நாட்டில் உள்ள எல்லா பத்திரிகைகளிலும் வெளியாகியது. பம்பாயில் சென்ற 9-ந்தேதி காலை தான் மஹாதேவ் மஹாத்மாவுடன் கைது செய்யப்பட்டார்! மஹாதேவர் மார் படைப்பினால் காலமானார்! எதிர்பாராத செய்தி: திடீரென்று வந்த செய்தி: திடுக்கிடச் செய்த செய்தி. மரண காலத்தில் இந்த தேச பக்தருக்கு வயது ஐம்பதுதான்! இருபத்தைந்தாம் பிராயத்தில் மஹாத்மாஜியுடன் மஹாதேவருக்கு உறவு ஏற்பட்டது: இதற்கப்புறம் இருபத்தைந்து வருஷகாலம் அது நீடித்து நின்றது. இந்தக் காலம் முழுமையும் மஹாத்மாவின் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்தார் மஹாதேவர்: நிகரற்ற புருஷருடன் நெருங்கிப் பழகினார்: சிரேஷ்டரின் சுகதுக்கங்களையெல்லாம் தாமும் சமமாய்ப் பகிர்ந்துகொண்டார். உடலும் நிழலும்போல் இருந்தனர் இருவரும். மஹாத்மாவின் மதிப்புக்குப் பூரண பாத்திரரானார் மஹாதேவர். காந்தியின் காரியதரிசியைப்பற்றிக் கேட்டிராதவரே கிடையாது. உலகம் முழுதும் அறியும்: பெரியாருடைய தொடர்பினால் விளைந்த பிரசித்திக்கும் பெருமைக்கும் குறைவில்லை. இப்போது மஹாதேவர் மறைந்துவிட்டார்: இந்தப் பிரிவு மஹாத்மாவை அதிகம் பாதித்துவிடப் போகிறதே என்பதுதான் மக்களின் உள்ளத்தில் தற்சமயம் குடிகொண்டுள்ள கவலை!

* * * * *

ஸ்ரீ மஹாதேவ தேஸாய் குஜராத்தைச் சேர்ந்தவர்: சூரத் ஜில்லாவில் உள்பாட் தாலூகாவில் இருக்கும் பியான் என்ற கிராமத்தில் பிறந்தார்: 1892-ம் ஆண்டில் தான் ஜனனம். தகப்பனாரான ஸ்ரீ ஹரிபாய் தேஸாய் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயராக முதலில் இருந்து, காலக்ரமத்தில் பள்ளிக்கூடங்களின் உதவி இன்ஸ்பெக்டராக வேலை பார்த்தவர்: ஆகவே பிதாவின் நிலை பெருமைபடக் கூடியதாகவே இருந்தது: இவர்கள் தோன்றிய பிராம்மணக் குடும்பமும் பல தலைமுறைகளாகவே மதிப்பு பெற்றிருந்தது. பள்ளிப்படிப்பு பூர்த்தியானதும் உயர்தர வித்யாப்யாஸத்தை நாடி மஹாதேவ தேஸாய் பம்பாய் வந்து சேர்ந்தார்: அங்கு எல்பின்ஸ்டன் கலாசாலையில் படித்து 1910-ல் பட்டதாரியானார். "பம்பாய் க்ரானிகள்" ஆசிரியர் ஜனுப்ப்ரெல்வி, கன்யாலால் வக்கீல், வைகுண்ட மேதா, இவர்கள் இவருடன் ஒரே வகுப்பில் படித்தனர்: அன்று பிறந்த நட்பு நாளாக ஆக அன்புருவெடுத்தது. எம். ஏ பரீக்ஷையிலும் சிறப்பாக தேறினார். தத்துவ சாஸ்திரத்தைப் பிரதானமாக படித்தார்: இதே காலத்தில் ஆங்கிலத்திலும் சம்ஸ்கிருதத்திலும் இவர் நல்ல தேர்ச்சி பெற்றார். இதற்கப்புறம் பம்பாய் சர்க்கார் கீழ்த்திசை பாஷா மொழிபெயர்ப்பாளர் பதவியை ஸ்வீகரித்தார்: இவ்விதம் ஸர்க்கார் காரியாலயத்தில் வேலை பார்த்துக்கொண்டிருக்கையிலேயே சட்டப் பரீக்ஷைக்கும் இவர் ஆஜராகி அதில் தேறினார். 1912-ல் இவர் தமது உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்துவிட்டு வக்கீல் தொழிலை மேற்கொண்டார். ஆனால் புதிய தொழிலையும் இவர் நீடித்து நடத்தவில்லை: ஆமதாபாத்தில் சொற்பகாலமே இவர் தொழில் புரிந்த போதிலும், சீக்கிரத்தில் மனம் சலித்து விட்டது. பம்பாய் ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் சொஸைடியின் கூட்டுறவுச்சங்க மேற்பார்வையாளராக மறுபடியும் பதவியில் புகுந்தார். குஜராத்வாசிகளின் வாழ்க்கை நிலையைப் பற்றிய விவரங்களை இவர் இதுகாரணமாக அறிந்துகொண்டார்; மாகாணத்தில் பலபாகங்களையும் சுற்றிபார்த்தது அனுபவத்தைப் பெருக்கி அறிவை விசாலமாக்கியது. மக்களின் கஷ்டத்தைக் கண்ணால் கண்டார். அதை நிவர்த்திப்பதிலேயே நாட்டம் சென்றது.



குருவும் சிஷ்யனும்

* * * * *

ஒவ்வொருவருக்கும் அவரவர் வாழ்க்கையில் ஓரொரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கிறது: அதைப் பயன்படுத்திக்கொள்பவர் மேன்மை யுறுகின்றனர்: தவறியவர் தங்களையேதான் குறை கூறிக்கொள்ள வேண்டும். 1916-ல் லோகமான்ய திலகர் ஹோம் ரூல் இயக்கத்தை ஆரம்பித்தார்; சுயவாட்சிக்குக் கிளர்ச்சி பண்ணும்படிப் பிரசாரம் பண்ணினார்: இதற்கு முந்திய வருஷம் தான் தென் ஆப்ரிக்காவிலிருந்து தாய்நாடு திரும்பிய காந்திஜியும் இந்த இயக்கத்தை ஆதரித்தார். மிஸஸ் அன்னி பெஸண்டும் இதை முழுமனதுடன் பின்பற்றினார். நாட்டின் நானு பக்கங்களுக்கும் போய்ப் புதிய இயக்கத்தின் சூக்ஷமத்தைப் பிரகாசப்படுத்தத் தொண்டர்கள் தேவையாக இருந்தது: இதுதான் தமது மனோபீஷ்டம் ஸித்திபெறுவதற்கான சந்தர்ப்பம் என்று மஹாதேவ் உணர்ந்தார். தாம் வகித்த பதவியைத் துறந்து, ஹோம்ரூல் இயக்கத்தில் சேர்ந்துகொண்டார். இந்த லீக்கின் காரியதரிசியாக இவர் நியமிக்கப்பட்டார்: ஒருவருஷ காலம் மிஸஸ் பெஸண்டுக்கு பக்க பலமாக இருந்து அரும்பாடுபட்டார். பெரிய தலைவர்களும் இவரது தொண்டை சிலாகித்தனர்.

* * * * *

ஸபர்மதி ஆச்ரமத்தில் இருந்துவந்த காந்திஜியும் தமது சத்யாக்ரஹ தர்மத்தை விளக்கி வந்தார் இந்தக் காலத்தில்: நாடு விடுதலை பெறுவதற்கு அதுதான் ஸாதனம் என்றும் அவர் சாதித்தார்: இந்த உபதேசம் கொஞ்சம் கொஞ்சமாக ஆதரவு பெறவாரம்பித்தது. ஆத்ம சக்தி எதையும் அடக்கியாளவல்லது என்ற ஸித்தாந்தம் வலுப்பெற்றது. 1917-ம் வருஷாரம்பத்தில் பீஹாரில் சம்பரான் பிரதேசத்தில் அதிகாரிகளின் அதிக்கிரமப் போக்கு குடிகளுக்கு அதிருப்திகரமாக இருந்தது: நேரில் போய் நிலைமையைப் பரிசீலிக்க காந்திஜி புறப்பட்டார்: அவரை உள்ளேவிட ஸர்க்கார் மறுத்து விட்டனர்: ஆயினும் அவர் தாம் பிடித்த பிடியை விட்டுவிடவில்லை. அனுமதித்தடை நீங்கி அழைப்புத்தாள் அவருக்கு அனுப்பப்பட்டது. சம்பரான் போனதும் அவர் கண்ட காட்சி பரிதாபகரமாயிருந்தது: தமது உழைப்பின் பயன் நிரந்தரமாக இருக்கவேண்டுமாயின், கிராமவாசிகளின் அறியாமை மறையவேண்டும் என்பதை அவர் அறிந்தார்: ரயத்துகள் படும் பலவித கஷ்டங்களுக்கும் அவர்களது படிப்பின்மையே காரணம் என்பதையும் அவர் தெளிவாகக் கண்டார்: ஆறு கிராமங்களில் பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்க அவர் தீர்மானித்தார். இவைகளுக்கு எங்கிருந்து உபாத்தியாயர்களை சம்பாதிப்பது? பிரதிபலனை அபேக்ஷிக்காதவர் கிடைப்பரா?—இவ்விதம் அவர் சிந்திக்கலானார். தவிரவும் கிராமச் சிறுவர்களுக்குத் தகுதியானவர் பாடம் கற்பித்தால்தான் காரியம் கைகூடும் என்பதும் அவர் கருத்து. புத்தகப்படிப்பைவிட ஒழுக்க அறிவே பிரதானம் என்றும் அவர் தீர்மானித்தார். இந்த எண்ணத்துடன் மஹாத்மாஜி மக்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்தார்.

* * * * *

மஹாத்மாவின் விருப்பம் நிறைவேற கால தாமதம் ஆகவில்லை. உள்ளத் தூய்மையுடன் உழைக்க சிலர் முன் வந்தனர்: இவர்களுள் மஹாதேவரும் ஒருவர். சிறிது காலமாகவே இவருக்கு மஹாத்மாவின் கொள்கையில் பற்றும் பாசமும் அதிகரித்து வந்தபடியால், தமது மனைவியான ஸ்ரீமதி துர்க்காபாயுடன் தொண்டு புரிய தேஸாய் கிளம்பிவிட்டார்: இதைத் தடுத்துப் பார்த்தார் தகப்பனார். ப்ரீதியும் ப்ரசக்தியும் ஒரு விஷயத்தில் படிந்துவிட்டால் அதை எவர்தான் வேறு விஷயத்தில் புகுத்த முடியும்? ஸ்ரீதேவதாஸ் காந்தியும் இவருடன் சேர்ந்தார். இவர்கள் எல்லோருமாக கிராமச் சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்தனர்: வாழ்க்கைக்கு அவசியமான வித்தையை விதைத்தனர். சம்பரானில் மஹாத்மாஜி நடத்திய விசாரணை சில மாதங்களுக்கப்புறம் முடிந்தது. மஹாத்மா ஸபர்மதிக்குத் திரும்பினார்: அவருடன் மஹாதேவரும் கிளம்பிவிட்டார். சிறிது காலத்திற்கெல்லாம் கேடா சத்யாக்ரஹம் ஆரம்பித்தது: பஞ்ச காலத்திலும் நிலத்தீர்வை அதிகம் வசூலிப்பதாக அங்குள்ளோர் முறையிட்டதே இதற்குக் காரணம். இந்த சத்யாக்ரஹத்தில் மஹாதேவ் தேஸாய், ஸர்தார் படேல், சங்கர்லால் பாங்கர் முதலியோர் கலந்துகொண்டனர். இவை காரணமாக மஹாத்மாஜிக்கு மஹாதேவரிடம் விசுவாஸம் அதிகரித்தது. இவரது அந்தரங்க சுத்தியில் அவருக்கு நம்பிக்கை அதிகரித்தது: இவர் தமக்குத் துணையாக இருக்கத் தகுதியானவர் என்பதும் அவருக்குத் தெரிந்தது. உலகம் போற்றும் உத்தமரின் உள்ளன்பைப் பெறுவது எல்லோருக்குமா சாத்தியம்?

* * * * *

1917-ம் வருஷத்தில் மஹாதேவ தேஸாய் மஹாத்மாஜியின் அந்தரங்கக் காரியதரிசியானார். மஹாத்மாஜிக்கு ஆரம்பத்திலிருந்தே இவர் மூலம் அதிக உதவி கிடைத்தது: பழைய சம்பவத்தைப்பற்றிய குறிப்பு ஏதாவது வேண்டுமா? மஹாதேவரை அண்டினால் அது கிடைத்து விடும். தேதியோ அல்லது

—"கே. எஸ். ஆர்." எழுதியது—

பிரபலஸ்தர்களது பெயரோ, ஞாபகத்திற்கு வரவில்லையா? சரி, இதற்கும் மஹாதேவரின் உதவியே நாடப்பட்டது. இவ்விதம் மஹாதேவ தேஸாய் மஹாத்மாவுக்கு முதலில் ரொம்ப ஒத்தாசை புரிந்தார். மஹாத்மாவுக்குத் தினசரி ஏராளமாகக் கடிதங்கள் குவிந்துவிடும்; அவை எல்லாவற்றையும் பிரித்துப் பார்க்கக் கூட அவருக்கு சில தினங்களில் அவகாசம் இராது; மஹாதேவர் அவற்றையெல்லாம் படித்து, முக்கியமானவற்றை மட்டும் மஹாத்மா முன் ஸமர்ப்பிப்பார்: மிகுந்தவற்றிற்கு அவசியமாயின் தாமே பதில் எழுதி விடுவார், இம்மாதிரி இவர் மஹாத்மாவுக்கு அனுகூலம் புரிந்தார், இருவருக்குமிடையே இருந்த அன்புப் பிணைப்பு ஆச்சர்யமானது: அபூர்வமானது என்றும் கூறலாம். ஸர் பிரோஸ்ஷா மேத்தா, பண்டித மோதிலால்நேரு, தேசபந்து தாஸ் முதலியோர் தங்களது காரியதரிசிகளுக்குச் சம்பளம் கொடுத்தனர். இதுவே அவர்களுக்கும் இந்த மஹானுக்கும் இருந்த வித்தியாசம். 1919-முதல் "யங் இந்தியா" என்ற இங்கிலீஷ் பத்திரிகையும் 'நவ ஜீவன்' என்ற குஜராத்தி பத்திரிகையும் மஹாத்மாவினால் நிர்வகித்து நடத்தப்படலாயின: இவ்விரு பத்திரிகைகளுக்கும் உதவி ஆசிரியராக மஹாதேவ் தேஸாய் நியமிக்கப்பட்டார்; இதனால் இவருக்கு ஆத்ம திருப்தியே ஏற்பட்டது: பத்திரிகைகளில் இவர் பல விஷயங்களைப்பற்றி எழுதி வந்தார்: ஒவ்வொரு விஷயத்திலும் இவரது படிப்பின் விரிவே விசதமாகியது. இவர் நிறையப் படித்தார். படித்ததைப் பலர் அறியும் படிப் பண்ணினார்.

* * * * *

மஹாத்மாஜி தலைமையேற்ற நாள் முதற் கொண்டே நாட்டில் ஒரு புது நிலை உதயமாகியது: மிதவர்த்தத்தின் மதிப்பு மங்கியது; இது ஐக்ய மாகாணத்தில் தெளிவாகிவிட்டது. பண்டித மோதிலால் நேரு "லீடர்" பத்திரிகையின் மிதவாதப் பிரசாரத்தைத் தடுக்க "இண்டிபெண்டட்" என்ற பத்திரிகையை 1919-ல் ஆரம்பித்தார்: இந்தப் பத்திரிகை நான்கு வருஷ காலம் தான் வாழ்ந்தது, ஆயினும் ஆசிரியர் பீடத்தில் ஒருவரே நிலைத்திருக்கவில்லை. 1921-ல் இதன் ஆசிரியராக இருந்த ஸ்ரீ ஜார்ஜ் ஜோஸப் சிறையிடப்பட்டார்: அப்போது காலியான ஸ்தானத்திற்கு மஹாதேவ் தேஸாய் பண்டித மோதிலால் நேருவினால் நியமிக்கப்பட்டார், இவர் பொறுப்பேற்ற காலம் மிகக் கடுமையானது; நிர்ப்பந்தங்கள் பல நிலவிய நாட்கள்: ஒத்துழையாமை இயக்கம் மும்முரமாக நடந்துவந்த சமயம். அதிகாரிகளின் அடக்குமுறையும் அதிகமாய் இருந்தது. "இண்டிபெண்டன்ட்" பத்திரிகையையும் ஒடுக்க அதிகாரிகள் கங்கணம் கட்டிக் கொண்டனர். மஹாதேவ தேஸாய் கையெழுத்தாலான பத்திரிகையை ஒரு நாள் தயாரிக்கவும் நேர்ந்தது: கடைசியில் ஸர்க்கார் இவரையும் 1921-ம் வருஷமுடிவில் சிறையில் அடைத்துவிட்டனர். லக்ஷ்மணபுரி சிறையில் வைக்கப்பட்டிருந்தார் இவர்: முதன் முதலாக வாய்த்தது இவருக்கு இந்த அனுபவமும்.

* * * * *

இந்தச் சிறை வாசத்தைப்பற்றி பண்டித ஜவஹர்லால் நேரு தமது சுய சரிதையில் பின்வருமாறு எழுதுகிறார்: "கொஞ்சம் கொஞ்சமாக எங்களுக்குத் தடைகள் அதிகமாயின. கடுமையான விதிகளும் பிரயோகமாயின, இந்த இயக்கம் எவ்வளவு தூரம் போகும் என்பதையுணர்ந்த ஸர்க்கார், அதன் அதிகாரத்தை எதிர்க்கக் கிளம்பிய எங்களது பிடிவாதத்திற்கு நாங்கள் பூரணமாகப் பலனை அனுபவிக்கவேண்டும் என்று தீர்மானித்து விட்டனர். புதிய விதிகளும் அவை பிரயோகிக்கப்பட்டவிதமும், அடிக்கடி சிறை அதிகாரிக்கும் ராஜீயக்கைதிகளுக்குமிடையே தகராறுகளைக் கிளப்பி வந்தன. அப்போது அந்தச் சிறையில் நூற்றுக் கணக்கில் அடைபட்டிருந்த நாங்கள் எங்கள் ஆக்ஷேபத்தை வெளிக்காட்ட சில மாத காலத்திற்குப் பேட்டியளிப்பதை நிறுத்தி விட்டோம். உடனே இதற்கு எங்களுள் சிலர் தான் காரணபூதர்கள் என்ற சந்தேகம் எழும்பியது: ஆகவே நாங்கள் ஏழுபேர்கள் சிறையில் அதிக தூரத்திலிருந்த வேறு ஒரு பகுதிக்கு மாற்றப்பட்டோம்: மற்றவர்களுக்கும் எங்களுக்கும் தொடர்பு சிறிதும் கிடையாது. இவ்வாறு தனியாகப் பிரிக்கப்பட்ட நானும், புருஷோத்தமதாஸ் தாண்டன், மஹாதேவ தேஸாய், ஜார்ஜ் ஜோஸப், பாலசந்திர சர்மா, தேவதாஸ் காந்தி ஆகியவர்களும் ஒரு சிறிய அறைக்கு அனுப்பப்பட்டு, அங்கு காலத்தை கழித்தோம்."

* * * * *

கடைசிப் படம்

பம்பாயில் காங்கிரஸ் காரியக்கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தை மஹாதேவ் மஹாத்மாவுக்குக் காட்டுகிறார்.

மறு வருஷாரம்பத்தில் இவர் வெளி வந்தார், மறுபடியும் ஸபர்மதி ஆச்ரமத்திற்கே போய்விட்டார்: மஹாத்மாஜி நடத்திய பத்திரிகைகளையே வந்தடைந்தார். திரும்பவும் பத்திரிகைகளில் "எம். டி" என்ற கையொப்பத்துடன் வியாசங்கள் தொடர்ந்து வெளி வர வாரம்பித்தன, மஹாத்மாஜியின் கருத்தை அறிவதில் ஆசைகொண்டவர் இவர் எழுதிய வியாசங்களைக் கவனமாகப் படித்தனர்: கரைத்துக் குடித்தனர் என்றும் கூறலாம். மஹாத்மாவின் தத்துவமும் உபதேசமும் சாமான்ய மக்களுக்குப் புலப்படும்படி இவர் எழுதினார். சூத்ரத்திற்குப் பாஷ்யம் என்று புகழும்படி எழுதினார்: குறைகாண இடமில்லாதவாறு எழுதினார். மஹாத்மாவின் மனநிலையை எடுத்துரைப்பதில் மஹாதேவருக் கிருந்த மகிழ்ச்சி மதிப்பிடவியலாதது. ஜான்ஸன் என்ற பிரபல மேதாவிக்கு பாஸ்வெல் எப்படியோ, அப்படி நடந்து கொண்டார் தேஸாய்.

* * * * *

தேஸாய் காந்தியை விட்டுப் பிரியாமலே காலம் கழித்து வந்தார். மஹாத்மாவும் இவரை அநேக முக்கிய விஷயங்களில் ஈடுபடுத்தினார். சமரஸம் பேசவேண்டிய சந்தர்ப்பங்களில் அவர் இவரையே தமது தூதராக அனுப்பினார். இதனால் காலக்ரமத்தில் இவருக்குத் தனிப்பெருமை லபித்தது. மஹாத்மாவிடம் ஏதாவது காரியம் ஆகவேண்டுமானால் முதலில் மஹாதேவரையே பார்த்துப் பேசுவது வழக்கம். மஹாத்மாவின் மனதைச் சில சமயங்களில் மஹாதேவர் மாற்றியுள்ளார் என்றும் விஷயமறிந்தவர் தெரிவிக்கின்றனர். இவர் மஹாத்மாவைத் தமது குருவாகக்கொண்டிருந்தார்: அவர் அடிபணிந்து தொண்டாற்றுவதே தமது கடமை என்பதே இவர் உள்ளத்தில் ஊன்றியிருந்த கருத்தாகும். இவர் அந்த காலத்தில் ஒரு நண்பருக்கு எழுதிய கடிதத்தில் இந்த குரு-சிஷ்ய பாவத்தைபற்றிக் குறிப்பிட்டார்: "சிஷ்யனாக இருப்பதில் அதிக நன்மை இருக்கிறது: உயர்தரமான வினயம் உள்ளத்தில் உதித்து, ஒரு உத்தமமான ஆசாரியனை அடைந்து விட்டோம் என்ற உத்சாகமும் அவரது ஆக்ஞையை நிறைவேற்றி வைப்பதில் ஆர்வமும் நமக்கு இதனால் உண்டாகின்றனவல்லவா?" இந்த வாக்கியங்கள் நமக்கு இவரது உயர்வைப் புலப்படுத்துகின்றன!

* * * * *

1930-ம் ஆண்டில் மஹாத்மாஜி சத்யாக்ரஹ இயக்கத்தை ஆரம்பித்தார்: பல தலைவர்கள் சிறை சென்றனர். இந்த இயக்கத்திற்குத் தேவையான நிதியை வசூலிக்கும் நோக்கத்துடன் ஒரு சிறு பிரசுரத்தை மஹாதேவ் வெளியிட்டார். இதை வியாஜமாகக் கொண்டு இவரையும் சிறையில் அடைத்தனர். இதற்கப்புறம் இரண்டாவது வட்டமேஜை மஹாநாட்டில் கலந்துகொள்ள மஹாத்மாஜி லண்டன் சென்றார்: இந்தக் காரியதரிசியும் அவருடன் போனார்: மஹாத்மா தாய்நாடு திரும்பியதும் 1932-ல் கைது செய்யப்பட்டார்: எரவாடா சிறையில் அவர் இருந்தார். அப்போதுதான் அவர் பிரசித்தி பெற்ற உபவாஸத்தை ஆரம்பித்தார். சிறையில் மகாத்மாவுடன் இருந்து இவர் அவருக்கு சிச்ரூஷை புரிந்தார் 1930-ம் வருஷ சட்டமறுப்பு நடந்தபோது, சொற்பகாலம் காங்கிரஸ் மஹாசபையின் பொதுக்காரியதரிசியாகவும் இவர் இருந்தார். மஹாதேவ தேஸாய் தலைமை வகித்து நிற்பதில் சிரத்தை கொள்ளவில்லை: மகாத்மாவின் இஷ்டம் பூர்த்தி பெறச் செய்வதிலேயே தான் இவரது கவனம் இருந்தது, "யங் இந்தியா" "நவஜீவன்" பத்திரிகைகள் 1931-ல் நிறுத்தப்பட்டபின், மஹாத்மா "ஹரிஜன்" என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். 1932-ல் உதயமான இந்த பத்திரிகைக்கு மஹாதேவ தேஸாய் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இது நடு நடுவே தடைப்பட்ட போதிலும், இதற்குக் கிடைத்த ஆதரவு அபரிமிதமானது. தமது அந்தியகாலம் வரை இதற்குக் கட்டுரைகள் எழுதினார்: மஹாத்மாவின் பேட்டிகள், மஹாத்மாவின் கடிதங்கள், மஹாத்மாவின் வியாஸங்கள், இவற்றையெல்லாம் இவர் இதில் பூரணமாகப் பிரசுரித்தார். நாடு சுதந்திரம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் இவர் இதில் அநேக வியாஸங்களை வரைந்தார். இன்னும் பல பத்திரிகைகளிலும் இவர் எழுதினார். இவர் எழுதியவற்றைப் படிக்கும்போது, இவருக்கு ஓய்வில்லையா, ஒழிவில்லையா என்ற சந்தேகம் நமக்கு ஏற்படக் கூடும். ஓய்வு, ஒழிவின்றி தான் உழைத்தார்: இப்படி உழைத்து தேகசுகத்தைக் கெடுத்துக்கொண்டார்.

* * * * *

டில்லியில் ஸ்ரீ கே. ஸ்ரீநிவாஸன் தலைமையில் அகில இந்தியப் பத்திரிகாசிரியர் மஹாநாடு கூடியபோது, மஹாதேவ் தேஸாய், பத்திரிகை சுதந்திரத்தைப் பற்றிப் பேசினார். அகில இந்திய பத்திரிகாசிரியர்கள் நிரந்தரக் கமிட்டி மெம்பராகவும் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்: ஆனால் சில மாதங்களுக்குள் தமது ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்து விட்டார். பத்திரிகைகளுக்கும் ஸர்க்காருக்கும் யுத்த முயற்சி சம்பந்தமாக எவ்வித உறவு இருக்க வேண்டும் என்பது பற்றி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது: ஆசிரியர் கமிட்டிக் கூட்டத்தில் இந்த ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்டது: இக்கூட்டத்திற்கு தேஸாய் தாமதித்து வந்தார்: இவர் வருவதற்குள் விஷயாலோசனை முடிந்துவிட்டது: இதனால் இவருக்குக் கோபம் பிறந்தது. இந்த முடிவை ஆக்ஷேபித்து ராஜிநாமாச் செய்துவிட்டார். தலைவரின் காரியத்தைக் கண்டித்தும் எழுதினார். வாதப் பிரதிவாதமும் இதனால் விளைந்தது. இதைப்பற்றி இனிப் பிரஸ்தாபிப்பதில் பயனில்லை.

* * * * *

மஹாத்மாவின் காரியதரிசியாக இவர் கவனிக்க வேண்டிய அலுவல் அதிகமாயிருந்ததாயினும், இலக்கியத் துறையிலும் இவர் இறங்கினார். குஜராத்தி பாஷையில் நல்ல நிபுணர்; சமஸ்கிருதத்திலும் ப்ராவீண்யம் பெற்றவர்: ஆங்கிலத்திலும் இனிமையாக எழுதும் ஆற்றல் நிரம்பியவர்: மராத்தி. ஹிந்துஸ்தானி, வங்காளி, உருது, ப்ரெஞ்சு முதலிய பாஷைகளிலும் இவருக்கு விசேஷம் ஞானம் இருந்தது. தெளிவான நடையில், ரஸிக்கத்தக்க விதத்தில் இவர் எழுதியது எங்கும் கொண்டாடப்பட்டது. ஸபர்மதியிலும் சரி, ஸேவாக்ராமத்திலும் சரி, இவர் எழுதி எழுதிக் குவிக்க சளைக்கவில்லை. கவி ரவீந்திரரின் கீதங்கள் பலவற்றை இவர் காந்திஜிக்காக குஜராத்தியில் மொழி பெயர்த்தார்: குருதேவர் எழுதிய "சித்ரா" என்ற நாடகத்தையும் அநேக வருஷங்களுக்கு முன்பு இவர் தமது தாய் பாஷையில் வரைந்தார்: நவீனங்கள் எழுதுபவர்களுள் சிறந்து விளங்கிய டாக்டர் சரத் சந்திர சாட்டர்ஜியின் நூல்கள் பலவற்றையும் இதே மாதிரி மொழிபெயர்த்து உதவினார். பண்டித ஜவஹர்லால் நேரு ஆங்கிலத்தில் எழுதிய சுய சரிதத்தை குஜராத் வாசிகள் தங்கள் தாய் மொழியில் தற்போது படிப்பதற்கு தேஸாய் தான் காரணமானவர். மஹாத்மாஜி தமது "சத்ய சோதனை"யை குஜராத்தியில் தான் எழுதினார்; அதை தேஸாய் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பிரசுரித்தார். இப்போது நாட்டில் பெருமபாலோர், அப்பெரியாரது வாழ்க்கை விவரத்தையும் அனுபவ விசேஷங்களையும் அறிதற்கு மஹாதேவ் செய்த சிலாக்கியமான சேவையே சான்றாகும். ஆங்கிலத்திலும் இவர் சில புத்தகங்கள் எழுதினார். "திருவாங்கூர் ஆலயப்பிரவேசம்" குறிப்புக்குரியது, மஹாத்மா விருப்பப்பிரகாரம் 1935-ல் எல்லைப்புற காந்தி, அவரது சகோதரர் டாக்டர் கான்ஸாஹேப் ஆகியோர்களது சரித்திரத்தை அவர்களிடமிருந்து கேட்டறிந்து, வெகு அழகாக எழுதினார். இதற்கு ஆறு வருஷங்களுக்குப் பிறகு இவர் எழுதிய காங்கிரஸ் மஹா சபைத் தலைவர் மௌலானா ஆஸாத்தின் சரிதமும் வெளிவந்தது. ஹிந்து-முஸ்லிம் பிரச்னையைப்பற்றி இப்புத்தகத்தில் இவர் எழுதியிருக்கும் விஷயங்கள் கவனத்துடன் படிக்கத்தக்கவை,

* * * * *

மஹாத்மாவுடன் ஏற்பட்ட தொடர்பும், பல தடவைகள் வாய்த்த சிறைவாசமும் இவரையும் ஸ்ரீமத் பகவத் கீதையில் ஈடுபடச் செய்தன: கீதா பாராயணத்தில் பக்தி சிரத்தை பிறந்தது: காலக்ரமத்தில் உபதேசத்தைப் பின்பற்றவும் முற்பட்டார்: கடமையைச் செய்து முடிப்பதுதான் இஹதர்மம் என்பதை இவர் கண்டார்: இஹத்தில் இருந்துகொண்டே பரத்தைப்பற்றிக் கொள்ளலாம் என்ற கருத்து இவருக்கு ஏற்பட்டுவிட்டது. சொந்தக்குடும்பத்தைத் துறக்கவில்லை: ஆனால் பிணைப்புகிடையாது. தேசசேவகர்களுக்குக் குலமும் குடும்பமும் கிடையாது என்றே இவர் கருதினார். சமீபத்தில் கீதோபதேசத்தைப்பற்றி ஒரு புத்தகத்தை இவர் எழுதி முடித்தார். காகிதத் தட்டுக் காரணமாக அதை அச்சிட இயலவில்லை. இவ்விதம் யந்திரம் போல் இவர் உழைத்து வந்ததால் இவரது தேகசுகம் சீர்குலைந்தது: ரத்தக் கொதிப்பு அடிக்கடி ஏற்பட்டு வந்தது: இவ்வருஷம் பிப்ரவரி மாதம் இவரது தேகநிலை கவலைக்கிடமளித்தது: ஓய்வு எடுத்துக்கொள்ளும்படி பலர் வற்புறுத்தினர். இவரை நாஸிக்குக்கு அழைத்துச் செல்ல ஸ்ரீ பிர்லா விரும்பினார். ஆனால் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகும் வழியில் இவரது தேக ஸ்திதி மிகவும் கேவலமாகிவிட்டது. மஹாத்மாவுக்கும் அதிக கவலை உண்டாகிவிட்டது. அன்றைய தினம் தமது மௌன வ்ரதத்தையும் மஹாத்மா மீறி விட்டார்.

* * * * *

தாம் தெய்வம்போல் தொழுத தலைவர் துவக்கிய இயக்கத்தைப்பற்றி தேஸாய் கூறியவை இங்கு குறிப்பிடல் பொருந்தும். 1935-ம் ஆண்டில் இவர் பின் வருமாறு எழுதினார்:—"சென்ற பதினைந்தாண்டுகளாக இந்திய சுதந்திரத்திற்காக நடந்துவரும் போராட்டத்தைப் பலவிதங்களிலும் பூமியின் அதிர்ச்சிக்கு ஒப்பிடலாம். இது மிகவும் சாத்வீகமான விதத்தில் நடப்பதால், பூமி அதிருச்சியின் போது விளையும் சில விப்ரீதக் கோளாறுகள் இதில் இல்லை. எப்படி பூமி அதிர்ச்சி பூப்பிரதேசத்தைப் பாதிக்கிறதோ, அதே மாதிரி தேசமக்களையும் இது கலக்கியிருக்கிறது. அதிகாரமும் சலுகையும் நிறைந்த பீடங்களும், பிற்போக்கான கருத்துகளும் தகர்க்கப்பட்டுள்ளன; தரைமட்டமாக்கப்பட்டன என்றும் கூறலாம். எப்படி பூமி அதிர்ச்சியால் பூமியின் அமைப்பு மாறி விடுகிறதோ, அதே மாதிரி அரசியல் அமைப்பும் மாறியிருக்கின்றது. இருபது வருஷங்களுக்கு முன்பு ஜல்லியன்வாலாபாக், பர்தோலி, சௌரி சௌரா முதலியவற்றைப் பற்றி யாருக்குத் தெரியும்? சீராளா பேராளா, வேதாரண்யம், போர்ஸாத் முதலியவற்றையும் அறிந்திருந்தவர் யார்? தண்டி, தர்ஸனா, வதலா, முதலிய இடங்களைப்பற்றி சுற்றி இருந்தவர்களைத் தவிர, வேறு ஒருவருக்கும் தெரியாது."

* * * * *

காந்திஜியின் உட்கருத்தை உண்மையாய் அறிந்தவர்கள் வெகு சிலர்தான். மஹாதேவ் தேஸாய், விநோபா பாவே, கிஷோரிலால் மஷ்ரூவாலா, காகாஸாஹேப் காலேல்கர், ராஜகோபாலாசாரியார்—இவர்கள்தான் அப்பெரியாரின் மனதைப் பூரணமாக அறிவர், ஆனால் இவர்களுள் மஹாதேவருக்குத்தான் முதல் ஸ்தானம் உண்டு. 1940-ம் வருஷத்தில் இவர் எழுதிய சில வாக்கியங்களை இப்போது படித்தால், உத்தமரின் உள்ளத்தை மட்டுமின்றி நாட்டின் நிலையையும் இவர் அறிந்திருந்தது தெரியவரும்: "காங்கிரஸும் காந்திஜியும் பலாத்காரமற்ற முறையில் போராட்டத்தை நடத்த முயலுகின்றனர். ஸத்யாக்ரஹப்படையின் தலைமையைத் தாமாகவே மேற்கொண்டிருக்கும் மஹாத்மா சட்டமறுப்பின்றியே கூடியவரை தம் காரியத்தை நடத்த முயற்சிக்கிறார்: அது கட்டுக்கடங்காமல் போகும்போதும், அதனால் பிரிட்டிஷ் ஸர்க்காருக்கு சங்கடம் விளையக்கூடாது என்பதே அவர் எண்ணம். ஆனால் காரியம் மிஞ்சிவிடக்கூடும்: வெள்ளத்தைத் தடுக்க அவராலும் இயலாமற் போகக்கூடும்: அப்படியானால் இந்தியாவையும் பிரிட்டனையும் பகவான்தான் காப்பாற்ற வேண்டும்." மஹாத்மா கொண்டிருந்த நல்லெண்ணத்தை மஹாதேவரைக் காட்டிலும் திறமையாக எவர்தான் எடுத்துக் கூறமுடியும்? தமது தியாகத்தினாலும் ஸேவாபக்குவத்தினாலும், சிச்ரூஷையின் சிறப்பினாலும் உன்னதபுருஷரின் உயர்மதிப்பைப் பெற்றதே இவரது பெருமைக்குப் போதும்! மஹாத்மாவுக்கு திருப்தி ஏற்படும் விதத்தில் நடந்து கொள்வது சுலபமல்ல: அவரது ஒழுக்க விதிகளைப் பின்பற்றுவதும் எளிதல்ல; அவரது கொள்கைகளை சாமான்யர்கள் கடைப் பிடித்துத் தேறிவிட முடியாது. மஹாதேவ தேஸாய் எதையும் சாதிக்க வல்லவர். சாதாரண புருஷராக அவரைக் கருதக்கூடாது. ராஜாஜி கூறியதுபோல், மஹாத்மாஜியின் மற்றொரு சரீரமாகவே அவர் சோபித்தார். மஹாத்மாஜியின் காரியதரிசி என்ற முறையிலேயே அவருக்குப் பெருமை வந்ததாயினும், சொந்த ஹோதாவிலும் தமக்கு வாய்த்த பெருமைக்குப் பங்கமில்லாதபடி வாழ்ந்தார். நாட்டின் அத்ருஷ்டமே இருவரையும் ஒன்று சேர்த்தது: தியாகமும் தன்னலமின்மையும் தேசத்தில் தழைத்தோங்கவே, இவ்விருவரையும் விதி பிணைத்தது போலும்! மஹாத்மா வழி காட்டினார். மஹாதேவர் அதை அநுசரித்தார். பிந்தியவரது பெருமையும் இதனால் பிரகாசிக்கிறதல்லவா? மேலும் பலர் பின்பற்றலாம் என்பதையும் அறிவுறுத்துகிறதல்லவா?

ஸ்டாலின் கிராடுக்கு ஆபத்து

ஜெர்மன் படைகள் பியாடி கார்ஸ்க் என்ற ஸ்தலத்தை ஆக்கிரமித்துக்கொண்டு விட்டதாக சோவியத் விளம்பர அதிகாரியான மிஸ்டர் யாரோஸ்லாஸ்கி ரேடியோ மூலம் அறிவிக்கிறார்.

பியாடி கார்ஸ்க் வடகாகஸஸ் மலையடிவாரத்தில் இருக்கிறது.

அநகருக்குத் தென்கிழக்கே போர் நடப்பதாக சமீபத்தில் வெளியான சோவியத் அறிக்கைகள் தெரிவித்தன.

ஜெர்மன் அந்நிய இலாகாவைச் சேர்ந்த ஒரு உயர்தர அதிகாரி சென்ற 24-ம்தேதியன்று அந்நியப் பத்திரிகைப் பிரதிநிதிகளை வரவழைத்து 'காலாட் துருப்புகளும், வேறு படைகளும் டான் வளைவைக் கடந்துவிட்டன என்ற விஷயத்தில் முக்கியமான கவனம் செலுத்த வேண்டும். ஸ்டாலின் கிராடைக் கைப்பற்ற இப்போது ஒரு பெரிய இறுதியான யுத்தம் ஆரம்பமாகிவிட்டது' என்று அறிவித்தார்.

அட்டைப் படம்

சென்னை சர்வகலாசாலை உப அத்யக்ஷகராக நியமிக்கப்பட்டிருக்கும் திவான் பஹதூர் டாக்டர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியார். இவர் காங்கிரஸ் சர்க்காரால் சென்னை மெடிகல் காலேஜின் முதல் இந்தியத் தலைவராக நியமிக்கப்பட்டார். கல்வி விஷயத்தில் அநேக வருஷங்களாக சிரத்தை கொண்டவர்: சர்வகலாசாலையுடன் பல ஆண்டுகளாக் நெருங்கிய தொடர்பு இவருக்கு உண்டு.

சித்திரமும் சிருங்காரமும்

மிக்கி ரூனி

"ஹாலிவுட்டில் மிகவும் அபாயகரமான மனிதர் மிக்கி ரூனி ஒருவர் தான்" என்ருர் ஒரு நடிகை ஒரு சமயம்.

இந்தக் கூற்றுக்கு நிச்சயம் ஆதாரம் இருந்திருக்க வேண்டும். ஆவாகார்டினர் என்ற பெண்மணியை மணப்பதற்கு முன் மிக்கி பதினேரு நடிகைகளுடன் உறவாடி வந்தார்: நெருங்கிய நட்பும் கொண்டிருந்தார். விவாக தேதி நிச்சயமான பின்புதான் இத்தொடர்பு விலகியது. ஆனல் இதில் குறிப்புக்குரிய விஷயம் ஒன்று இருக்கிறது; அதாவது மிக்கியுடன் கூடிப் பழகிய ஒவ்வொரு நடிகையும் அவரைவிட ஆறு அங்குலம் அதிக உயரமாகவே இருந்தனர். மிக்கியின் உயரம் ஐந்தடி மூன்று அங்குலங்கள்தான்? இவர்களுள் ஒருவரான லிண்டா டார்னெல் மிக்கி தம்மை விட குள்ளமாகக் காணப்படுகிருர் என்பதைக் கண்டுகொண்டு, மெல்லிய பாதம் கொண்ட செருப்பை உபயோகிக்கலானுர். ஹாலிவுட்டில் இருந்த மற்றவர்கள் எல்லாரும் இதைப் பார்த்து நகைத்தனர்: பரிகாசமும் செய்தனர். யார் எது செய்தாலும் அதனல் மிக்கி பாதிக்கப்படுவதில்லை என்பதே ஹாலிவுட் நடிகர்களது ஏகோபித்த அபிப்பிராயமாகும்.

சிறு பிராயம்முதற்கொண்டே மிக்கிக்கு தான் அதிக உயரமாக வளர வேண்டும் என்ற ஆசை உண்டு: இதற்காக மிக்கி செய்த அப்யாசங்கள் அநேகம்: கட்டாந்தரையில் படுத்துக்கூட பார்த்ததுண்டு: பத்திரிகைகளில் "சீக்கிரம் உயருவதற்கு வழி" என்ற விளம்பரத்தைப்பார்த்து விட்டால் உடனே விளம்பரம் பண்ணுபவருக்கு மிக்கி கடிதம் எழுதி அவரது உதவியை நாடுவது வழக்கம். என்ன செய்தும் எதிர்பார்த்த பலன் ஏற்படவில்லை. மிக்கி உயரவில்லையாயினும் தேக திடம் மிகுந்தவரானுர். தமது வலிமை காரணமாக மிக்கி பல தடவைகள் இதரர்களைக் கடுமையாகத் தாக்கியதுண்டு: சிறு பிராயத்திலேயே மிக்கி இவ்விதம் செய்யவாரம்பித்தார்.

தன்னைப்பற்றிய தாழ்வான உணர்ச்சி மிக்கியின் உள்ளத்திலிருந்து மறையும்படிச் செய்ய உதவியவர் மூவர்: நெபோலியன், ஜெனரல் ஷெரிடன், மேயர் லா கார்டியா இந்த வீரர்களைப் பின்பற்றினுர்; தன்னம்பிக்கையைப் பெற்ருர். அவர்கள் போல் வாழவே தம்மையும் கடவுள் சிருஷ்டித்தார் என்பது அவரது நம்பிக்கை: அந்த மூன்று தீரர்களும் குள்ளமானவர்கள் அல்லவா? இதர விஷயங்களில் எல்லாம் தமக்கு அதிக திறமை இருக்கையில், உயரக்குறைவு மட்டும் ஏன் தம்மைப்பாதிக்க வேண்டும் என்பதே மிக்கியின் யோசனை. இதற்கப்புறம் மேலே குறிப்பிடப்பட்ட பெரியார்கள் மாதிரி தாமும் நடக்க வேண்டும் என்ற முடிவுக்கு மிக்கி வந்தார். குள்ளமானவர்களும், திட மனதுடனும் தன்னம்பிக்கையுடனும் தைரியத்துடனும் நடந்து கொண்டால் அவர்கள் சாதிக்க முடியாததே இருக்க முடியாது என்பதை மிக்கி காலக்ரமத்தில் அறிந்து கொண்டார். உடுப்பு முதலிய பல காரியங்களில் லா கார்டியா மாதிரி நடப்பது; விளையாட்டு முதலியவற்றில் ஷெரிடன் போல் திறமை காட்டுவது: ஸ்திரீகளுடன் பழகும் விஷயத்தில் நெபோலியனைப் போல் கம்பீரமாகவும் மதிப்பாகவும் நடந்துகொள்வது இவை தான் மிக்கி அனுஷ்டித்த மார்க்கங்கள்.

முதல்தர நடிகர் என்று மிக்கியை இரண்டு வருஷத்திற்குத் தொடர்ந்தாற் போலவே சினிமாக்காரர்கள் பாராட்டினர். மிக்கி நடிக்கும் கம்பெனியாருக்கு இவர் மூலம் அதிக வருமானம் கிடைத்து வருகிறது. க்ளார்க் கேபிள், க்ரெடா கார்போ, ஸ்பென்ஸர் ட்ரேஸி ஆகிய மூவர் சேர்ந்து நடித்தாலும் இவர் ஒருவர் நடிக்கும்போது கிடைக்கும் தொகை கிட்டாது. இவரது தோற்றமே இவரது படத்தைப் பார்க்க அநேகர் குவிந்து வருவதற்குக் காரணம். மிக்கி சிறுவராயிருந்தகாலத்தில் இவரது கார்டியன்கள் சேகரித்து வைத்த பணம் பல லக்ஷம் டாலர்கள்!

மிக்கிக்கு ஒரு பெரிய தோட்டம் இருக்கிறது: இதில் வேட்டையாட வசதியுண்டு. இது தவிர பெரிய வீடும் இருக்கிறது. ஒரு பந்தயக் குதிரையையும் வைத்துக்கொண்டிருக்கிருர். கால் பந்தாடும் கோஷ்டி ஒன்றும் இவர் கீழ் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறது. இரண்டு மோட்டார் கார்கள் இவரிடம் இருக்கின்றன. இவர் வைத்திருக்கும் உடுப்பின் எண் மிகவும் அதிகம். க்ளார்க் கேபிளிடம் கூட இவ்வளவு கிடையாது. சிறிது காலத்திற்கப்புறம் மிக்கியுடன் போட்டியிடுவதை க்ளார்க் கேபிள் நிறுத்திக் கொண்டார்.

WASH BASINS



அதிக வலுவு, நீடித்துழைக்கும் குணங்களுக்கு பர்ன் வெண்ணிறமான பேஸின்கள் புகழ்பெற்று விட்டன.

சுலபமான அமைப்பு முறை, அழகிய தோற்றம். உடையாது. விரிசல் காணுது என்பதற்கு உத்திரவாதம். சுத்தம் செய்யவும், சுத்தமாகவைத்திருக்கவும் சுலபமானது.

இந்தியாவில் இந்திய ஊழியர்களைக்கொண்டு, இந்திய மூலதனத்தால் தயாரிக்கப்படுகின்றது. பர்ன் கை அலம்பும் பேஸின்கள் மிதமான விலையுள்ளவை. இறக்குமதி செய்யப்படும் சிறந்தவற்றின் ரகத்திற்கு இணையானது.

— விவரமான புத்தகம் கேட்போருக்கு இலவசம். —

BURN & CO., LTD.
ESTABLISHED 1781
12, MISSION ROW, CALCUTTA.
WORKS AT RANIGANJ AND JUBBULPORE

BP-8(A)

SAVE FOR VICTORY
BRITISH WAR SAVINGS MOVEMENT
ASK YOUR BANK

பர்ன் & கம்பெனி லிமிடெட்,
ஸ்தாபிதம் : 1781
12, மிஷன்ரோ, கல்கத்தா.
தொழிற்சாலை : - ராணிகஞ்சு & ஜபல்பூர்.
சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:—
பம்பாய் கம்பெனி லிமிடெட், த. பெ. நெ. 109, மதராஸ்.

சிறுவர் கதை

★

செண்பகத் தொட்டி

★

வி. ஸீதா

பல ஆண்டுகளுக்கு முன் ஜோதிபுரியில் பணக்கார சகோதரர்கள் மூவர் இருந்தனர். அவர்கள் தாய் தந்தையற்றவர்கள். அவர்களுக்கு ரதி என்ற தங்கை ஒருவள் மட்டும் இருந்தாள். அவள் பெயருக்கேற்ற ரூபவதி. நல்ல குணசாலி. அவர்கள் தந்தையார் பணக்கார வியாபாரியானதால் அதிக ஆஸ்தி வைத்திருந்தார். அவர் இறக்கும்போது பெண் ரதி விவாகமாகாமல் இருந்தபடியால் அவளுக்கும் விவாக செலவிற்காகத் தன் ஆஸ்தியில் ஒரு பாகம் வைத்திருந்தார்.

தங்கள் வியாபாரத்தை மேல் பார்வை பார்ப்பதற்காக திலக் என்ற ஒரு அழகிய வாலிபனைக் குமாஸ்தாவாக நியமித்திருந்தனர். திலக் வியாபார விஷயமாக அடிக்கடி ரதியைப் பார்க்க நேர்ந்தது. இருவரும் காதல் கொண்டனர். இது மற்றவர்களுக்குத் தெரியாது.

எஜமானர்கள் நாடகத்திற்குச் சென்றிருப்பதாக அறிந்த திலக், ரதியைத் தேடிக் கொண்டு தோட்டத்திற்குச் சென்ருன்.

சிறிது நேரத்திற்குள் வீடு திரும்பினுன். தோட்டத்தில் ரதி திலக்குடன் சம்பாஷித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். பிறகு சந்தடி செய்யாமல் அதை விட்டு அகன்ருன். இருட்டின பின் திலக் வீடு திரும்பினுன். மூத்த சகோதரன் மற்ற இருவரைச் சந்தித்து விஷயத்தைக் கூறினுன். அவர்கள் வீட்டிற்குத் திரும்பிய போது ரதி தூங்கிவிட்டபடியால் அவர்கள் சாப்பிட்டுவிட்டு யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தனர். ரதி விவாகம் செய்துகொள்வதில் அவர்களுக்கு விருப்பமில்லை. அதிலும் கேவலம் ஒரு குமாஸ்தா தனக்கு மாப்பிள்ளையாக வந்து அவ்வளவு ஆஸ்திக்கும் உரியவன் ஆவதில் அவர்களுக்குப் பொருமை. ஆதலால் அவர்கள் அவனை எப்படியாவது கொன்றுவிட வேண்டுமென்று ஒரு முடிவுக்கு வந்தனர்.

மறுநாள் திலகை வழக்கம்போல் தங்களுடன் வேட்டைக்கு அழைத்துச் சென்று அவனை அங்கு ஒரு மரத்தடியில் வெட்டிப் புதைத்துவிட்டு வீடு திரும்பினர். சில தினங்கள் வரையில் திலகைக் காணுததால் ரதி தன் சகோதரர்களை திலக் எங்கே என்று விசாரித்தாள். அவள் சகோதரர்கள் பொய் பேசிப் பார்த்தனர். அதை இவள் நம்பவில்லை. சந்தேகம் அதிகரித்து மன வேதனையுற்ருள்.

ஒரு நாள் இரவு ரதியின் நித்திரையில் திலகின் ஆவி தோன்றி உண்மையைக் கூறிவிட்டது. நித்திரையிலிருந்து எழுந்த ரதி தன் காதலனுக்குற்ற கதியை நினைத்து வருந்தினுள். விக்கி விக்கி அழுதாள்; மறு நாள் இரவு தன் தோழியுடன் திலகைப் புதைத்திருக்கும் காட்டிற்குச் சென்று ஆவி கூறியபடி திலகின் பிணத்தை எடுத்து அதன் தலையை மட்டும் வெட்டி எடுத்து ஒரு துணியில் சுற்றி, முண்டத்தைப் புதைத்துவிட்டு வீடு திரும்பினுள். அன்றிரவே ரதி தன் அறையில் ஒரு மண் தொட்டியில் திலகின் தலையைப் புதைத்துவிட்டு அதில் ஒரு செண்பகச் செடியை நட்டாள். தினமும் காலையில் அதன் அருகில் சென்று திலகைப்பற்றி நினைத்துக் கண்ணீர் விடுவாள். அக் கண்ணீரே அச்செண்பகச் செடியை வளர்த்து வந்தது.

ரதிக்குத் தெரியாமல் தொட்டியைத் திருடி அதில் என்ன இருக்கிறதென்று அவளது சகோதரர் பார்க்க, திலகின் தலையைக்கண்டு திகைத்து தொட்டியை உடைத்து விட்டு தலையை வேருெரு இடத்தில் புதைத்து விட்டனர்.

மறு நாள் காலை ரதி தன் தொட்டியைப் பார்க்கக் காணுததால் சகோதரர்கள் மீது ஐயங்கொண்டு அவர்களை வினவினுள். அதற்கு அவர்கள் தங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று கூறிவிட்டனர். ஆனல் ரதி அதை நம்பவில்லை. ரதி பிதற்ற ஆரம்பித்தாள்... எங்கு உண்மை வெளிப்பட்டு விடுமோ என்று பயந்து அவள் சகோதரர்கள் அவ்வூரை விட்டு ஓடிவிட்டனர். ரதி தன் சகோதரர்களைக் காணுததால் அவர்கள் தான் எடுத்து மறைத்து விட்டார்கள் என்று அறிந்து கொண்டாள். வேறு வழியில்லாமல் ரதி தற்கொலை புரிந்து கொண்டாள்.

சலவைக்குச் சிறந்தது.

TREBLE CLOVER SOAP
REGD.
PHONE: 3526. GRAMS: RABBIT
PALACE SOAP WORKS,
(PROPRS. M.R.C & SONS)
9. ANNA PILLAI ST, G.T. MADRAS.

இன்றைக்கும் உங்கள்
இன்ஷ்யூரன்ஸ் மிக அவசியமே!

யுத்த கால நிலைமையை முன்னிட்டு எவ்வளவோ தற்காப்புகள் அத்யாவச்யமாக ஏற்பட்டு விட்டன. ஆனல் வாழ்க்கையில் விபத்துக்களினின்றும் பாதுகாப்பளிக்கும் இன்ஷ்யூரன்ஸ்தான் தற்சமயம் பிரதானமாக இருக்கிறது. இன்று இன்ஷ்யூரன்ஸிற்குள்ள அவசியம் என்றுமே இருந்ததில்லை.

யுனைடெட் இந்தியாவில் இப்பொழுதே ஒரு பாலிஸி எடுத்துக்கொண்டால் அது உங்களுக்கு அவசியமான பத்திரமும் பாதுகாப்பும் அளிக்கும். இந்தியாவில் ஸிவிலியன்களுக்கு வழங்கப்படும் எல்லா பாலிஸிகளுக்கும் பிரத்யேக சார்ஜ் ஏதுமின்றி யுத்த அபாய பாதுகாப்பு அளிக்கப்படும்.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யூரன்ஸ கம்பெனி லிமிடெட்;
'யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்'
எஸ்ப்ளனேட் : : : மதராஸ்.
இந்தியாவெங்கும் கிளைகளும் ஏஜன்ஸிகளும் உண்டு.
டிரஸ்டி : மதராஸ் கவர்ன்மெண்ட் அபீஷியல் டிரஸ்டி.

FOR FIRE & MOTOR CAR INSURANCE
CONSULT
UNITED INDIA FIRE & GENERAL INSURANCE Co, Ltd.,
UNITED INDIA LIFE BUILDING
Esplanade MADRAS.
Telephone 4241 P. O. Box 1207 Grams : UNIGEN.